# பச்சிலை

இதழ் - 05

தேசிய வாசிப்பு மாத சிறப்பு மலர்
2019



வெளியீடு:
பச்சிலை மலர்க்குழு
புலோப்பளை பொதுநூலகம்
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை – பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலை

## இதழ் –05

## தேசிய வாசிப்பு மாத சிறப்பு மலர்

## - 2019 -

**வெளியீடு:**
பச்சிலை மலர்க்குழு
புலோப்பளை பொதுநூலகம்
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை – பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | – | பச்சிலை |
| இதழ் | – | 5 |
| பக்கங்கள் | – | XIV – 79 |
| அச்சுப்பதிப்பு | – | சக்தி பதிப்பகம் A9வீதி, மீசாலை. |
| மலர் ஆசிரியர் | – | திரு. சி.புவனராசா |
| வெளியீடு | – | "பச்சிலை மலர்க்குழு" புலோப்பளை பொதுநூலகம் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை |
| தொலைபேசி இல | – | 024 324 3544 |
| மின்னஞ்சல் | – | pallaips@gmail.com |
| கடதாசி | – | 70gsm |
| பக்க அளவு | – | B5 |
| விலை | – | 350/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சிலை மலர்க்குழு



நிற்பவர்கள் இடமிருந்து வலமாக: திருமதி. சு.ரேவதி, திருமதி. ப.சுபாஜினி,திருமதி.அ.தர்மகுலசிங்கம், திருமதி.கோ.இராஜபாஸ்கரன்,திரு.செ.கஜானன்,திரு.ந.நிரோசன்,திரு.சி.புவனராசா,திரு.பொ.கந்தசாமி, திரு.ஆ.பாலசிங்கம்,திருமதி.பி.உமாதேவி,திருமதி.இ.ஸ்ரீஸ்கந்தராசா,திருமதி.உ.கிருஷ்ணதீபா,
இருப்பவர்கள் இடமிருந்து வலமாக: திரு.வே.தங்கராசா,திருமதி.த.தர்சினி,திரு.அ.கேதீஸ்வரன், திரு.சு.சுரேன்,திரு.மு.கஜன்

## பிரதேச சபை உறுப்பினர்கள்



நிற்பவர்கள் இடமிருந்து வலம்: கௌரவ உறுப்பினர்களான த.ரமேஸ்,வே.கோகுலராஜ்,வ.டிசாந்தன், த.சுகந்தி,ஈ.டயாளினி,தி.பிறமிளா,கி.வீரவாகுதேவர்,த.துர்சோதனன் , வே.வசந்தரூபன்
இருப்பவர்கள் இடமிருந்து வலம்:கௌரவ உறுப்பினர்.க.அருள்ச்செல்வி,கௌரவ உப தவிசாளர் மு.கஜன் கௌரவ தவிசாளர் சு.சுரேன், கௌரவ உறுப்பினர்.நா.நகுலேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமை அலுவலக உத்தியோகத்தர்கள்



## புலோப்பளை உபஅலுவலக உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்ளிப்பற்று உபஅலுவலக உத்தியோகத்தர்கள்



## முகமாலை உபஅலுவலக உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சிலை மலர்க்குழு

தலைவர் - **திரு. அ. கேதீஸ்வரன்**
(உதவித் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி)

செயலாளர் - **செல்வி. செ. உமாதேவி**
(நூலகர், புலோப்பளை பொதுநூலகம்)

பொருளாளர் - **திரு. ஆ. பாலசிங்கம்**
(தலைவர், இத்தாவில் கமக்கார அமைப்பு)

மலராசிரியர் - **திரு. சி. புவனராசா**
(ஓய்வுநிலை நிர்வாக கிராம உத்தியோகத்தர், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம்)

## செயற்குழு உறுப்பினர்கள்

**கௌரவ சு. சுரேன்** (தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை)

**திருமதி. த. தர்சினி** (செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை)

**திருமதி. உ. கிருஷ்ணதீபா** (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரா.உ.உ.ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி)

**திருமதி. கோ. இராஜபாஸ்கரன்** (பிரதம முகாமைத்துவ உதவியாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை)

**திருமதி. சு. ரேவதி** (பொறுப்பதிகாரி, உப அலுவலகம், புலோப்பளை)

**திரு. செ. கஜானன்** (நில அளவை உதவியாளர், மாவட்ட நிலஅளவைத் திணைக்களம், கிளிநொச்சி)

**திருமதி. இ. சிறிஸ்கந்தராசா** (ஆசிரியர், கிளி/ தர்மக்கேணி அ.த.க.பாடசாலை)

**திருமதி. அ. தர்மகுலசிங்கம்** (இளைப்பாறிய நூலகர்)

**திரு. ந. நிரோசன்** (முல்லையடி, பளை.)

**திரு. பொ. கந்தசாமி** (தலைவர் - தம்பகாமம் சனசமூக நிலையம்)

**திருமதி. சு. பத்மலகீந்திரன்** (அபிவிருத்தி உத்தியோகத்தர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை)

**திரு. வே. தங்கராசா** (பொருளாளர், வளர்மதி சனசமூக நிலையம், மாசார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர்கள் விபரம்

| பெயர் | பதவி | தொலைபேசி இல. |
|---|---|---|
| 01. கௌரவ சுப்பிரமணியம் சுரேன் | தவிசாளர் | 0773932980 |
| 02. கௌரவ முத்துக்குமார் கஜன் | உபதவிசாளர் | 0779432778 |
| 03. கௌரவ கிருஸ்ணன் வீரவாகுதேவர் | உறுப்பினர் | 0776366771 |
| 04. கௌரவ கணபதிப்பிள்ளை துர்சோதனன் | உறுப்பினர் | 0775537696 |
| 05. கௌரவ வரதராசா டிசாந்தன் | உறுப்பினர் | 0766543582 |
| 06. கௌரவ வேல்முருகு கோகுலறாஜ் | உறுப்பினர் | 0775301865 |
| 07. கௌரவ அருட்செல்வி கனகராசா | உறுப்பினர் | 0774423703 |
| 08. கௌரவ தவராசா றமேஸ் | உறுப்பினர் | 0777722761 |
| 09. கௌரவ ஈஸ்வரன் டயாளினி | உறுப்பினர் | 0770599040 |
| 10. கௌரவ தயானந்தகுமார் சுகந்தி | உறுப்பினர் | 0776999101 |
| 11. கௌரவ தியோப்பிள்ளை பிரமிளா | உறுப்பினர் | 0773810260 |
| 12. கௌரவ வேலுப்பிள்ளை வசந்தரூபன் | உறுப்பினர் | 0772487618 |
| 13. கௌரவ நாகராசா நகுலேஸ்வரன் | உறுப்பினர் | 0770670456 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ☞ பச்சிலைப் பதிவுகள்


| விடயம் | பக்கங்கள் |
| --- | --- |
| 1) வாழ்த்துச் செய்திகள் | VI - XIII |
| 2) இதழாசிரியரின் பகிர்வு | XIV |
| 3) பச்சிலைப்பள்ளியின் அபிவிருத்தியில் கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைத்துறைசார் பங்குபற்றுதல் - கட்டுரையாக்கம், அ. கேதீஸ்வரன் | 01 - 04 |
| 4) அழகு மிளிரும் எங்கள் தேசம் - கவிதை, எழில் | 05 - 07 |
| 5) இடப்பெயர்வின்பின் மீள்குடியேறிய பச்சிலைப்பள்ளி மக்களின் இன்றைய நிலையும் எதிர்காலமும் - கட்டுரையாக்கம், சி.புவனராசா | 08 - 12 |
| 6) சுவாசியுங்கள் - கவிதை, செ.கஜானன் | 13 - 13 |
| 7) பட்டகடன் - சிறுகதை, உமா கணேசநாதன் | 14 - 18 |
| 8) ஆலயம் செல்வதைவிட நூலகம் செல்வது சிறப்பு கட்டுரையாக்கம், ந.நிரோசன் | 19 - 21 |
| 9) பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இசைக்கலை கட்டுரையாக்கம், சி.ஜெயதர்சினி | 22 - 24 |
| 10. பச்சிலைப்பள்ளியின் புகழ்பூத்த ஆயுள்வேத வைத்தியர் மாசார் மணியண்ணையுடனான நேர்காணல், சி.இந்துமதி | 25 - 27 |
| 11. வாசிப்போம் நேசிப்போம் - கவிதை, ப.பதுசிகா | 28 - 28 |
| 12. இயற்கை அன்னை - கவிதை, வ.அபிலாசா | 29 - 29 |
| 13. மண் மாதா - கவிதை, றே.லூர்தகவி | 30 - 30 |
| 14. நூலகம் - கவிதை, மு.பவனிதன் | 31 - 31 |
| 15. வாழும் வரை வாசி - சிறுகதை, பா.பாலாஜினி | 32 - 34 |
| 16. பிரதேச சபைகள் பற்றிய ஓர் அறிமுகம் - கட்டுரையாக்கம், பா.தயாபரன் | 35 - 38 |
| 17. பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் காணப்படும் முக்கிய சில மூலிகைகளும் அவற்றின் பயன்களும் - கட்டுரையாக்கம், பு.ஸ்ரீகணேசன் | 39 - 43 |
| 18. உண்மைக் காதல் - சிறுகதை, செ.நாதன் | 44 - 48 |
| 19. போதைக்கு அடிமையாதல் - கவிதை, ப.ஸிரேஜா | 49 - 50 |
| 20. வெற்றியாளர்கள் நாம் - கட்டுரையாக்கம், ந.பிரசாளினி | 51 - 52 |
| 21. பரிமாணத்தின் பரிமாணங்கள் - கட்டுரையாக்கம், நே.நேருகா | 53 - 55 |
| 22. கிராமத்தில் ஒரு நாள் - சிறுகதை, சு.பகீர்தனன் | 56 - 57 |
| 23. சேவை வழங்கல் - கவிதை, ப.சுபாஜினி | 58 - 58 |
| 24. உள்ளம் பெருங்கோயில் - குறுங்கதை, த.கங்கைஆத்மன் | 59 - 60 |
| 25. புற்றுநோய் - கட்டுரையாக்கம், பா.பாலாஜினி | 61 - 64 |
| 25. வாசிப்பு மனிதனை பூரணமாக்குகின்றது - கட்டுரையாக்கம், மு.கீர்த்திகா | 65 - 66 |
| 27. வாசிப்பின் மகத்துவம் - கவிதை, ச.லோஜனா | 67 - 69 |
| 28. விட்டில் பூச்சிகள் - சிறுகதை, மு.கீத்தா | 70 - 72 |
| 29. காலத்தின் மதிப்பறிதல் - கட்டுரையாக்கம், ச.சர்மிலா | 73 - 74 |
| 30. வாசிப்பும் நூலகங்களின் பங்களிப்பும் - கட்டுரையாக்கம், வி.கவினயா | 75 - 75 |
| 31. நீத்தல் விண்ணப்பத்தில் நெருக்கடிக்குள்ளாகும் மணிவாசகரது நிலை - கட்டுரையாக்கம், ம.தேவகி | 76 - 79 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

**"பச்சிலை" வெளியீடு சிறக்கட்டும்**

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பச்சிலைப்பள்ளி பொதுநூலகம் ஐந்தாவது தடவையாக வெளியீடு செய்யும் 'பச்சிலை' மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகிறேன்.

வாசிப்புப் பழக்கம் அருகிவரும் காலகட்டமொன்றில் பாடசாலை மாணவர்களிடமும், வாசகர்களிடமும் வாசிப்பின் மீதான ஆர்வத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஒன்றாக பச்சிலைப்பள்ளி பிரதேசத்தைச் சார்ந்த உள்ளூர்ப் படைப்பாளிகளினதும், பாடசாலை மாணவர்களினதும் படைப்புக்களைத் தாங்கி இச்சஞ்சிகை வெளிவருவது பாராட்டுக்குரியதே!

இணைய வழிப்பட்ட இயந்திரமயமான காலச்சூழலில் தான் சார்ந்த சமூகத்தினரிடம் மெல்லமெல்ல இல்லாது போகும் வாசிப்புப் பழக்கம் மீதான நாட்டத்தை அதிகரிக்கவும், அவர்தம் அறிவையும், ஆற்றலையும், ஆளுமையையும் வெளிக்கொணர்ந்து அவர்களையும் கவிஞர்களாகவும், எழுத்தாளர்களாகவும் படைப்பிலக்கியவாதிகளாகவும் அடையாளப்படுத்துவதை மட்டுமே நோக்காகக் கொண்ட ஓர் ஆவணப்பதிவாக பச்சிலை சஞ்சிகை தனது ஐந்தாவது இதழ் வெளியிட்டை எட்டி நிற்பது மன நிறைவளிக்கிறது.

எமது பிரதேசத்தின் இளம் கலைஞர்களும் படைப்பாளிகளும், மாணவர்களும் இலைமறை காய்களாக தம்முள் புதைந்திருக்கும் திறமைகளை இனங்காண்பதற்கு முடியாமலும், தம்மை வெளிப்படுத்துவதற்கான வளங்களற்ற நிலையிலும் வெறும் சாமான்ய மனிதர்களாகவே மறைந்து வாழும் இன்றைய சூழலில் அத்தகையோரின் படைப்பாற்றல்களை வெளிக்கொணர்வதற்கான ஆரம்ப களமாகவும், அடுத்தகட்ட நகர்வுக்கான உந்துதலாகவும் வருடாவருடம் வெளியீடு காணும் பச்சிலையின் ஐந்தாவது இதழ் வெளியீடு சிறக்க வாழ்த்துக்களையும், அதற்காக அரும்பாடுபட்ட அனைத்து தரப்பினருக்கும் பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கிறேன்.

இந் நல்லதோர் முயற்சிக்கு உருக்கொடுத்தவர்கள் அனைவரும் போற்றுதற்குரியவர்கள். எண்ணக் கருவூலங்களின் கைவண்ணமாக காலத்தில் நிலைத்து நிற்கும் படி கருக்கொள்ளும் பச்சிலை அறிவுத்தேடலுக்கு பெருவிருந்தாக அமைய வாழ்த்துகின்றேன்.

**சிவஞானம் சிறீதரன்**
**பாராளுமன்ற உறுப்பினர்,**
**யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,**
**கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

எமது சபையின் கீழ் இயங்கிவரும் புலோப்பளை பொதுநூலகத்தினால் ஆண்டுதோறும் தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழாக வெளியிடப்பட்டு வருகின்ற "பச்சிலை" சஞ்சிகையின் ஐந்தாவது இதழிற்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வாசிப்பு என்பது ஒரு மனிதனை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்கின்றது. வாசிப்பை மக்கள் நேசிக்க வேண்டும். நல்ல நூல்களை வாசிக்க வேண்டும்.

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு."

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க வாசிப்பைத் தூண்டுகின்ற ஒரு செயற்பாடாக இச்சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவது பாரட்டுதற்குரியது.

எமது பிரதேசத்தில் இலைமறை காயாக இருக்கின்ற எழுத்தாளர்களின் ஆற்றல்களை வெளிக்கொணரும் களமாகவும், காலத்தால் அழியாத ஓவியமாக நிலைத்து நின்று எதிர்கால சந்ததியினரின் வழ்வுக்கு ஒளியூட்டவும் வாழ்த்துவதோடு இவ் இதழ் சிறப்பாக வெளிவர எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சு.சுரேன்,**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,**
**பளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

"அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்"

என்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்க பிறருக்கு நன்மைதரும் சொற்களை மட்டுமல்ல நிறைவான பயன்தரும் சொற்களையும் வெளியிட வேண்டும் என்பதற்கமைய பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வருகின்ற பச்சிலை என்னும் மலரானது இவ்வருடமும் வெளியிடப்படுகின்றமைக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பண்பாடுமிக்க மனிதர்களாக நாம் வாழவும் தம்மொழி, தம்மதம், தம்நிலம் என்பவற்றைப் பேணிப்பாதுகாக்கவும் நாம் ஒவ்வொருவரும் பொறுப்புடையவர்களாவோம். நலிவடைந்துவரும் எம் பண்பாட்டு விழுமியங்களை அழிவடையா வண்ணம் அடுத்த தலைமுறையினருக்கு வழங்குவதில் எமக்கு தார்மீகக் கடப்பாடுள்ளது.

அந்த வகையில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் மரபுரிமைகளையும் கலை கலாசார வரலாற்று விழுமியங்களையும் பாதுகாத்து எழுத்தியல் மூலம் ஆவணப்படுத்தும் இம் முயற்சிக்கு எனது பாராட்டுதல்களை தெரிவிப்பதுடன் தொடர்ந்து ஐந்தாவது தடவையாக வெளிவரும் "பச்சிலை" நூலுக்கும் இம் மலர் உருவாக்கத்தில் பங்கெடுத்த மலர்க்குழுவினருக்கும் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

**திருமதி. பரமோதயன் ஜெயராணி**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம்,**
**பச்சிலைப்பள்ளி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## "பச்சிலை" இதழுக்கான வாழ்த்துரை

ஒருகோடி கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது நூலகம் கட்டுவேன் என்று பதிலளித்தாராம் மகாத்மா.

கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு என்ற யதார்த்தத்தை நாமெல்லோரும் புரிந்துகொண்டிருக்கின்றோம். இதன்படி நாம் கற்கவேண்டியவை ஏராளம். கற்றலுக்கும் வாசிப்பிற்கும் நூலகங்கள் அடித்தளமானவை. வாசிக்க வருபவரின் வருகையேற்று, இருக்கை தந்து வாசிக்கும் நூல்களைத் தேர்ந்து தரும் நூலகங்களிற்கு நிகர் நூலகங்களே என்றால் தவறாகாது.

நல்ல நூல்களை வாசிப்பதன் மூலமாகச் சிந்தனைத் திறன் மேலோங்கும். சொல்வளம் பெருகும். கற்பனைத்திறன் வளரும். எது குறித்தும் எவரிடமும் தயக்கமின்றிப் பேசலாம். மனஅழுத்தம் குறைவடையும். இப் பெரும் நன்மைகளை வழங்கி அரும்பணியாற்றும் நூலகங்களில் புலோப்பளை பொதுநூலகமும் ஒன்றாகும். இந்நூலகம் தனது ஐந்தாவது இதழாக வெளியீடு செய்யும் **"பச்சிலை"** சிறப்புறவும், பணி சிறந்து தொடரவும் வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

**ந. பிரபாகரன்**
**பிரா. உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,**
**கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

புலோப்பளை பொதுநூலகத்தினால் வருடந்தோறும் தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழாக வெளியிடப்படுகின்ற "பச்சிலை" என்ற சஞ்சிகையின் ஐந்தாவது வெளியீட்டு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.


பளைப் பிரதேசத்தில் ஆங்காங்கே இலைமறை காயாக இருக்கின்ற எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் வெளி உலகிற்குக் கொண்டு வந்து எழுத்தாக்கங்களுக்கான சந்தர்ப்பங்களை அவர்களுக்கு வழங்குவதுடன் இம்மலரானது ஒரு காத்திரத்தன்மை வாய்ந்த மலராக மிளிர வேண்டும் என்பதே இம் மலரின் குறிக்கோளாகும்.

"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல......"

ஒருவனுக்கு கல்வி அழகே அழகாகும் என நாலடியார் எனும் நூலில் கூறப்பட்டுள்ளது. அந்தக் கல்வி அழகினால் வலுப்பெற்ற சமூகமே சிறந்த சமூகமாக மிளிரும் என்பதில் ஐயம் ஏதுமில்லை. அத்தகைய கல்வி அறிவை புத்தகங்கள் தருவது போலவே சஞ்சிகைகளும் தரவல்லன. அவ்வகையில் இச் சஞ்சிகைக்கு சிறந்த நல்ல ஆக்கங்களை வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் நூலாசிரியருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இச் சஞ்சிகை ஆக்கமானது தொடர்ந்தும் வெளிவர எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் இதய பூர்வமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி த.தர்சினி,**
**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பச்சிலைப் பள்ளியின் "பச்சிலை" நூல் என்றென்றும் வளர்ந்து விருட்சமாகுக.

வடக்கே மருதங்கேணி ஆற்று வெளியை பிரிப்பாய் கொண்டும், கிழக்கே சுண்டிக்குளம் கண்டாவளை எல்லையைக் கொண்டும், தெற்கே புலோப்பளை கிளாலி கடல் நீர் ஏரியை எல்லையாகக் கொண்டும், மேற்கே எழுதுமட்டுவாளை தென்மாரட்சியின் புவியோடு இசைந்த எல்லைக் கோடுகளாகக் கொண்டமைந்த பச்சிலைப் பள்ளி, போர்ப்பொழிவுகளைத் தாங்கித் தரித்து மீண்டும் துளிர்விட்டு பச்சைப் பசேலென்று விரிந்து கிடக்கிறது.

இப்பிரதேசத்தின் பண்பைக் கொண்ட காரணப் பெயராய் அமைந்த பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் புலோப்பளை பொதுநூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி வருடந்தோறும் வெளியீடு செய்யப்பட்டு "பச்சிலை" யாகப் பிரசவிக்கும் இந்நூலுக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் பச்சிலைப் பள்ளியின் குடிமகன் என்ற வகையில் பேருவகை அடைகிறேன்.

கலை, கலாச்சாரம், பண்பாடு, ஆலயம் தோறும் வழிபாட்டு விழுமியங்கள் என பல்வேறு துறைகளையும் பறைசாற்றி பெருமிதமாக பச்சிலையின் சாறாக பிழிந்தெடுத்து இந்நூல் வெளிவருவது கண்டு மகிழ்வதோடு இப்பிரதேச மக்களின் அறிவுப்பசியைப் போக்கும் ஆலயமாக புலோப்பளை பொதுநூலகம் மிளிர்வதுமில்லாமல் அயற் பிரதேச மக்களின் அறிவுப் பசியையும் ஆற்றுவது கண்டு மகிழ்வடைவதோடு அவ் அன்னையின் சேவையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

பச்சிலைப்பள்ளியின் "பச்சிலை" வெளியீடு செய்யும் குழுவினருக்கும் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தவிசாளர், செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரையும் அகமகிழ்ந்து வாழ்த்துவதோடு இம்மலர் தொடர்ந்தும் வருடந் தோறும் வெளிவர எல்லாம் வல்ல இரட்டைக்கேணி அம்பாளின் ஆசி என்றும் கிடைக்கவேண்டும் என இறைஞ்சுவதோடு இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமை அடைகின்றேன்.

**வாழ்க தமிழ்....! வளர்க நம் பண்பாடு....!**
**"வாழ்க வளமுடன்"**

**க.உதயகுமாரன்,**
**அதிபர்,**
**கிளி/பளை மத்திய கல்லூரி,**
**பளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் புலோப்பளை பொது நூலகத்தினூடாக வருடாவருடம் ஒக்டோபர் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பல போட்டிகள், "பச்சிலை" என்னும் சஞ்சிகை வெளியீடு செய்வதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைய நூலக சேவையானது முன்னரிலும் பார்க்க தொழிநுட்ப ரீதியாகவும், செயல் ரீதியாகவும் மாற்றமடைந்து வந்துள்ளது. வாசிப்பின் முக்கியத்துவம் குறைவடைந்து காணப்பட்டாலும் அதனை மேம்படுத்தும் நோக்குடன் வாசிப்பு மாதத்தினை அறிமுகப்படுத்தி வழிநடாத்தி வருகின்றனர். பாடசாலை மாணவர்கள் தொடக்கம் பல்கலைக் கழகம் வரை நூலகம் முக்கியமான ஒன்றாக விளங்குகின்றது. எனவேதான் உள்ளூராட்சி மன்றங்கள் பொது நூலகங்களையும், வாசிகசாலைகளையும் நடாத்தி மனித வாழ்க்கைக்குத் தேவையான அறிவையும் ஆற்றலையும் வளர்த்து வருகின்றன. இவ்வகையில் புலோப்பளை பொது நூலகமும் தனது பணிகளை மேற்கொள்ளத் தவறவில்லை.

அதன் ஒரு வளர்ச்சிப்படியாக வெளிவருவதே "பச்சிலை" எனும் சஞ்சிகை. பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் தமது படைப்புகளை வெளிக்கொணர்வதற்கான வாய்ப்புக்களை படைப்பாளிகளுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் வழங்கும் நோக்குடன் இச் சஞ்சிகை வெளியீடு செய்யப்படுவதனையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைவதோடு மேலும் இச்சஞ்சிகை சிறப்பாக அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க.தனபாலசிங்கம்,**
**சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மலர்க்குழுத் தலைவரின் மனப்பதிவுகள்

பச்சிலை மலரின் ஐந்தாவது இதழை இந்த ஆண்டின் வாசிப்பு மாத வெளியீடாக படைத்து வெளியிடுவது மகிழ்ச்சியைத் தருகிறது. சனசமூக அபிவிருத்தி அலுவலர் திரு. வெ.சுப்பிரமணியம் அவர்களின் விருப்பும் வழிப்படுத்தலுடனும் ஆரம்பித்த இந்த முயற்சியில் பிரதேச கலைஞர்களின் படைப்புக்களை மட்டும் உள்ளடக்கி தொடர்ச்சியாக இவ்விதழை வெளியிட மலர்க்குழு ஆற்றிவரும் பங்கு பாராட்டுக்குரியது. எவ்வித நிதி வசதியும் இன்றி தொடங்கிய இம் முயற்சி ஒரு அடிப்படை நிதி மூலத்துடன் தொடர்ந்து வருகிறது. நல் உள்ளம் கொண்டவர்கள் நிதியுதவியளிப்பார்களாயின் இது மேலும் பல நல்ல செய்திகளைப் பகிர்ந்து வெளிவரும். வாசிப்பு மாத செயற்பாடுகளில் தலையாய முயற்சியாக இம் மலராக்கம் சிறப்புற பங்களித்த படைப்பாளிகள் அனைவருக்கும் எமது நன்றிகள். சபையின் கௌரவ தலைவர் சுரேன் உட்பட அனைத்து சபை உறுப்பினர்களுக்கும் நன்றிகள். மேலும் பச்சிலை வெளிவர உழைத்த அனைவருக்கும் நன்றிகள்.

**அமரசிங்கம் கேதீஸ்வரன்,**<br>**மலர்க்குழுத் தலைவர்,**<br>**பச்சிலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மலராசிரியரின் மனதிலிருந்து.....

**"எண் என்ப ஏனை எழுத்து என்ப இவ் இரண்டும்
கண் என்ப வாழும் உயிர்க்கு"**

என்பது வள்ளுவர் வாக்கு. பச்சைப்பசேலென துளிர்விட்டு துளிர்த்து அழகிய பிரதேசமாக காட்சியளிக்கும் பச்சிலைப்பள்ளியின் வளர்ந்து வரும் எழுத்தாளர்களின் எண்ணங்களை ஆக்கங்களாக்கி அழகுற ஒழுங்கமைத்து ஒன்றாக்கி ஒளிவிட வெளிவரும் "பச்சிலை" என்னும் பச்சிலைப்பள்ளியின் பிரதேச மலருக்கு மலரக்குழுவின் மலராசிரியராக இருப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் பொது நூலகத்தால் வாசகர்களின் கல்வி மேம்பாடு அறிவுசார் ஆற்றல் அதிகரிப்பு கருதி வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் முனைப்புடன் முன்னெடுக்கப்படும் வாசிப்பு மாதத்தில் இச் சஞ்சிகை வெளிவருகின்றது. எமது கடந்தகாலம் எவ்வாறு கழிந்தது, நிகழ்கால நிதர்சனங்கள் எவ்வாறு நிகழ்கின்றது, எதிர்காலம் எதிர்கால எம் சந்ததிக்கு உணர்த்திச் செல்ல வேண்டிய அறிவார்ந்த அறிவுரைகள் என...... இப் பச்சிலை சஞ்சிகை மூலமாக இப்பிரதேச மக்களின் மன எண்ணங்களை தாங்கி ஓங்கி ஒலிக்கச் செய்வதாக அமையட்டும்.

ஓர் மனித சமூகம் தான் வாழ்ந்ததை அடுத்துவரும் சந்ததிக்கு எழுத்துருவம் செய்துவிட்டுச் செல்வதால் எதிர்கால சந்ததி தங்கள் முன்னோர்கள் எப்படி வளமாக வாழ்ந்தார்கள்? அவர்களின் அறிவு ஆற்றல் எவ்வாறு காணப்பட்டது? கலை கலாச்சார, பண்பாட்டு வாழ்க்கை முறைகள் எப்படி இருந்தது என்பதனையும் அறிந்து கொள்ள முடியும். இச்சஞ்சிகை இப்பிரதேச ஆக்கவாளர்களின் ஆக்கங்களை தாங்கி வெளிவருவது அவர்களை மென்மேலும் ஊக்கப்படுத்துவதுடன் எதிர்காலத்தில் மேலும் இது போன்ற முயற்சிகளில் ஈடுபட தூண்டு கோலாகவும் இருக்கின்றது.

இப்பச்சிலை சஞ்சிகைக்கு ஆக்கங்களை வழங்கி மலரை செம்மைப்படுத்தி மலரவைத்தோருக்கும் வாழ்த்துச் செய்திகள் வழங்கிய அனைவருக்கும், இதழை அச்சுக் கோத்து புத்தகமாக்கிய அச்சகத்தாருக்கும், இம்மலர்க்குழுவிற்கும் பச்சிலை மலர்க்குழு சார்பாக எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

மலர்க்குழுவின் மகத்தான பணி தொடர்வதாக.......

**வி.எஸ்.புவனராசா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளியின் அபிவிருத்தியில் கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைத் துறைசார் பங்குபற்றுதல்

**அமரசிங்கம் கேதீஸ்வரன்**
BA (Hons) M.Phil (ECN) PHD (Reading)
**உதவித்திட்டமிடல் பணிப்பாளர்,**
**மாவட்டச்செயலகம்,**
**கிளிநொச்சி.**

பச்சிலைப்பள்ளியின் அபிவிருத்தியில் பங்கு வகிக்கும் வெவ்வேறு துறைசார் செயற்பாடுகளை பகிர்ந்துவரும் எனது கட்டுரைத் தொடரில் இம்முறை கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைத் துறைசார் பங்களிப்பு குறித்து ஆராயும் நோக்கில் இக்கட்டுரை சமர்ப்பிக்கப்படுகிறது. பச்சிலைப்பள்ளியில் செயற்படும் வர்த்தக மையங்களின் பங்குபற்றுதலை மதிப்பிடும்போது ஒரு கணிசமான வேலை வழங்கும் துறையாக இது செயற்பட்டு வருகிறது. 41 சில்லறைக் கடைகள், 14 உணவகங்கள், 04 புடைவையகம் மற்றும் பாதணி விற்பனை நிலையங்கள் 05, இறைச்சி மீன் மரக்கறி மையங்கள், 01 மருந்தகம், 12 மரம் மற்றும் இரும்பு நிலையங்கள், 04 மின்சாரப் பொருள் விற்பனை நிலையங்கள், 40 பல்பொருள் வணிப நிலையங்கள். 8 கட்டிடப்பொருட்கள் மற்றும் நிறப் பூச்சுக்கள், 8 மதுபான சாலைகள், 3 நகையகங்கள், 2 புத்தகம் மற்றும் காகிதாதி விற்பனை நிலையங்கள், 3 உதிரிப்பாக விற்பனை நிலையங்கள் என மொத்தமாக 145 மையங்கள் வர்த்தக மையங்களாக செயற்பட்டு வருகின்றன. இவற்றில் 600 க்கும் அதிகமான முழு நேர வேலைவாய்ப்பை வழங்கி வரும் துறையாக வர்த்தகத்துறை செயற்பட்டு வருகிறது. இதிலும் குறிப்பாக சில்லறை மற்றும் பல்பொருள் வாணிப நிலையங்கள் கிராமிய மட்டத்தில் மக்களுக்குத் தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்களை வழங்கும் முதன்மை நிலையங்களாக இருந்து வருகின்றது. பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் 08 கிளைகளை அமைத்து செயற்படினும் மக்களின் முதன்மைச் சேவை மையங்களாக தனியார் துறையினரே செயற்பட்டு வருகின்றனர். எவ்வாறாயினும் இந்த இடையீட்டு சேவை வழங்கலினூடாக பிரதேச மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் அளவைவிட வேறு பகுதிகளிலும், நாடுகளிலும் உற்பத்தியாகும் பொருட்களே அதிகம் விற்பனை செய்யப்படுவதனால் மெய்யான வருமானப் பங்களிப்பு என்பது குறைவாகவே இருந்து வருகிறது. குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் மொத்த வர்த்தக மையங்களில் 3252 நிலையங்கள் காணப்பட்டபோதும் இதில் 25 சதவீதமான நிலையங்கள் சில்லறைக் கடைகளாகவும் 13 சதவீதம் மளிகைக் கடைகளாகவுமே காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலக மட்டத்தில் செயற்படும் உற்பத்திக் கைத்தொழில்கள் தொடர்பாக ஆய்வுசெய்யும்போது உணவுசார் உற்பத்தி நிலையம் ஒன்றும் மரம் மற்றும் தளபாட உற்பத்தி மையங்கள் 09உம் தெங்குசார் உற்பத்தி மையங்கள் 10உம் காணப்படுகின்றன. இவற்றிலிருந்து வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 200க்கும் உட்பட்டதாகவே காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக பிரதான தென்னை உற்பத்தி இடம்பெறும் இப்பிரதேசத்தில் தெங்குசார் உற்பத்தி தொழிற்சாலைகளில் தென்னம் தும்பு மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வேறு பகுதிகளுக்கு தும்பு ஏற்றுமதி மட்டுமே இடம் பெறுகின்றது. இதனால் இப்பிரதேசவாசிகளுக்கு கிடைக்கும் நன்மைகள் வெகுவாக குறைவடைந்துள்ளது. நிதிசார் நிறுவனங்களின் பங்களிப்புத் தொடர்பில் ஆராயும் போது இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் தலா ஒரு கிளையும் கூட்டுறவுக் கிராமிய வங்கி ஒன்றுமாக மொத்தம் 3 வங்கிகளே செயற்படுகின்றன. இவ்வகையில் உற்பத்திசார் வருமான மூலங்கள் மூலம் குடும்பங்கள் வருமானம் பெறும் பங்கு மிகக் குறைவாக உள்ள பிரிவாகவே பச்சிலைப்பள்ளியையும் அளவிட முடிகிறது. கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான வருமான மூலங்கள் பற்றிய குடித்தன வருமானம் மற்றும் செலவீனம் பற்றிய புள்ளிவிபரத் திணைக்களத்தின் அளவீட்டின்படி குடும்பம் ஒன்றின் சராசரி மாத வருமானம் 31576/= ரூபாவாகக் காணப்படுகிறது. இதில் கூலிகள் படிகளில் இருந்து 18434/= ரூபாவும், விவசாய செயற்பாடுகளின் மூலம் 2239/= ரூபாவும், விவசாயம் அல்லாத செயற்பாடுகள் மூலம் 1853/= ரூபாவும், காசுப் பெறுவனவுகள் மூலம் 2921/= ரூபாவும் திடீரென வரும் வருமான வாய்ப்புக்கள் மூலம் 2921 ரூபாவும் பணமூலமல்லாத வருமானங்கள் மூலம் 3207/= ரூபாவும் ஏனைய வருமானம் மூலம் 3207/= ரூபாவும் மதிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் இந்தப் போக்கு பச்சிலைப்பள்ளியின் பொருளாதார வருமான மூலங்களை துல்லியமாக வெளிப்படுத்தி நிற்கிறது. இதே நேரம் குடும்பம் ஒன்றின் செலவீன மதிப்பீட்டினை நோக்கும்போது மாதாந்த செலவீனம் 28483/= ரூபா அமைந்துள்ளது. இதில் உணவு வகைக்கான மொத்த செலவீனம் குடும்பம் ஒன்றிற்கு 14688/= ஆகவும் உணவல்லாதனவற்றுக்கான செலவீனம் 14483/= ரூபாவாகவும் அமைந்துள்ளது. இவ்வகையில் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக நோக்கும்போது 22.73 சதவீதமான குடும்பங்களைக் கொண்ட 4543 குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பிரதேச செயலாளர் பிரிவாக பச்சிலைப்பள்ளியே காணப்படுகிறது. மாவட்ட மட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் அதிக குடும்பங்கள் வாழும் வறிய பிரதேச செயலாளர் பிரிவாக பச்சிலைப்பள்ளியே காணப்படுகிறது. கிளிநொச்சி மாட்டத்தில் 23250 குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழ் வசிக்கின்றனர். இது வறுமை சுட்டியில் 12.7 சதவீதமாக அமைந்திருக்க பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் 22.73 சதவீதமாக அமைந்துள்ளதால் வறுமை கூடிய முதலாவது பிரிவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய விருது 2018இன் பதிவுகள்




NATIONAL LIBRARY & DOCUMENTATION SERVICES BOARD
MINISTRY OF EDUCATION

This is to certify that

Puloppalai Public Library
of
Pachchilaippalli Pradeshiya Sabha
Successfully conducted the

National Reading Month Programme

October 2017

Your contribution towards this noble project is very much appreciated

Chairman

Director General




## தேசிய விருது 2019இன் பதிவுகள்








## 2019 நிகழ்வின் பதிவுகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2018 தேசிய வாசிப்புமாத பரிசளிப்பு விழாவின் பதிவுகள்









## 2019 நிகழ்வுகளின் பதிவுகள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரிவே காணப்படுகின்றது. வளங்களால் நிறைந்துள்ள பச்சிலைப்பள்ளியிலிருந்து வறுமையை விரட்டுதல் தொடர்பாக சிந்திக்க வேண்டிய தருணம் இதுவாகும். உண்மையில் பெருமளவு பெருந்தோட்டங்களாகக் காணப்படும் தென்னை உற்பத்தியாளர்கள் இப்பிரதேசங்களில் குடியிருக்காது வெளியில் உள்ள வசதி படைத்தவர்களாக இருப்பதும், பிரதேசத்தில் வாழும் பெருந்தொகையானவர்களுக்கு சிறிய துண்டு நிலங்கள் காணப்படுவதுமே பச்சிலைப்பள்ளியின் பிரதான வறுமையை நிர்ணயிக்கும் காரணியாகவுள்ளது. சிறிய நிலவுடமை குடும்பங்களுக்கு வருமானத்தைப் பெறக்கூடியவாறான கால்நடை வளர்ப்பு, கைத்தொழிற் சாலைகளின் அமைப்பு, மேட்டுப் பயிர்களுக்கான நீர் வசதி போன்ற விடயங்கள் சார்ந்து வசதிகளை உருவாக்கி வழங்க வேண்டும். நிலத்தடி நீரின் கிடைப்பனவை பெருக்க பாரிய குளங்கள் இல்லாத பகுதியாக இது இருப்பதனால் சிறிய குளங்களையும் தோட்டங்களில் உள்ள துரவுகளையும் புனரமைக்கும் ஏற்பாடுகள் சிந்திக்கப்பட வேண்டும். குறிப்பாக சிறிய நீர் நிலைகளை ஒவ்வொரு தோட்ட உரிமையாளர்களும் உருவாக்கிக்கொள்ள போதிய ஊக்கப்படுத்தல்கள் வழங்கப்படல் வேண்டும். குறிப்பாக தோட்ட உரிமையாண்மை அளவுக்கமைய துரவுகள் நீர் நிலைகளைப் பேண சட்டத்தினால் வற்புறுத்தப்படல் வேண்டும். ஆறுமுகம் திட்டம் என முன் மொழியப்பட்டுள்ள ஆனையிறவு நீரேரி அபிவிருத்தித் திட்டத்தினை மீள் ஆய்வுக்கு உட்படுத்தப்படல் வேண்டும். சிறிய பரப்புடைய இப்பிரதேசத்தில் விவசாயிகளுக்கு சவாலாகவுள்ள குரங்கை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். கல்வித் தராதரப் பத்திர உயர் வகுப்புக்களை பளை மத்திய கல்லூரி மட்டுமே வழங்கும் முறையை மாற்றி கிளாலி, மாசார், இயக்கச்சி, புலோப்பளை ஆகிய பாடசாலைகளிலும் இப்பாட நெறிகளை கற்பிக்க அனுமதி வழங்கப்படல் வேண்டும். இந்திராபுரம் மற்றும் அரசர்கேணி ஆகிய இடங்களில் புதிய ஆரம்ப பாடசாலைகள் அமைக்கப்படல் வேண்டும். தென்னை மற்றும் பனைசார் தொழிற்சாலைகளை நிறுவி முதல் விளைவு பொருளாக விற்பனை செய்யும் சந்தர்ப்பத்தைக் குறைத்து பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களை உருவாக்கும் தொழிற்சாலைகள் அமைக்கப்படல் வேண்டும். கற்றாளை உற்பத்தி போன்ற முயற்சிகள் தொடங்கப்பட வேண்டும். கால போகத்தைத் தொடர்ந்து உடனடியாக மறுவயல் பயிர்களை செய்கை பண்ணும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அவ்வாறான நில வெளிகளை கண்டங்களாக வேலியிட்டு அறிக்கைப்படுத்தி விவசாயக் கிணறுகளை அமைப்பதன் மூலம் நீர்த் தேவைக்கான மூலங்களாக பயன்படுத்திக் கொள்ள விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுக்கப்படல் வேண்டும்.

சுகாதாரத் துறையின் சேவையினை உறுதி செய்யும் வகையில் இயங்கி வரும் சுற்றயல்கூறு மருத்துவமனையான பளை வைத்தியசாலையில் விபத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு ஒன்று அமைக்கப்பட வேண்டும். அது இப்பகுதி மக்களுக்கு மாத்திரமன்றி வடக்குத் தெற்காக உள்ள 50 கிலோ மீற்றர் தூரத்தில் நிகழும் எந்தவொரு விபத்தினாலும் அநியாய உயிரிழப்பு ஏற்படுவதனை தடுக்க முடியும். அத்துடன் இவ் வைத்தியசாலையில் தொடர்ந்துவரும் வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இரு வைத்தியர்களாவது நியமிக்கப்படல் வேண்டும். போசாக்கு தொடர்பிலும், தொடர்ச்சியாகக் காணப்படும் குருதிச்சோகை, நிறைக்குறைவு, குள்ளமாதல், மெலிதல் போன்ற பிரச்சினைகளை தடுக்கக்கூடிய வகையில் போதிய விழிப்புணர்வு வழங்கப்படுவதுடன் முறையான உணவூட்டல் மற்றும் மருந்தூட்டல் நடைபெறக்கூடிய சூழலை ஏற்படுத்துதல் வேண்டும். தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தக்கூடிய வசதியான சனசமூக நிலையம் அமைக்கப்படுவதுடன் கைத்தொழிற் பயிற்சியை வழங்கக்கூடிய தொழிற் பயிற்சி அதிகாரசபைக்கான கட்டிடங்களும் வழங்கப்படல் வேண்டும்.

வளங்களால் நிறைந்துள்ள பச்சிலைப்பள்ளி வறுமையாலும் நிறைந்துள்ள முரண் நிலையை மாற்ற காத்திரமான செயற்பாடுகளைச் செய்வதுடன் முகமாலை, வேம்பொடுகேணி ஆகிய பகுதிகளில் இன்னமும் மீள்குடியமர முடியாது ஏங்கிக் கொண்டிருக்கும் மக்களையும் விரைந்து குடியேற்றி வறுமை தணிப்பை உறுதி செய்வோமாக.

நீ செய்த தீமைகளின் பலன்கள் யாவும்
நீ அறிந்தோ அறியாமலோ உன்னை வந்து சேரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு மிளிரும் எங்கள் தேசம்

எழில்
முகமாலை.

உப்பளக் காற்று எம் மேனி தடவ
ஆனையிறவு கடலின்
சேற்று வாடையுடன் தொடரும் எம்
பயணம் யாழ்நோக்கி
குறிஞ்சாத்தீவு வயல் வெளியில்
மயில்கள் நடனமாட
பார்ப்போரை பரவசப்படுத்தியபடி
வந்து சேர்ந்தது இயக்கச்சி சந்தி
சடுதியாய் அந்த வளைவு தனை
கடக்கின்ற போது கண்ணில்பட்டது
குவேனி கோட்டைக்கு போகும்
வழி காட்டும் அந்த குறிப்பு விளம்பரம்
மெல்ல தொடர்ந்த எம் பயணம்
வானுயர்ந்த தென்னைகளை
நிரல் நிரலாய் காட்டி நிற்க
நினைவுகளை மீட்டி பார்த்தோம்
கண்ணிமைக்கும் நேரமதில்
கரந்தாய் குளத்தில் சிலுத்து
நிற்கும் தாமரை மலர்கள்
சடுதியாய் எம்மை நிற்கவைத்தது
இதமான குளிர் காற்று
உடலுக்கு சுகமாக அமைய
நகரத் தொடங்கியது எம் மகிழுந்து
சற்று நேரத்தில் அடைய முடிந்தது
புதுக்காட்டு சந்தி தனை
தாளையடி வீதி தனை தரமாக
அமைத்து நடைபாதையும் அழகாக
உருவான தான் மாறியே போனது
புதுக்காடு புதுப் பொலிவுடன்
அழகான தென்னம் தோப்புக்களை
ஊடறுத்து அமைக்கப்பட்ட போல் தெரிந்தது
A9 வீதி வேகத்தை குறைத்த
சாரதியிடம் ஏன் என்று கேட்டவுடன்
பளை நகர் வந்துட்டுது குழந்தை
உணவகத்தில் சூடாக பருகி விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்படுவம் என்றார்
பத்து ஆண்டுகள் கழித்து வந்துள்ளேன்
பல மாற்றங்களுடன் பளை நகர் என்றார்
சூடான தேனீர் பருகி விட்டு
புறப்பட தயாரான வேளை தனின்
என்னவன் கைகளின் அவித்த
பனம் கிழங்குடன் இஞ்சேருங்கோ
காணுமோ இல்லாட்டி வருவிங்களே
என்றவளுக்கு பரிந்துரைத்து விட்டு
தொடர்ந்தது பயணம்
அழகு பிரமிப்புடன் பிரதேச செயலக
வளாகம் தெரிய சிலநொடிகளில்
புலோப்பளை வீதி கடந்து
இரட்டைக்கேணி அம்மன் சன்னிதானம்
கண்ணில் பட கண்மூடி கை கூப்பி வணங்கியபடி
கண்விழிக்க வானுயர்ந்த
நீர்தாங்கி கண்ணுக்முன் வந்துவிட
ஆங்கிலேய ஆட்சிக் காலமதை
ஆதாரமாய் காட்டி நிற்கும்
அந்திரேயர் ஆலயமும் நிழலாய்
நினைவுபடுத்த பளிச்செனவே
கண்ணில் பட்டது பச்சிலைப்பள்ளி
பிரதேச சபை சுற்று மதிலும்
சுத்தமான சுற்றாடலுமாய் காட்சி
தர வந்து விட்டோம் பளை பிரதேச
வைத்திய சாலைக்கு முன்பாக
அந்தக் காலத்து அம்பிகாபதி வைத்தியரை
நினைவுபடுத்த அரசர் கேணி
வயல் வெளியின் இதமான காற்று
சுற்று முற்றும் பார்க்க வைத்தது
கச்சார் வெளி சந்தி தனை
கடந்து நாம் போகையிலே
காத்திகேசு ஐயாவின் வீட்டு ஞாபகம்
நினைவில் வர சதாபுர ஏற்றத்தில்
பயணித்தது எம் மகிழுந்து
புகையிரத கடவைதாண்டி வேம்பொடு
கேணி நோக்கி கால் நடைகளை
சாய்த்துக் கொண்டு தண்ணீர் காட்டுவதற்காக
நவனி வெளி அம்மன் குளம்
நோக்கி சின்னவன் போவதை கண்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டென திரும்புகையில் இத்தாவில்
சந்தி முருக மூர்த்தி கோயிலுக்கு
போய்வந்த நினைவுகள் மனதின் ஓட
இந்திரா புர ஏற்றத்தில் காவல்துறை
எமை மறிக்க சான்றுகளை காட்டிவிட்டு
சாரதி கார் எடுக்க முகமாலை வேதக்
கோயில் கண்ணில்பட்டது தாயே
ஆரோக்கிய தாயே வந்தோரை வாழ
வைத்த அன்னையே எமக்காவும்
வேண்டிக் கொள்ளும் என்று வாயில்
முணுமுணுத்தபடி வேண்டிக் கொண்டு
பார்க்கையில் கண்ணில்பட்டது
முகமாலை ஈர் உருவி கிணற்றடி
சுற்றும் முற்றும் பார்த்த படி போகையில்
கண்கள் தேடியது 2000ம் ஆண்டுவரை
கண்ணுக்கு கெடுத்த கேவில் தூர்தொழிற்சாலை தனை
முந்திக் கொண்டு வந்த
டிப்பருக்கு வழி விட்டு திரும்புகையில்
எழுதுமட்டுவாள் புகையிரத நிலையம்
காவல் துறையின் சோதனைச் சாவடி தாண்ட
கிளாலி வீதிக் குறியீடு தென்பட்டது
கண்கள் துலக்கத்தை வருகைக்கு
கண்ணை மூடி தூங்கி விட்டு எழும்பிய
போது நாவற்குழி தாண்டியது எம் கார்
இதமான நினைவுகளுடன் எழுதுமட்டுவாள்
கண்மூடிய நான் கனவுகளுடன் கண்
முழித்தது நாவற்குழியில்

இப்போது மட்டும் அன்று இனி எப்போதும் எம் தேசம் அழகு தான் என்று நினைத்தபடி யாழ் நோக்கி தொடர்ந்தது எம் பயணம்.

நேரமில்லை என்ற சொல் சோம்பேறித்தனத்தின்
நாசூக்கான சொல்லாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடப்பெயர்வின் பின் மீள்குடியேறிய பச்சிலைப்பள்ளி மக்களின் இன்றைய நிலையும் எதிர்காலமும்

வி.எஸ்.புவனராசா
தம்பகாமம்,
பளை.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

எங்கு பார்த்தாலும் பச்சைப்பசேலென பரவிக்காணப்பட்ட பச்சிலைப்பள்ளியின் பசுமைத்தோற்றம் கடந்த கால யுத்த சூழ்நிலையால் ஊரின் பெயருக்கேற்றவாறு காணப்படாது மீள் குடியேற்றத்தின்போது யுத்த வடுக்களைச் சுமந்து இடிந்த கட்டிடங்களும் எரிந்த தென்னை பனை மரங்களுமாக மீள்குடியேற வந்த மக்களின் கண்களில் காட்சியளித்தது. மனங்களோ இது எங்கள் வீட்டு வளவோ இருப்பிடமோ என ஏங்கி நின்ற காலம் அது. 2010.02.20ல் பல்வேறு நெருக்கடிகள் மத்தியில் மக்களின் மீள்குடியேற்றம் படிப்படியாக இன்றைய நிலைவரை வளர்ச்சியடைந்தது. இன்றுவரை பச்சிலைப்பள்ளியின் முழு இடமும் மீள் குடியேற்றம் நிறைவடையவில்லை அப்பகுதிகளில் வெடிபொருட்கள் அகற்றும் பணி நிறைவுறவில்லை என்றொரு கருத்து இருப்பினும் என்று பச்சிலைப்பள்ளி பழைய நிலையை அடையும் என்னும் எதிர்பார்ப்பு மக்கள் மனங்களில் மனிதமனங்களின் நிலையது.

மக்கள் மனங்களில் மீண்டும் தங்களின் சொத்தை, பயிர்களை, வாழ்க்கையை கட்டியெழுப்ப மனச் சுமையை தாங்கி மனங்களை கட்டியெழுப்ப வேண்டிய தேவை. இவற்றையும் வென்று இன்றைய நிலை வரை மனஉறுதியுடன் மக்களின் வாழ்க்கைப் பயணம் முன்னோக்கி நகர்கின்றது. மக்களின் தேவையோ எதிர்பார்ப்போ அதிகம் கிடைப்பதோ குறைவு. மக்கள் தங்களின் உயிர்களைத் தவிர இதர சொத்துக்கள் அனைத்தையும் சிலர் உறவுகளைக் கூட இழந்திருக்கலாம். எல்லா வடுக்களையும் தாங்கியே இம் மீள்குடியேற்றம் இங்கு இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது. தலைமுறை தலைமுறையாக சேர்த்து வைத்த சொத்துக்களை இழத்தல் ஈடுசெய்ய முடியாத இழப்பு. அவர்களின் இருப்பிடம் மீளவும் கட்டி எழுப்பப்பட வேண்டிய தேவை. பலர் வந்தவுடன் தற்காலிக வீடுகள் பெற்று தங்களின் வாழ்க்கையை ஆரம்பித்தார்கள். பின் வீட்டுத்திட்டம் பெற்று நிரந்தர வீடுகள் அமைப்பதற்கு வங்கிக் கடன் பெற்று வீடுகளை அமைத்தார்கள். இன்றுவரை வங்கிக்கடன் கட்டுவதில் தங்களின் ஓர்பகுதி வருமானத்தை அதற்காக செலுத்துகின்றார்கள். சிலர் வீட்டுத்திட்டம் கிடைக்காமல் வங்கிகளிலும் நிதி நிறுவனங்களிலும் கடன்பெற்று வீடுகளை அமைத்தார்கள். தங்களிற்கு வீட்டுத் திட்ட உதவி கிடைக்குமென்று நம்பினார்கள். ஆனால் அவர்களிற்கு இன்று வரை அவ் உதவி கிடைக்கவில்லை. அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு புனரமைக்கப்பட்டதால் அவ்வுதவி அவர்களைச் சென்றடைய சட்டங்கள் தடையாகவுள்ளதாக ஓர் காரணம். அவர்கள் இன்று வரை நிதி நிறுவனங்களின் கடனாளிகள். ஒரு சிலர் பகுதிக் கொடுப்பனவு பெற்றார்கள் (திருத்தம்). மிகுதிக்கு கடன் பெற்றார்கள். அவர்களின் நிலையும் நிதிநிறுவனங்களின் கடனாளிகள் தான் இன்றுவரை. இதைவிட வயது வந்த தனிநபர்களை வீட்டுத்திட்டம் சென்றடைய சில தடைகள். அதனால் அவர்களிற்கும் வீட்டுத்திட்டம் சென்றடையவில்லை. இன்னும் சிலருக்கு வீட்டுத்திட்டம் சென்றடையவில்லை. இவ்வாறாக இருப்பிடவசதிப் பிரச்சினை பல்வகை நிலைகளில் இன்று வரை தொடர் கதையாகவுள்ளது.

வாழ்வாதாரம் மக்களின் மிகவும் இன்றியமையாத பிரச்சினையாக இன்று வரை தொடர்கின்றது. கால் நடை வளர்ப்பில் இடப் பெயர்வின் முன் கணிசமானோர் ஈடுபட்டிருந்தனர். கோழிவளர்ப்பில் ஈடுபட்டவர்களிற்கு உதவிகள் ஓரளவு கிடைத்திருந்தாலும் ஆடு, மாடு வைத்திருந்தவர்களிற்கான உதவிகள் ஒன்று இரண்டு கால்நடைகள் கிடைத்தாலும் பட்டிக்கணக்கில் ஆடு, மாடு வளர்த்தவர்களின் ஆடு, மாடுகள் திரும்பிவரும் போது ஒன்றும் இருக்கவில்லை. ஆரம்பத்தில் அதன் வருமானத்தில் தங்களின் குடும்ப வாழ்க்கையை நடாத்திச் சென்றவர்களில் பலர் இன்றும் தங்கள் கால்நடை வளர்ப்பில் மீண்டெளவில்லை இடப்பெயர்வின் முன் 100இற்கு மேற்பட்ட கால் நடை வைத்திருந்த கணிசமானோர் இன்று மிகவும் வறுமைநிலையில் உள்ளனர். அவர்களின் மீள் எழுச்சி மிகவும் கடினமாகவுள்ளது. அதற்கான முதலீடு அவர்களிடமில்லை. ஒரு சிலர் நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்று கால்நடைவளர்ப்பதில் படிப்படியாக முன்னோக்கி தமது வாழ்வாதாரத்தைப் பெருக்கிவருகின்றனர். பச்சிலைப்பள்ளியை பொறுத்தவரை இப்பகுதி மணற்பாங்காக காணப்படுவதால் நெற்செய்கை மற்றும் மேட்டுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோருக்கு கால்நடை உரம் மிகவும் முக்கியமாக தேவைப்படுகின்றது. அதன் பற்றாக்குறை பயிர்ச்செய்கையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. கால்நடை வளர்ப்பையே நம்பியிருந்த வயதுவந்த முதியோருக்கு தங்களின் பிள்ளைகளின் கையை நம்பி இருக்கவேண்டிய நிலை. இதனால் அவர்களின் மனங்கள் பாதிக்கப்பட்டு வாழ்க்கையில் நம்பிக்கை அற்ற நிலை. பலமக்கள் மேட்டுப்பயிர்ச்செய்கையில் இடப்பெயர்வின் முன் நன்கு தேர்ச்சி பெற்று வளர்ச்சி பெற்றிருந்தனர். மீள் குடியேற்றத்தின் பின் மீண்டும் இச் செய்கை பழைய நிலையை பல்வேறு காரணங்களால் எட்டவில்லை. குறிப்பாக மிளகாய்ச் செய்கை இன்றுவரை பழைய நிலையை அடையவில்லை.

தென்னைச் செய்கையைப் பொறுத்தவரை யுத்தகால சூழ்நிலையால் சுமார் 15000 ஆயிரம் கெக்ரேயர் தென்னைச் செய்கை அழிந்திருக்கலாமென்று ஓர்மதிப்பீடு. இச் செய்கை மீள் எழுச்சி அடையவில்லை. இதற்கு பலவகைக் காரணங்கள் உள்ளன. பல தென்னந்தோட்டங்கள் இருந்த பகுதி வெடி பொருள் எடுபடாதுள்ளமை, தென்னந்தோட்ட உரிமையாளர்களின் புலம்பெயர்வு மீள் கட்டுமானத்துக்கு உரிய உதவிகள் உரியமுறையில் கிடைக்காமை, இச் செய்கையை மீள் கட்டுமானம் செய்யவென திட்டமிட்ட செயல்திட்டம் இன்றுவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுத்தப்படாமை போன்ற காரணிகளால் தென்னைச் செய்கை மீள் எழுச்சி மந்த கதியில் நகர்கின்றது. யுத்தகாலத்தின் முன் பச்சிலைப்பள்ளியின் தென்பகுதி கிளாளியில் இருந்து ஆனையிறவு வரை தென்னந்தோட்டங்கள் மிகவும் செழிப்படைந்திருந்தது. தென்னை நன்கு பராமரிக்கப்பட்டு தென்னை மரங்களே அப்பகுதியில் கண்ணுக்கு காட்சி அளித்தது. இப்பகுதி தென் மேல்பருவக்காற்றுக் காலத்தில் (சோளகக் காற்று) கோடைப்பருவத்தில் கடல் நீர் (கிளாலி ஆனையிறவு) வடக்கு நோக்கி ஈரலிப்பை வழங்குவதால் தென்னை வாடுவதில்லை. மாரி கோடை இரு போகத்திலும் ஒரே மாதிரி பலனைக் கொடுக்கின்றது. இன்று இப்பகுதியில் பல தென்னந் தோட்டங்கள் தனியார் மற்றும் (L.R.C) காணி சீர் திருத்த ஆணைக்குழு (J.E.D.P) மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபை என்பவற்றுக்கு சொந்தமான காணிகள் மீள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. சட்டவிரோத செயற்பாடுகள், குறிப்பாக மண்ணகழ்வு, பனை தறித்தல் என்பன நடைபெறுகின்றன.

பச்சிலைப்பள்ளியின் வடபகுதி முகமாலையில் இருந்து கோயில் வயல் வடபகுதி வரை பல தென்னந் தோட்டங்கள் மீள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. தனியாருக்கு சொந்தமான காணி மற்றும் சீர்திருத்த ஆணைக்குழு, மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபைக்கு சொந்தமான காணிகளில் (L.R.C, J.E.D.P) இங்கும் சட்டவிரோத செயற்பாடுகளான மண் அகழ்வு, பனை தறித்தல் என்பன தடுப்பாரின்றி நடைபெறுகின்றது. பச்சிலைப்பள்ளியின் மத்தியபகுதி முகமாலையில் இருந்து ஆனையிறவு வரை தென்னைச் செய்கை ஓரளவு மீள் நடுகை செய்யப்பட்டாலும் பல தோட்டக் காணிகள் மீள் நடுகை செய்யப்படவில்லை. இலங்கையின் இதர பகுதியில் தென்னந்தோட்டங்களில் மேற்கொள்ளப்படும் இதர ஊடு பயிர்கள் செய்யப்படும் முறை இங்கும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். குறிப்பாக மரமுந்திரிகை மற்றும் தென்னந் தோட்டங்களின் ஓரங்களில் தேக்கு, சமண்டலை போன்ற பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் மரங்களை வளர்ப்பதை ஊக்குவிப்பதாலும் வளர்ப்போருக்கு வருமானமும் சூழலுக்கு சுற்றாடலுக்கு நன்மை பயப்பதுடன் மழை வீழ்ச்சி அதிகரிப்பையும் கொடுக்கும்.

பச்சிலைப்பள்ளியின் முக்கிய வளமான பனை வளத்தைப் பாதுகாக்க இப் பகுதியிலேயே பனை அபிவிருத்திசபை அலுவலகத்தை அமைப்பதன் மூலம் பச்சிலைப்பள்ளியில் நடைபெறும் சட்ட விரோத பனை அழிப்பை தடுக்கமுடியும். யுத்தகால சூழ்நிலையால் பச்சிலைப்பள்ளியில் மிகவும் அதிகளவு அழிந்த பயிர் பனைமரமாகும். இதனால் இப்பகுதிக்கு பலத்த இழப்பு. காரணம் பனையின் பயன்கள் பல்வகை. காற்றரிப்பை தடுப்பது, மண்ணரிப்பை தடுப்பது, மழை வீழ்ச்சியை அதிகரிப்பது, பன்ன வேலைக்கு ஏற்ற ஓலை வழங்குதல், பதனீர், இதர உற்பத்திகள்(கள்), தொழிலாளர்களுக்கு தொழிலை வழங்குதல் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளுக்கு மூலாதாரமாக பச்சிலைப்பள்ளியில் இருக்கும் இயற்கையின் கொடையாகிய பனைமரங்களை பாதுகாக்கவென இப் பிரதேசத்தில் ஓர் அலுவலகம் இருப்பது, செயற்படுவது, செயற்படுத்துவது மிகவும் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சிலைப்பள்ளியின் பெயருக்கே உரித்தான பச்சிலைக் காடுகள் தொடர்ந்து அழிக்கப்பட்டு குறைவடைந்து வருகின்றது. இப் பகுதியில் இயங்கிய காடு வளர்ப்புத் திட்ட செயற்பாடுகள் யுத்த காலத்தின் பின் மீள்குடியேற்றம் இடம் பெற்ற பின் இது வரை மீள்நடுகை செய்யப்படவில்லை. முன்னர் இயங்கி வந்த காட்டுக் கந்தோர் (forest department) இதுவரை மீள் நிர்மாணம் செய்யப்படவில்லை. இதன் காரணமாக சிலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் நிலை இல்லாது போயுள்ளது. பச்சிலைப்பள்ளியின் மழைவீழ்ச்சி அதிகரிப்புக்கென்றே உருவாக்கப்பட்ட தம்பகாமம் காடு வளர்ப்புத்திட்டம் ஆரம்பகாலத்தில் சவுக்கு, சஞ்சீவி, மரமுந்திரிகை, சந்தணமரம் முதலான மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது. நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையால் பெருமளவான சவுக்கு அழிக்கப்பட்டுவிட்டது. மரமுந்திரிகையும் இன்று இல்லை. அதுமட்டுமன்றி காடுவளர்ப்புத் திட்ட காட்டில் சுமார் 2100 ஏக்கரில் குறிப்பிட்டளவு காணி இன்றில்லை. குடியேற்றங்கள் தனியார் ஆக்கிரமிப்பு போன்றவற்றால் திட்ட காணி சுருங்கியுள்ளது. இத்திட்டம் செயற்படுத்தப்பட்டால் இப் பிரதேசத்தின் சூழலுக்கே நன்மை பயக்கும். இத்திட்டம் பச்சிலைப் பள்ளியின் தென்பகுதிக்கும் (கடற்கரையோரம்) விஸ்தரிக்கப்பட வேண்டும். இதன் மூலம் பச்சிலைப்பள்ளியின் இழந்துபோன பசுமைத் தன்மையை மீளப் பெறுவதுடன் சூழல் சமநிலையையும் பேண முடியும். அத்துடன் காற்றரிப்பு, மண்ணரிப்பு என்பவற்றையும் குறைக்க முடியும். சிங்கப்பூர் போன்ற இடங்களில் நடைமுறைப்படுத்தப்படும் காடுவளர்ப்புத் திட்டத்தை (மர நடுகைத் திட்டம்) இங்கும் நடைமுறைப்படுத்தினால் சர்வதேச விதிமுறைகளிற்கு ஏற்ற 32% காட்டை பேணமுடியும்.

யுத்தத்தால் கடுமையாக பாதிப்படைந்த வீதிகளில் இதுவரை ஓரளவு குறிப்பிட்ட வீதிகளே திருத்தப்பட்டது. ஏனையவை குன்றும் குழியுமாக காட்சியளிக்கின்றது. புதிப்பிக்கப்பட்ட வீதிகள் மீண்டும் சிதைவடையத் தொடங்கியுள்ளன. இவை சரியாக சீர் செய்யப்பட வேண்டும் இல்லாவிட்டால் மீண்டும் பழையநிலைக்கே சென்றுவிடும். இதை உரிய துறையினர் இதுவரை கருத்தில் எடுத்ததாக தெரியவில்லை. சில வீதிகள் இரண்டாம் முறை தார் ஊற்றப்பட வேண்டும். இதை விட மக்களிற்கு மிகவும் அவசியமான வீதிகள், இணைப்பு வீதிகள் இதுவரை மீளமைக்கபடவில்லை. அத்துடன் பல சிறு வீதிகள் சீர் செய்யப்படவில்லை. குறிப்பாகக் கூறுவதாயின் வீதி அபிவிருத்தி விரைவுபடுத்தப்பட வேண்டியுள்ளது.

பயிர்ச்செய்கையைப் பொறுத்தவரை நீரேந்து பிரதேசங்கள் பல (குளங்கள்) சீரமைக்கப்பட வேண்டியுள்ளது. குளத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட குளக்கட்டுகள் மறு சீரமைக்கப்படவேண்டிய நிலை காணப்படுகிறது. வடிகால் அமைப்பு சீராக்கப்பட வேண்டும். ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும். மேட்டுப் பயிர்ச்செய்கை பழைய நிலையை அடைய திட்டமிடப்பட்ட வகையில் ஊக்குவிக்கப்பட வேண்டும். நெற்செய்கைக்கான வயல் வாய்க்கால்கள் சீர் செய்யப்பட வேண்டும். நீர் வெளியேற்றும் பகுதியில் உள்ள துரிசுகள் அமைக்கப்பட வேண்டும், சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தப்பட வேண்டும். தேவைக்கேற்ப நீரேந்து பிரதேசங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். இவ்வாறாக திட்டமிட்ட வகையில் நெற்செய்கை, மேட்டுப் பயிர்ச்செய்கையின் வீதத்தை கூட்டக்கூடிய திட்டங்களை செயற்படுத்தினால் பழையநிலைக்கு இவற்றை கொண்டுவர முடியும்.

பச்சிலைப்பள்ளியை பொறுத்தவரை சுகாதாரம், கல்வி வசதிகள் ஓரளவு அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதையும் இவற்றில் உள்ள சில வளங்கள் அபிவிருத்தி அடைய வேண்டிய நிலையிலுமுள்ளது. கல்விதான் எதிர்கால வாழ்க்கையை இப் பிரதேச வளத்தை அபிவிருத்தியடைய வைக்கும்.
"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்தும் ஊறும் அறிவு."
என்பது வள்ளுவர் வாக்கு. அதுபோலவே பிரதேசத்தில் கல்வி அபிவிருத்தியடைய வேண்டும். அதுவே மக்களின் மனப்பாங்கு பொருளாதாரம் அபிவிருத்தி அடைய இட்டுச் செல்லும்.

குறிப்பிட்டுச் சொல்வதானால் பச்சிலைப்பள்ளியின் மீள்குடியேற்றம் தொடர்கின்றது. மீள்கட்டுமானம் தொடர்கின்றது. மீள் அபிவிருத்தி தொடர்கின்றது. சட்ட விரோத செயற்பாடுகள் (மண் அகழ்வு, காடழிப்பு) தொடர்கின்றது. பச்சிலைப்பள்ளி பிரதேசம் கடல் மட்டத்தில் இருந்து சராசரியாக 3' தான் இருக்கலாம். சட்ட விரோத மண்ணகழ்வு தொடர்ந்தால் பச்சிலைப்பள்ளியின் நிலப்பரப்பு பதிவாகி கடல்நீர் இருகரையாலும் தரைக்குள் உள்வரக்கூடிய நிலையே எதிர்காலத்தில் ஏற்படலாம். இடப்பெயர்வுக்கு முன் சுமார் 5300 குடும்பங்களைச் சேர்ந்த 18000மக்கள் வாழ்ந்ததாக அறிய முடிகின்றது. இன்று மீள்குடியேறிய நிலையில் சுமார் 4503 குடும்பங்களைச் சேர்ந்த 14240 மக்கள் வாழ்வதாக அறிகின்றோம். அண்ணளவாக இதன் தரை அமைப்பு சுமார் 7கி.மீ அகலத்தையும் 25கி.மீ நீளத்தையும் இன்னும் தெற்கே கடல்நீர் பிரதேசத்தையும் வடக்கே ஆற்று நீர் பிரதேசத்தையும் உள்ளடக்கியுள்ளது. இதன் எதிர்காலம் திட்டமிடப்பட்ட அபிவிருத்தியின் கையில் தங்கியுள்ளது.

தவறு நேர்ந்து விடுமோ என்று
அஞ்சி அஞ்சி எந்தச்
செயலையும் செய்யாமல்
பின்வாங்குவது இழிவானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (சு)வாசியுங்கள்

பளையூர் செ. கஜானன்
புலோப்பளை,
பளை.

மனனம் மறையும் நூற்றாண்டில் - எம் ஜனனங்கள்
செயற்கை ஒளிர்வில் புலர்வும் இருளுமாய்
இயற்கை எங்கோ பயந்து ஒழிந்து கொண்டது
இணைய உலகினுள்ளே
விழியை நகர்த்திவிட்டு - மனது
ஓர் பாடலுக்கு யாடைகாட்ட விளைகிறது
ஓடைகளிலே மீன் தேடும் நாரைகளாய்
ஒற்றைக் காலில் நின்று
ஒரு தொகுதி நேரத்தை
ஒய்யாரமாய் செலவு செய்கிறோம்.

மெய்யார உணர நீ வாசிப்பாய்
அழகு முதுமை கண்டால் குறையும்
அறிவு முதுமை கண்டால் நிறையும்
என்றாவது ஓர் நாள் உன் சுவாசிப்பை
உணர்ந்ததுண்டோ?
வாசிப்பை சுவாசிப்பாக்கு
சுவாசிப்பை உணர்விலேற்று
வளியில் பல கலவையுண்டு - அதில்
ஒட்சிசனைப் பிரித்து உள் இழுப்பது போல
வாசிப்பிலும் பயனுறு விடயம் நுகர்

கேடில்லா உலகம் செய்ய
கெடுதலற்ற விடயம் கேள்
யடமல்ல நாம் மனிதர்கள் - உன்
இடங்கள் எங்கும் நூலகங்கள் நாடு - அங்கே
உவகையோடு கையில் நூலை ஏந்து
மறைகள், மருத்துவக் குறிப்புக்கள்,
மகான்களின் வாழ்க்கை வரலாறுகள்
அரசியல், அறிவியல், அருஞ்சிந்தனைகள்
அழிவுறா வரலாறுகள்
தெளிவுறப்படி தெளிந்து பிறரை வழிப்படுத்து

குலங்கள், மதங்கள், இனங்களென்று
இன்னும் எமக்குள் பிரிப்புக்கள்
கரங்கள் முழுதும் ஆயுதங்கள் - உயிர்
கவர்ந்து போகும் போராட்டங்கள்
பரந்த உலகம் எங்கிலுமே
பரவிக் கிடக்கும் கந்தகங்கள்
விரைந்து அவற்றை அகற்றிடுங்கள் - மிக
விருப்புடனே (சு)வாசியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்ட கடன்.....

**திருமதி. உமா கணேசநாதன்**
**மேற்பார்வை குடும்பநல உத்தியோகத்தர்,**
**பளை.**

அவனால் தாங்கமுடியவில்லை. மனம் நிலைகுலைந்து தவித்தது. இப்படி வார்த்தையை அள்ளிக் கொட்டிவிட்டாள் மகள். எவ்வளவு கஷ்டப்பட்டு ஒரு பிள்ளையை வளர்க்க வேண்டியுள்ளது. இது அவளுக்கு எங்கே தெரியப்போகிறது. பிள்ளைக்கு பிடிக்கும் என்று பார்த்துப்பார்த்து செய்திருப்பான். அதுவும் முதல் பெண்குழந்தை என்றாலே எல்லா தந்தைக்கும் இருக்கும் சந்தோசத்தை விட பலமடங்கு அவனுக்கு. ஆனால் பதினெட்டு வயது தாண்டியதும் எல்லாப் பிள்ளைகளும் இப்படித்தான் நடந்து கொள்வார்களா? எங்கடை அப்பாக்கு நாங்கள் எவ்வளவு பயமும் மரியாதையும் காட்டியிருப்பம் ஒரு நாளும் திருப்பிக் கதைக்கவே இல்லை அவன். ஒருநாள் தங்கைக்கு விழுந்த அடியைப் பார்த்துத்தான் அவன் பயப்பட வேண்டிவந்தது. அல்லது மரியாதை தான், பயம் இல்லை. இதனால் பிள்ளைகளுக்கு அடிக்கக்கூடாது என்பது அவன் கொள்கை. ஆனால் கண்டிக்க வேண்டிய நேரம் தவறுவதும் இல்லை. சிறுவயதில் மகள் அப்பாவில் நல்ல பிரியமாக இருப்பாள். இரண்டு பேரையும் அன்பால் குளிப்பாட்டியபடிதான். இரண்டாவது பையன் பிறக்கும் வரை அவளின் தனி ஆட்சிதான். பின்னர் தம்பியுடன் மிகவும் பாசமாக இருப்பாள். இப்படியிருந்த மகளா இவள். அவனால் நம்பவே முடியவில்லை.

அவர்களது குடும்பம் இடைநிலையானது தான். இரண்டுபேருமே வேலைக்குப் போனால்தான் குடும்பநிலையை சமாளிக்க முடியும். இதனால் பிள்ளைகள் மூவரையும் வளர்க்க பெரும்பாடு பட்டார்கள். மூன்றாவது பெண் குழந்தை பிறந்து ஆறுமாதம் சென்றவுடன் கருத்தடை சத்திரசிகிச்சை செய்து கொண்டான் அவன். ஏனென்றால் மனைவி செய்தால் அது சற்று பெரிய சத்திரசிகிச்சை என்பதாலும் குழந்தையை விட்டுச் செல்ல முடியாமையும் தான் அதற்குக் காரணமாக இருந்தது. வேலையை விட்டால் நல்லது போல் தோன்றியபோதெல்லாம் கடன்சுமை கூடிவிடும். ஏதாவது மருத்துவச் செலவு ஏற்பட்டுவிடும். இதனால் மனைவி தன்னால் முடியும்வரை செய்வதாகவும், இயலாமல் போகும்போது ஓய்வு எடுப்பதாகவும் கூறினாள். அவள் ஆசிரியராக உள்ள படியால் ஓரளவு சமாளிக்க முடிந்தது. இருபது வருட சேவைக்காலம் முடிவடைந்தபின் ஓய்வு கொடுப்போம் என்று கூறியவள் தொடர்ந்து வேலைக்கு செல்கிறாள். இத்துடன் சிறிய வீட்டுத்தோட்டமும் செய்கிறார்கள். இருபது தென்னை, ஒரு ஏக்கர் வயல் என்று வருமானம் ஓரளவு திருப்தியாக இருந்தது. இருவரும் தனித்தனி மோட்டார் சைக்கிள் வைத்திருந்தார்கள். இலகுவாக இருந்தது. பிள்ளைகள் இருவருக்கும் துவிச்சக்கர வண்டி இருந்தது. இதனால் அவர்கள் மேலதிக வகுப்புகளுக்கு செல்ல உதவியாக இருந்தது. சாதாரண வாழ்க்கைதான். ஆனால் மிகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியான குடும்பம் அவர்களது. இப்படியிருக்கும் போது இது என்ன புதுக்குழப்பம்...... இப்படி வார்த்தையை கொட்டிவிட்டாளே மகள். அவள் இப்போது சின்னச்சின்ன கோபம் கொள்கிறாள் தான். வேலைக்கு சென்று வருவதால் என்று அதனை பெரிதுபடுத்துவது இல்லை. படிப்பு முடிந்தவுடன் வேலை கிடைத்து விட்டது. முகாமைத்துவ உதவியாளர் சம்பளம் போதாதுதான். ஆனால் பிடித்துக் கொண்டு விட்டது. ஆசிரியராக வேண்டும் என்று எண்ணியிருந்தாள். ஆனால் கிடைத்த வேலையை செய்கிறேன் என்று கிளம்பிவிட்டாள். வேலை கிடைத்து ஒருவருடம் தான் ஆகிறது. ஆனால் ஏதோ எல்லாம் சாதித்து விட்டதாக எண்ணுகிறாள் போலும்.

"உங்களுக்காகத்தானே நான் கஸ்டப்பட்டு உழைக்க வேண்டியிருக்கு.... பிறகு குறுக்குக் கேள்விகள் கேட்கிறியள்" என்ற வார்த்தை அம்பு போல் பாய்ந்து வந்தது. அவனின் அந்தநேர மனநிலை நன்றாக இருந்தமையால் அப்போது அவன் ஒன்றும் கதைக்கவில்லை. ஆனால் அவளின் வார்த்தைகளால் ஏற்பட்ட நெருடலை நிறுத்த முடியவில்லை. இவ்வளவு காலமும் அவன் தன் குடும்பத்திற்காகவும், மனைவியின் குடும்பத்திற்காகவும் எல்லா கஷ்டமும் அனுபவித்து விட்டான். இனிமேலாவது நிம்மதி என்று எண்ணியபோது மகள் புது பிரச்சினையுடன் வந்துநிற்கிறாள்.

மகளின் வருமானம் நிதித்தேவைக்கு மேலதிகமாக இருந்தாலும், அவளுக்கு தேவையான நகை பணம் எல்லாத்திற்கும் சேமிப்பில் சென்று கொண்டிருக்கிறது. மகளின் வருமானம் எதுவும் பெற்றுக் கொள்ளக்கூடாது என்று மனைவியிடமும் கூறியிருந்தான். ஆனாலும் சிலசமயம் ஏதாவது திருமணம், மருத்துவச் செலவு, பிரயாணச் செலவு என்கிறபோது அவளாகவே தந்துவிடுவாள். அப்படி புரிந்துணர்வுடன் செயற்படும் மகளா இவ்வாறு கதைத்தாள். அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை. பெண்கள் வேலைக்கு சென்று உழைத்துத்தான் குடும்பம் நிமிர வேண்டும் என்று இல்லை. வீட்டிலிருந்தே வருமானம் பெறும் எவ்வளவு கெட்டிக்காரப் பெண்களை அவன் பார்த்திருக்கிறான். படிக்கத்தான் வேணும் படித்து விட்டு வீட்டிலிருப்பது ஒன்றும் வெட்கமான செயல் இல்லை. பெண்கள் வேலைக்கு செல்வதால் மூன்று சுமைகளைச் சுமக்க வேண்டியுள்ளது. வேலைக்கு செல்வது, வீட்டு வேலை, கர்ப்பம் - தாய்ப்பாலூட்டல் என்று குழந்தை வளர்ப்பு....... என்னதான் கணவன் ஒத்தாசையாக இருந்தாலும் பொறுப்பாக அவள்தான் கொண்டு நடத்தவேண்டியுள்ளது. சில பெண்கள் வேலை செய்வது கௌரவம் என்று கூறிக் கொண்டு பொழுது போக்காகச் சென்று கடமையுணர்வுடன் வேலை செய்பவர்களையும் குழப்பியடிக்கிறார்கள்.

திருமணமாகிய புதிதில் வேலைக்கு செல்ல வேண்டாம் என்று மனைவியிடம் கூறிப்பார்த்தான். ஆனால் அவர்களுக்கு காசுத்தேவை அதிகம் இருந்தமையால் வற்புறுத்தி கூறவும் அவனால் முடியவில்லை. சில ஆண்கள் மனைவி வேலைக்குச் சென்றாலும் உதவி செய்ய மாட்டார்கள். கேட்டால் அம்மாவின் வளர்ப்பு அப்படியென்று அம்மாவில் பழிபோட்டு விடுவார்கள். மூன்றாவது முறையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகட்ட, பொருட்கள் வாங்க அவளின் பணம்தான் உதவியது. அவர்கள் இருவரிடமும் பெற்றோரின் சொத்து என்றால் கல்வி மட்டும் தான். கடன் என்று ஏதும் வைத்துச் செல்லவில்லை. பிள்ளைகளுக்கென்று அவனால் சிறிது சேமிக்கவும் முடிந்தது. இதனால் பிள்ளைகள் தங்கள் மேற்படிப்பையும் தொடர முடிந்தது. இதைவிட ஒவ்வொருவருக்கும் சிறிய காணித் துண்டொன்றும் வாங்கி விட்டிருந்தான். போடுவதற்கு சிறிது நகையும் சீதனமாகக் கொடுப்பதற்கு கொஞ்சபணமும் சேர்த்தால் போதும். இப்போ பவுண் விக்கிற விலையில் யார் பொன் போடுகிறார்கள். கள்ளரின் கைவீச்சு ஒரு பக்கம் பவுணின் விலையேற்றம் மறுபக்கம் என்று அவனைப் போன்ற மத்தியதர குடும்பங்களை எவ்வாறு பாதிக்கின்றது என்று எண்ணினான். எங்கேயோ கேட்ட "நடக்கும் என்பார் நடக்காது நடக்காது என்பார் நடந்துவிடும்" என்கிற பாடல் அவனை இவ்வுலகிற்கு கொண்டுவந்தது. நாம் நினைப்பது எதுதான் நடந்தது, எல்லாம் அவன் செயல் என்று எண்ணியபடி படுக்கைக்குச் சென்றான். உறக்கம்வர மறுத்தது. திரும்பத் திரும்ப மகளின் பேச்சு காதில் ஒலித்த வண்ணம் இருந்தது. வேறுயாரும் கூறியிருந்தால் பொருட்படுத்தியிருக்கமாட்டான். மூத்தமகள்..... கண்ணுக்கு கண்ணாக வளர்த்தவன்...... அப்பா என்ற பெயரை கொடுத்தவள்..... அன்பானவள்....... இப்படி மாறிவிட்டாளே.......

வேலைக்கு செல்ல ஆரம்பித்ததும் பல இடங்களிலிருந்து திருமணத்திற்கு தேடி வந்தார்கள் ஆனால் மகள் மறுத்துவிட்டாள். அவளும் சிறுபிள்ளைதானே..... சிறிது காலத்திற்கு சுதந்திரமாக வாழட்டும் என்று விட்டுவிட்டான். ஆனால் ஒருநாள் மகள் கூறியதைக்கேட்ட போது பயந்து விட்டான். அவளுடன் வேலை செய்யும் ஒரு பையன் திருமணம் செய்து கொள்வதற்கு கேட்டதாகவும் பெற்றோரிடம் வந்து கதைக்கும்படி கூறியதாகவும் கூறினாள், பையனின் பெயரைக் கேட்டபோது மனைவி துள்ள ஆரம்பித்து விட்டாள். "அவனுக்கு எவ்வளவு துணிச்சல்......... எப்படி உன்னிடம் கேட்பான்...... ஏதும் தேவையென்றால் பெற்றோர் மூலம் கேட்பது தானே...... என்ன பழக்கம்..... என்று பொரிந்து தள்ளினாள். அவன் எதுவும் பேசவில்லை. ஒரு சொல்லில் கூறிவிட்டான் "நீர் என்ன நினைக்கிறீர்" என்று மகளிடம் கேட்டான். மகள் "எனக்கு எதுவும் இல்லையப்பா, நீங்கள் எடுக்கும் முடிவுதான்" என்றாள். "அப்பசரி" "அவர்களின் குடும்பத்துக்கும் எங்களுக்கும் சரிப்பட்டு வராது என்று அவன் மீண்டும் கதைத்தால் கூறிவிடு" என்றான். அதன் பின் இது பற்றிய கதை எதுவும் வரவில்லை மனைவிக்கும் கூறிவிட்டான் எதுவும் கதைக்க வேண்டாம் என்று.

எப்படி உறங்கினானோ தெரியாது. அதிகாலை 5 மணிக்கு கோயில்மணி கேட்டு முழிப்புக்கு வந்தவன் கண்களை திறக்கமுடியாது கஷ்டப்பட்டான். சிறிது நேரம் படுத்திருந்து கண்களை அழுத்தித் தேய்த்து மெதுவாக எழுந்து சிறிது நேரம் இருந்து கண்மூடிய படியே கண்களை அசைத்துப் பார்த்து கண்களைத் திறந்தான். வழமையாக 4.00 மணிக்கு எழுந்திடும் அப்பா இன்னமும் எழும்பவில்லை என்று மகள் எண்ணினாளோ தெரியாது அறைக்குள் வந்து "என்னப்பா கண்கள் சிவந்திருக்கு காச்சல் அடிக்குதோ" என்று கேட்டபடி நெற்றியை தொட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தாள். அவளுக்கு எதுவும் கூறாது எழுந்து காலைக்கடன்களை முடிக்கச் சென்றார். இது மகளுக்கு புதிதாக இருந்திருக்க வேண்டும். திகைத்து நின்று விட்டாள்.

கிணற்றடியால் வந்தபோது மகளும் மனைவியும் சமையலறையில் கடகடத்துக் கொண்டிருந்தார்கள். அங்கு சென்றபோது தேநீரை நீட்டினாள் மகள். எங்கேயோ பார்த்துக் கொண்டு தேநீரை வாங்கியவன் முற்றத்தில் இருந்த மரத்தின் கீழ் சென்று அமர்ந்தான். எப்போதும் காலையில் குடிக்கும் தேநீரை இரசித்துக் குடிப்பது அவன் வழக்கம். இல்லாவிடில் அன்று பொழுது விடியாதது போலிருக்கும். மனைவிதான் தேநீர் தருவது வழக்கம். இன்று மகள் முந்திக்கொண்டு விட்டாள். நேற்றைய சம்பவம் உறைந்திருக்கும் போல்..... அடுத்ததாக உணவு எடுத்து வைத்தாள் மகள். அன்று அவனுக்கு வேண்டிய எல்லாம் மகள்தான் செய்தாள். பின்னர் "அப்பா நானும் உங்களுடன் வருகிறேன்" என்றாள். அதற்கு மறுத்துவிட்டு கிளம்பியவன் மகள் அவசரமாக ஓடிவருவதைக் கண்டு நின்று விட்டான். எப்படியும் ஆசையாசையாய் பெற்று வளர்த்த பிள்ளைகள் துன்பப்படுவதை எந்தப் பெற்றோராவது விரும்பமாட்டார்கள் தான். இருவரும் எதுவுமே பேசவில்லை. அலுவலகம் செல்லும்வரை மௌனத்திலேயே கரைந்தது. மகள்.... தகப்பன் உறவு எப்படியானது...... அப்பா என்பவன் யார்...... அவன் எப்படிப்பட்டவன்..... ஏன் சில கண்டிப்புகளை அவன் விதிக்கிறான்...... ஏன் பல சந்தர்ப்பங்களில் மௌனமாக இருக்கிறான்....... என்று பிள்ளைகள் விளங்கிக் கொண்டால் பிரச்சினைகள் வரவே வாய்ப்பில்லை.

மாலை வீடு திரும்பியவுடன் மகளைத் தேடிப் பார்த்தார்.... காணவில்லை. "இன்னும் உங்கள் அருமை மகள் வரவில்லை" என்று மனைவி கூறினாள். தோளுக்குமேல் வளர்ந்துவிட்ட பிள்ளைகள்........ அடிக்கவும் முடியாது...... முள்ளில் சேலை பட்டால் எடுப்பதுபோல் கதைக்க வேண்டும். எப்படி நன்றாக சிறு வயதில் வளர்த்தாலும் சிலபிள்ளைகள் சூழ்நிலை காரணமாக மாறிவிடுகிறார்கள். அத்துடன் சுயநலமும் தோன்றி விடுகிறது போலும். எங்கடை காலத்தைப்போல் நாம் இப்போதும் எண்ணிவிட முடியாது. "பெற்றோரின் அடிக்கு அடங்கி வளர்ந்த கடைசித் தலைமுறையும், பிள்ளைகளுக்கு அடங்கி பயந்து வாழும் முதல் தலைமுறையும் நாங்கள்தான்" என்று ஒரு நண்பன் கூறியது ஞாபகம் வந்தது.

கதவுச்சத்தம் கேட்டது. மகள் வந்துவிட்டாள். இன்று அவளுடன் கதைத்து முடிவு எடுக்கவேண்டும் என எண்ணியவன் அவளை நோக்கி நடந்தான். அழுதிருப்பா போலும்....... கண்கள் தாண்டு முகம் சோர்வாகக் காணப்பட்டது. வழமையான மகிழ்ச்சியைக் காணவில்லை. சில நாட்களாக அவளின் நடவடிக்கை எதுவும் சரியில்லை..... வார்த்தைகளும் சரியில்லை...... வேலைக்கஷ்டத்தினால் அப்படிப்போலும் என்று எண்ணியவன் எதையும் கண்டுகொள்ளவில்லை. ஆனால் இனியும் இப்படியே விட்டுவிட்டால் பிரிவு..... வீண்விதண்டாவாதம் என்பன ஏற்பட்டுவிடும்...... ஆரம்பத்திலேயே தீர்த்துவிட வேண்டும்........ இன்று எப்படியும் மகளுடன் கதைப்பது என்று எண்ணிக்கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று உணவுக்குப்பின் நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. மற்றவர்கள் உறங்கிவிட மனைவியும் மகளும் மட்டும் தனித்திருந்தார்கள். அவன் அருகே சென்றதும் மகள் ஓடிவந்து தந்தையை இறுக அணைத்து அழத்தொடங்கிவிட்டாள். சிறிது அழுது முடியட்டும் என்று தலையைத் தடவி ஆசுவாசப்படுத்தினான். மனைவி இருவரையும் மாறிமாறிப் பார்த்தாள்.

மகள் படபடவென்று கொட்டி முடித்தாள். திருமணம் செய்யும்படி கேட்ட பையன் தன்னை தொடர்ந்து தொந்தரவு செய்ததாகவும்....... நான் கூறிய முடிவை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும்...... வாழ்ந்தால் உன்னோடு....... மடிந்தால் மண்ணோடு....... என்று கூறிக்கொண்டு இருந்ததாகவும்..... அதனை பெற்றோரிடம் சொன்னால் வேலையை விடச் சொல்வார்கள் என்று கூற முடியாமல் குழம்பியதாகவும் கூறிமுடித்தாள்.

"அட இவ்வளவுதானே...... காதலிப்பது பிழை இல்லை..... ஆனால் எங்கள் தகுதி, தரம் பார்த்து வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேணும்...... சரியம்மா நாங்கள் அவனுடன் இலகுவாக கதைத்து விளங்கப்படுத்துறம்" என்று ஆதரவாக கூறினான் அவன்.

இல்லையப்பா அவன் மாற்றலாகி செல்கிறான். இன்று என்னிடம் நன்றாக கதைத்துவிட்டுச் சென்றான். எல்லாவற்றையும் மறந்து விடும்படி கூறினான்.

"சரி சரி அப்படியென்றால் பிரச்சினை தீர்ந்துவிட்டது. பிறகென்ன...... இனி மகளுக்கு எந்தத் துன்பமும் இல்லைத் தானே.... அம்மா அப்பாவுடன் நன்றாக கதைக்க முடியும் தானே...... அப்ப திருமணம் பேசி முடித்துவிடுவம் என்னடா...... உமக்கு பிடிக்காததை நாங்கள் செய்ய மாட்டம்.... பெற்றோர் பிள்ளைகளுக்கு எப்போதும் நல்லதைத்தான் செய்வினம். முற்பிறப்பிலை பட்ட கடனை வாங்கத் தான் பிள்ளைகளாக பிறக்கிறார்களாம். அதாலை எங்களுக்கென்று ஒரு கடமை இருக்கு. அதைச் செய்வதற்கு பிள்ளைகளும் சேர்ந்து இருந்தால் வெற்றிகரமாக மகிழ்ச்சியான குடும்பத்தை அமைத்துக் கொள்ள முடியும்" என்று பெரிய விரிவுரை ஒன்றை நிகழ்த்தியவன் மகளின் நெற்றியில் முத்தமிட்டுவிட்டு உறக்கத்திற்குச் சென்றான்.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயம் செல்வதை விட நூலகம் செல்வது சிறப்பு

நவரத்தினராசா நிரோசன்
முல்லையடி,
பளை.

மதம், மதவெறி, மதவேறுபாடு மதத்தின் பெயரால் பிளவுபட்டிருக்கும் ஒரு தாய் மொழியைப் பேசும் மனித சமூகத்தின் மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய நவீன யுகத்தில் மனிதனை மனிதன் திறமைசாலியாகவும் ஆளுமை மிக்கவனாகவும் புரிந்து நடக்கக் கூடிய புத்திசாலியாகவும் நிலைநிறுத்துவதற்கு அவனிடம் காணப்படும் அழியாச் செல்வம் கல்வி மட்டும் தான்.

இப்படிப்பட்ட அழியாச் சொத்தான கல்வியை எப்படி சேகரிக்க முடியும்....! எங்கிருந்து பெற்றுக் கொள்ள முடியும்....! என்ற கேள்விகளுக்கு விடையாக இருக்கும் பல பதில்களில் ஒன்றுதான் நூலகம் ஆகும். நூலகம் என்பது பல்வேறு பட்ட ஆயிரக்கணக்கான நூல்களை (புத்தகங்களை) இருப்பிடமாகக் கொண்ட இடமாகும்.

அதாவது நாம் ஏன் கல்வி கற்க வேண்டும் என பலருக்கு இன்றும் தெரிவதில்லை. கல்வி கற்றவர்களில் கற்ற கல்வியை வாழ்க்கையில் எப்படி பயன்படுத்துவது என தெரிவதில்லை. இன்றைய கல்வி முறையும் கல்வி கற்பதற்கான நோக்கும் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்பதுதான். எனவே பரீட்சைக்காக படிக்க வேண்டும். பரீட்சைகள் எல்லாம் நிறைவடைந்தால் படித்தது எல்லாம் மறந்துபோகும் நிலைமையும், பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தாம் வாழ்க்கையில் வெற்றியடைந்தவர்கள் போல் பரீட்சைப் பெறுபேறுகளை வைத்து வேலைகளை தேடுகிறார்கள். பரீட்சையில் தோல்வியடைந்தவர்கள் தமக்கும் கல்விக்கும் ஆகாது, ஒத்துவராத ஒரு விடயமாக கருதி படிப்பை முடித்துக் கொள்கிறார்கள். ஆனால் கல்வியின் தூண்கள் என்ன என்பதை அறிந்து கொண்டால் பரீட்சைக்காகப் படிப்பது மட்டும் படிப்பல்ல. அவற்றைக் கடந்து பல தூண்கள் கல்விக்கு உண்டு என்பதையும் கற்றுக்கொள்வார்கள். ஐ.நாவின் 1996ஆம் ஆண்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ள கல்வியின் பிரதான நான்கு தூண்கள் இவைதான்.

- ❖ அறிவதற்காகக் கற்றல்
- ❖ செய்வதற்காகக் கற்றல்
- ❖ இணைந்து வாழ்வதற்காகக் கற்றல்
- ❖ நிலைத்திருப்பதற்காகக் கற்றல்

கல்வியானது இயற்கைக்கேற்ப வழங்கப்படும் ஒரு செயற்றொடராகும். பிள்ளையின் கல்வியை அவரவர் ஆற்றலுக்கும் தேவைகளுக்கும் விருப்புகளுக்கும் ஏற்ப வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் கல்வி மீதான பற்றும் விருப்பும் பிள்ளைகளின் மத்தியில் உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக் காலத்தில் நாம் கற்றுக் கொள்ளும் கல்வியானது அறிவதற்காகக் கற்றல் ஆகும். எந்த விடயமும் அறிந்திராத நாம் சிறுவயதில் பாடசாலைக் கல்வி மூலம்தான் பல விடயங்களை அறிந்து கொள்ள முடிகிறது. அதே பாடசாலையில் நாம் அடுத்த அடுத்த கட்டங்களை தாண்டிச் செல்ல வேண்டும் எனில் பல பரீட்சைகளையும், கணிப்பீடுகளையும், செயற்றிட்டங்களையும் செய்து முடித்து அதில் வெற்றியடைந்து அடுத்த படியில் கால் பதிப்பதற்கு முயற்சிக்க வேண்டும். இதுவே செய்வதற்காகக் கற்றல் ஆகும். இங்கு தான் பல புத்தாக்க செயற்பாடுகளும் புதிய தொழிநுட்பக் கண்டுபிடிப்புக்களும் உருவாகிறது எனலாம்.

இணைந்து வாழ்வதற்காகக் கற்றல், நிலைத்திருப்பதற்காகக் கற்றல் என்ற இரண்டும் மிக முக்கியமான விடயங்கள் ஆகும். ஆனால் இன்று நாம் அழிபாதை நோக்கிச் செல்வதற்கான காரணம் இதுதான். இவ்விரு விடயத்தையும் கற்றுக் கொள்ளாத காரணத்தால் தமிழினமே தவறான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது என்று தான் கூறவேண்டும்.

"என்னுடைய வாழ்நாட்களில் ஆலயத்திற்கு செல்வதை விட நூலகத்திற்கு செல்வதை சிறப்பாக எண்ணுகிறேன்."

பிள்ளையார் சிலையொன்று வைத்தேன் அன்று - அதில்
புத்தர்சிலை ஒன்று முளைத்தது இன்று
புத்தக நிலையம் ஒன்றை கட்டினேன் அன்று
புத்தரே வர அஞ்சுகிறார் படித்த சமூகம் இது என்று
புத்தியால் உயர்வோம் தமிழனாய்
யுத்திகள் பல செய்து எவர் எமை தீ வைத்து அழிப்பினும்
சத்தியம் செய்து சாவிலும் தமிழ் வளர்ப்போம்.

அன்றைய காலத்தில் தெற்காசியாவின் மிகப்பெரிய நூலகம் யாழ்ப்பாணப் பொது நூலகம் ஆகும். அதற்கான காரணம் அன்றைய காலத்தில் வாழ்ந்த எமது முன்னோர்கள் நிலைத்திருப்பதற்காகக் கற்றல் முறையை அதிகமாக நேசித்துள்ளனர். அதனால்தான் தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகள் பழமையானவர்கள் எனக்கூறும் வரலாற்று நூல்களை ஆவணமாகவும், அறிவுப் பொக்கிசமாகவும், இலக்கிய ஆதாரமாவும் கொண்டுள்ளார்கள் எனலாம்.

ஆனால் நாம் இன்று நூலகம் செல்வதே அரிது. புத்தகங்களை வாசிப்பதும் அரிதாகிவிட்டது. வாசிப்புப் பழக்கம் குறைவடைந்து புத்தகங்களை தேடிப்படிக்கும் ஆற்றல் குறைவடைகிறது. இவர்களின் தேடல் முகநூல்களில் மட்டும்தான். இன்றைய இளம் சமூகத்திற்கு முகநூல் என்ற நூலைத்தான் அதிகமாக தெரிகிறது. அங்குதான் தேடிக்கொண்டிருக்கிறார்கள். புகைப்படங்களுக்கு எத்தனை விருப்புக்கள் கிடைத்துள்ளது என இவர்கள் நூலகங்களை தேடிச் செல்வது கிடையாது. இன்று மாறாக இவர்கள் தொலைபேசி விற்பனை செய்யும் கடைகளை தேடிச்சென்று அங்கு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொடுதிரை தொலைபேசிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வனவு செய்கிறார்கள். அங்கு மட்டும்தான் இவர்களுடைய தேடல் மெய் எது பொய் எது என வித்தியாசம் அறியாது அனைத்து தகவல்களுக்கும் விருப்பு தெரிவித்துவிட்டு அங்குள்ள செய்திகளை படித்துவிட்டு ஆதாரமற்ற மனிதர்களாகி அலைபேசியும் கையுமாக அலைகிறோம். நூலகங்கள் சுற்றுலாத்தளங்கள் போல் ஆகிவிட்டது எமக்கு. எப்போதாவது ஒரு தடவை நூலகத்திற்கு செல்லும் நபர்களும் எப்போதும் நூலகப் பக்கம் செல்லாத நபர்களும் தான் இன்று எம்மில் பலர். இணையம் இருக்கிறது இனி என்ன குறை. இங்கே அனைத்தையும் தேடி அறிந்து கொள்ள முடிகிறது. நமக்கு எதற்கு நூலகம்? நாம் ஏன் புத்தகங்களை தேடிச் செல்லவேண்டும்? என்பது உங்களின் கருத்தாக இருந்தால் அங்குதான் நாம் நிலைத்திருப்பதற்கான கற்றல் முறையை கைவிட்டு அழிபாதை நோக்கிச் செல்கிறோம். சுயமாக ஒரு புத்தகம் எழுதத் தெரியவில்லை. சுயமாக சிந்தித்து ஓர் கணக்கு செய்யத் தெரியவில்லை, சுறுசுறுப்பாக ஒரு பொருளை உற்பத்தி செய்ய முடியவில்லை. எல்லாம் இயந்திரத்தையும் இணையத்தையும் நம்பி நம்பி நம்மீதுள்ள நம்பிக்கையை நாமே இழந்து நிற்கும் நிலைதான் இன்று....! அதாவது நவீன தொழிநுட்பங்கள் இலகுவாக கற்கும் முறையை சொல்லித்தருகிறது. ஆனால் இலகுவான எதுவும் இவ்வுலகில் நிலைத்து நிற்பதில்லை என்று தான் கூறவேண்டும். ஒன்றில் அவை மாற்றமடையும் அல்லது காலப்போக்கில் அழிவடைந்து போகும்.

செயற்கைக் கோள்கள் செயலிழந்துவிட்டால் இணையமெல்லாம் இறந்து விடும். ஆனால் புத்தகங்கள் இறந்து போவதில்லை இங்கே....! அருகிலுள்ள நூலகங்களை சிறந்த முறையில் பயன்படுத்தி பயன்பெறுங்கள்.

**''கல்வி உங்களிடம் கடவுளானால் நீங்கள்**
**வழிபடச் செல்லும் சிறந்த இடம் நூலகமாகும்.''**

இழந்தது எதுவாயினும்
அதைவிட சிறந்ததை
அடைந்தே தீருவேன்
என்ற துணிவே
தன்னம்பிக்கை.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இசைக்கலை

சி.ஜெயதர்ஜினி
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்,
பச்சிலைப்பள்ளி.

தமிழ் மக்களால் தொன்று தொட்டு வழங்கி வருகின்ற கலைகளில் இசைக்கலை முதன்மை பெறுகின்றது. இக்கலையை உணர்ந்து முதன் முதலில் வழங்கியவர்கள் தமிழ் மக்களேயாவார். மனிதனின் மன ஆழத்திலிருந்து அழகுணர்ச்சியையும் அளவில்லாத உற்சாகத்தையும் மகிழ்வையும் தருவதோடு நிறைவாக ஆன்ம ஈடேற்றத்திற்கும் வழிவகுக்கின்றது எனலாம்.

இசையானது தெய்வத்தோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. இதனை

"இசையால் வசமாகா இதயமெது
இறைவனே இசைவடிவம் எனும் போது"

எனும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. சிவன் கையில் உடுக்கும் கண்ணன் கையில் புல்லாங்குழலும் சரஸ்வதி கையில் வீணையும் என தெய்வங்கள் இசையோடு ஒன்றித்த நிலையில் உள்ளன. மனிதனது வாழ்க்கையிலே பிறப்பு தொடக்கம் இறப்பு வரையான காலப்பகுதியானது தாலாட்டுப்பாடல் தொடக்கம் ஒப்பாரிவரை இசையுடன் இணைந்த நிலையில் காணப்படுகின்றது.

இந்தவகையில் பச்சிலைப்பள்ளி பிரதேசமானது இசைக்கலைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு பிரதேசமாக விளங்குகின்றது. இங்கு இசையுடன் கூடிய பாடல், உடுக்கடித்து இசையுடன் பாடல், வாத்தியங்கள் இசைப்பது, கூத்துக்கள், இசைநாடகங்கள் என்பன குறிப்பிடத்தக்கன. இங்கு இக்கலையானது மன்றங்களினூடாக வளர்ந்து வருவதனையும் காணமுடிகின்றது. மன்றங்களினூடாக வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், தபேலா, உடுக்கு, ஆர்மோனியம் போன்ற வாத்தியக் கருவிகள் பயிற்றுவித்தலுடன் கூத்துவகைகள், வில்லிசை, நாட்டார் பாடல், இசை நாடகங்கள் போன்றவற்றைப் பயிற்றுவிக்கின்ற அண்ணாவிமார்களும் காணப்படுகின்றனர்.

அம்மன்றங்களானது பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக கலாச்சாரப் பிரிவு உத்தியோகத்தர்களின் ஊக்குவித்தலோடு இயங்கி வருகின்றது. சிறப்பாக இயங்குகின்ற மன்றங்களிற்கு இசைக்கருவிகள் வழங்குகின்ற முறையும் காணப்படுகின்றது. இவ்வாத்தியங்களினை மாணவர்கள் பயில்வதனூடாக தங்களின் கலை உணர்வை வளர்த்தெடுக்கக் கூடியதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரதேச மாணவர்களினால் கலாச்சார விழா, வாணி விழா போன்ற நிகழ்வுகளில் பஞ்சபுராணம், பிரதேச கீதம், தேசிய கீதம் போன்றவை இசைத்தல் இடம்பெறுகின்றது. வாய்ப்பாட்டு நிகழ்வுகளிற்குப் பக்கவாத்தியமாக மிருதங்கம் வாசிப்பவர்களும் உள்ளனர். மிருதங்கம் மட்டுமன்றி தபேலா, ஆர்மோனியம் போன்ற வாத்தியங்களை வாசிப்பவர்களும் உள்ளனர்.

சிறுதெய்வக் கோவில்களில் உடுக்கடித்து இசையுடன் பாடல் பாடும் முறை காணப்படுகின்றது. தெய்வங்களின் இயல்பிற்கேற்ப பாடல்கள் இடம்பெறுகின்றன. இதனூடாக உடுக்கின் இசைக்கு ஆட்கொண்டு தெய்வமானது பூசகரூடாக உரு ஏறி மக்களுக்கு அருள்வாக்குச் சொல்லலும் இடம்பெறுகின்றது. கோவில்களில் இரவுத் திருவிழாவில் நடைபெறும் காத்தவராயன் கூத்து, சிந்து நடைக் கூத்து போன்றவை இப்பிரதேசத்து மக்களின் மனதில் சிறப்பான ஓர் இடத்தினைப் பெறுகின்றது. கூத்துகளின் கதாபாத்திரங்களுக்கேற்றவாறு ஆடை அணிந்து விடியற்காலை வரை சிறப்பாக இடம்பெறுகின்றது.

தாளலயத்துடன் இணைந்த சிந்துநடைக் கூத்து அந்தந்த பாத்திரங்களின் அமைவிற்கு ஏற்ப ஆடை அணிந்து தாள லயத்துடன் ஆர்மோனியம், மிருதங்கம் பக்கவாத்தியங்களாக இசைக்க பார்ப்போர் மனத்தினை பரவசமடையச் செய்கின்றது.

புராணக் கதைகளை எடுத்தியம்பும் விதமாக வில்லிசை நிகழ்வும் இடம்பெறுகின்றது. இந்நிகழ்வினூடாக புராணக் கதைகளை மக்கள் அறியக்கூடியதாக உள்ளது. சத்தியவான் சாவித்திரி, வள்ளி திருமணம் போன்ற புராணக் கதைகளை வில்லின் இசையுடன் சுவைபடக் கூறுதல் எல்லோராலும் ரசிக்கத்தக்கதாக உள்ளது.

நாட்டு மக்களின் வாழ்க்கையினைப் பிரதிபலிக்கும் வகையிலான நாட்டார் பாடல் இசைத்தலும் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றது. கலாச்சார விழா, மன்றங்களிடையே நடைபெறும் போட்டி, பிரதேசமட்டப் போட்டி, மாவட்ட மட்டப் போட்டி போன்ற நிகழ்வுகளில் நாட்டார் பாடலானது முக்கிய இடத்தினைப் பெறுகின்றது.

மாவட்ட மட்டப் போட்டியில் தாலாட்டுப்பாடல் பாடி பரிசு பெற்ற கலைஞர் இப்பிரதேசத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மனிதனின் பருவநிலைகளுக்கேற்ப, வேலைகளிற்கேற்ப நாட்டார் இசை இசைக்கப்படுவதையும் காணலாம்.

சில கோவில்களில் புராணக் கதைகளை இசையுடன் கூடிய நாடகங்களாக மேடை ஏற்றும் வழக்கமும் உள்ளது. கதாபாத்திரங்களின் நடிப்புத் திறமைக்கேற்ப பாத்திரங்களின் பெயரையே அவர்களின் பெயராகக் கூறி அழைக்கும் வழக்கமும் உள்ளது. இக் கலைகளைப் பயிற்றுவிக்கும் அண்ணாவிமார்களும் இப் பிரதேசத்தில் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை தவிர நாதஸ்வரம், மேளம் வாசிப்பதில் வல்லவர்களும் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றனர். பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக கலாச்சார விழாவில் இந்நிகழ்வு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். கிறிஸ்தவ ஆலயங்களில் ஒகன் வாத்தியம் இசைக்கும் முறையும் உள்ளது. இவர்களது பாடல்களிற்கேற்ப இவ்வாத்தியமானது இசைக்கப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் வாழும் இசைக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் பிரதேச செயலக கலாச்சாரப் பிரிவின் செயற்பாட்டில் பரிசில்கள் வழங்கல், பயிற்சி வழங்குனருக்கு பணம் பெற்றுக் கொடுத்தல், விருதுகள் பெற ஆவன செய்து கொடுத்தல் போன்றவை இடம்பெறுகின்றன. வயது முதிர்ந்த கலைஞர்களிற்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்படுகின்றது.

இவ்வாறாக, பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இசைக் கலையானது தனக்கென ஓர் தனித்துவத்தைக் கொண்டிருக்கின்றது எனக் கூறின் அது மிகையாகாது.

"வாழ்க இசை
வளர்க தமிழ்"

சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
அது இதயத்தின் இசை!

சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
அது சக்தியின் பிறப்பிடம்!

விளையாட நேரம் ஒதுக்குங்கள்
அது இளமையின் இரகசியம்!

படிக்க நேரம் ஒதுக்குங்கள்
அது அறிவின் ஊற்று!

உழைக்க நேரம் ஒதுக்குங்கள்
அது வெற்றியின் விலை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளியின் புகழ்பூத்த ஆயுள்வேத வைத்தியர் மாசார் மணியண்ணையுடனான நேர்காணல்

**நேர்கண்டவர்:- திருமதி. இந்துமதி சிறிஸ்கந்தராசா**
**("பச்சிலை" மலர்க்குழு சார்பில்)**



கிளிநொச்சி மாவட்டத்தில் பாரம்பரிய சுதேச வைத்தியர்கள் என்ற அணியில் இடம்பிடித்தவரும், வட இலங்கை சுதேச வைத்திய சபையினால் கௌரவிக்கப்பட்டவருமான பச்சிலைப்பள்ளியை வாழ்விடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்களை அவருடைய வீட்டில் சந்தித்து உரையாடியது ஒரு மகிழ்ச்சிக்குரிய அனுபவமாக அமைந்தது. எளிமையான வாழ்க்கை முறையைக் கொண்ட இந்த மனிதன் தன்னை ஒரு சிறந்த வைத்தியராக மட்டுமே முன்னிலைப்படுத்துவதில் ஆனந்தம் கொள்கின்றார்.

கேள்வி:- தங்களைப் பற்றிய சிறிய அறிமுகம் ஒன்றினை எமது பச்சிலை மலருக்காக வழங்க முடியுமா?
பதில் :- நிச்சயமாக மகிழ்வுடன், நான் 1934.06.27 அன்று வடமராட்சிப் பிரதேசத்தில் குடத்தனை எனும் கிராமத்தில் சின்னக்குட்டியார் வேலுப்பிள்ளை, வேலுப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதியினருக்கு மூன்றாவது பிள்ளையாகப் பிறந்தேன். எனது தந்தையாரும் பரம்பரை வழி பாரம்பரிய வைத்தியர்தான். பாரம்பரிய வைத்தியத்தில் மூன்றாவது தலைமுறையில் தந்தையும், அவர் வழியில் நான்காவது தலைமுறையினராக நானும் வாழ்கின்றேன். 1958இல் திருமணம் செய்து கொண்ட பின் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் மாசார் பகுதி எனது வாழ்விடமாக அமைந்துவிட்டது. எனக்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் யாவரும் திருமணமாகி நல்ல நிலையில் மகிழ்வுடன் வாழ்கின்றார்கள்.

கேள்வி:- பாரம்பரிய மருத்துவத்துறையில் ஈடுபடுவதற்கான ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது? பின் தங்களை எவ்வாறு வளர்த்துக் கொண்டீர்கள்?
பதில்:- தந்தையார் ஒரு வைத்தியராக இருந்ததுடன் எனது மாமனாரும் வைத்தியராவார். சிறு வயது முதல் தந்தையின் வைத்தியப் பணிக்கு உதவியாளனாக இருப்பதில் எனக்கு மகிழ்ச்சி. தந்தையாரின் மரணத்தின் பின் எனது மாமனார் வைத்தியம் சார்பாக பல விடயங்களை அவ்வப்போது தெரிவிப்பார். எனக்கு பரம்பரை வழியாகவே மருத்துவத்துறையில் பிரவேசிப்பதற்கான சூழல் அமைந்துவிட்டதால் அத்துறையில் தொடர்ந்து ஈடுபடவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

பல வருடங்களாக இயற்கையோடு இணைந்த ஆராய்ச்சிகள் அவற்றின் செயற்பாடுகள் பற்றிய அவதானிப்புகள் என்பன இத்துறையின் வளர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையானது என்ற தந்தையின் போதனைக்கேற்ப பல இடங்கள் அலைந்து நாடோடியாக வாழ்ந்து என்னை தயார்படுத்திக் கொண்டேன். அதாவது உயிரினங்களின் இயற்கையோடு இணைந்த வாழ்வியல், மூலிகைகளின் தேடல் பிரயோகம் என்பவற்றை ஆர்வத்துடன் பதிவு செய்தேன். 10 வருடங்களுக்கு மேலாக அலைந்து திரிந்து பெற்ற அனுபவங்களால் 28 வயதில் என்னை ஒரு வைத்தியனாக மாற்றிக் கொண்டேன்.

கேள்வி:- பாரம்பரிய சித்த வைத்தியத்துறையில் உள்ள சவால்களை சமாளித்து உங்களை எவ்வாறு முன்னிலைப்படுத்தினீர்கள்?
பதில் :- என்னிடம் பரம்பரை வழி பனையோலை ஏடுகள் நிறைய உண்டு. அனைத்தும் பாடல்களாக அமைந்த குறிப்புகள் கொண்டவை. அவற்றை நான் கற்றது மட்டுமன்றி அனுபவ வாயிலாகவும் உணர்ந்து கொண்டேன்.

எனது வாழ்விடமான மாசார் பகுதியில் சர்வாங்க வைத்தியம் செய்து கொண்ட நான், கிரந்தி எண்ணெய் தயாரிப்பு, குழந்தை வைத்தியம், வாதநோய் வைத்தியம், சுவாச நோய் தொடர்பான வைத்தியம் என்பவற்றில் பிரசித்தி பெற்றேன் தற்போது பல பகுதிகளிலும் இருந்து என்னை அழைத்து ஆலோசனை கேட்கும் அளவிற்கு என்னை வளர்த்துக் கொண்டேன். பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் கற்றல் ஆராய்ச்சிகள் தொடர்பான செயற்பாடுகளுக்கு என்னிடம் தொடர்பு கொள்கின்றார்கள். என்னிடம் உள்ள ஏடுகளை பிரதி பண்ணி நூலகங்களில் சேமித்துள்ளார்கள்.

கேள்வி:- தாங்கள் சித்த வைத்தியர் என்பதை முன்னிலைப்படுத்தியது மட்டுமன்றி பல்துறை சமூக சேவைகளை மிகச் சிறப்பாக ஆற்றி வரும் சமூக சேவையாளன் என அறிகின்றோம். அவை பற்றி குறிப்பிட முடியுமா?
பதில் :- (சிரிக்கின்றார்) எனக்கு சோதிடக்கலையும் தெரியும் என்பதால் என்னை சோதிடர் என்கிறார்கள். மேலும் எழுத்தாளர், புராணிகர், கூத்துக்கலைஞர் என்பார்கள். கிராமத்தில் அவ்வப்போது சமூக சேவைகளையும் ஆற்றி வருகின்றேன்.

கேள்வி:- கலைஞர் என்ற வகையில் தங்களுக்குக் கிடைத்த கௌரவங்கள் பற்றி கூற முடியுமா?
பதில் :- பச்சிலைப்பள்ளி பிரதேச கலைஞர் விபரத்திரட்டு நூலில் எனது வரலாற்றினையும் பதிவு செய்துள்ளார்கள் என்பதை பெருமையுடன் கூற விரும்புகின்றேன். மேலும் 2012ம் ஆண்டு பச்சிலைப்பள்ளி பிரதேச கலாச்சார பேரவை "கலைத்தென்றல்" விருது வழங்கி என்னை கௌரவித்துள்ளார்கள்.

கேள்வி:- பாரம்பரிய வைத்தியத்துறையில் தாங்கள் காட்டிய ஆர்வம், திறமை காரணமாக, தங்களுக்குக் கிடைத்த கௌரவிப்புகள் விருதுகள் பற்றிய விபரங்களை குறிப்பிட முடியுமா?
பதில் :- 02.03.2011இல் மல்வில் கிருஸ்ணன் ஆலயத்தில் புலமையாளர் கௌரவிப்பு இடம்பெற்றது. அந்நிகழ்வில் பல்துறை சமூக சேவைகளை மிகச் சிறப்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றிவரும் சமூக சேவையைப் பாராட்டி "சித்த வைத்தியமணி" கௌரவப்பட்டம் வழங்கி கௌரவித்தார்கள்.

மேலும் பாரம்பரிய சுதேச வித்துவான்கள் ஊக்குவிப்புச் சங்கத்தினரால் மக்களிற்கான அளப்பரிய சேவையாற்றி மக்கள் மத்தியில் நீங்கா இடம்பெற்றமையை வியந்து கௌரவிக்கும் முகமாக 20.04.2014 அன்று யாழ்ப்பாண தொழில் நுட்பக் கல்லூரி அரங்கில் இடம்பெற்ற யாழ் கோடைத் திருவிழா எனும் நிகழ்வில் சிறந்த சித்த ஆயுள்வேத வைத்தியர் எனும் காரணத்திற்காக "வைத்திய சக்கரவர்த்தி" எனும் கௌரவத்தை வழங்கினார்கள்.

கேள்வி:- சித்த வைத்திய துறையில் தடம் பதித்துள்ள தாங்கள் இப்பிரதேச மலரான பச்சிலை ஊடாக வாசகர்களுக்கு தரும் அறிவுரை யாது?
பதில்:- இயற்கையில் கிடைக்கக் கூடிய புல், பூண்டு, மரம், செடி, கொடி, வேர், பட்டை, இலை, பூ, காய், பழம், வித்து போன்றவற்றைப் பயன்படுத்தி உடல் கோளாறுகளைத் தீர்க்கும் வைத்தியமே நாட்டு வைத்தியம். இது தலை முறை தலைமுறையாக நம் நாட்டில் இருந்து வரும் பாரம்பரியமான மருத்துவ முறையாகும். இதிலிருந்து இயற்கையோடு இணைந்த வாழ்வு வாழ்வதன் மூலமே ஆரோக்கியமான வாழ்வு வாழ முடியும் என்பது தெளிவாகின்றது. எனவே இயற்கை மூலிகைகளை பாதுகாத்து பயன்படுத்தி எமது ஆரோக்கியத்தை பேணுவோம்.

நேர்காணலின் முடிவாக, தந்தையார் ஒரு சுதேச வைத்தியர் என்பதால் அவர் வழி நின்று, பின்தங்கிய பிரதேசத்தில் மக்களின் வைத்தியத் தேவைகளை நிறைவேற்றியவர். தம்மை நாடி வந்த மக்களை அரவணைத்து, தமது வைத்திய சேவையை வழங்கி மக்களின் மனங்களின் நீங்காத இடம் பெற்றவர். நான்காவது வைத்தியப் பரம்பரைத் தொடர்ச்சியுடைய இவர் மாறாத நாட்சென்ற நோய்களுக்கு வைத்தியம் செய்வதுடன் கலைஞர் சோதிடர், புராணிகர் சிறந்த சமூக சேவையாளர் என பல்துறை சேவையாளனாக மிளிர்கின்றார். இந்த மனிதனுடனான நேர்காணல் எம் பச்சிலைப் பள்ளி பிரதேசத்திற்குப் பெருமை சேர்க்கும் விடயமாகவும் அமையும் என நம்புகின்றோம்.

**"தோன்றில் புகழொடு தோன்றுக அஃது இலார்**
**தோன்றலில் தோன்றாமை நன்று" - குறள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்போம் நேசிப்போம்

செல்வி. பத்மலகீந்திரன் பதுசிகா
மாணவி
தரம் – 05

பிரியமுடன் நூல்கள் தேடி
பக்குவமாய் நாம் படிப்போம்
கற்றறிந்த கல்விதனை
கண்ணியமாய் நாம் பகிர்வோம்.

கற்ற கல்வி சிறிதெனினும் அதை
மற்றவர்களுடன் நாம் பகிர்வோம்
அடுத்தவர்க்குக் கொடுக்கும் போது
எமது அறிவு பெருகிடுமே.

கவிதை நல்ல கட்டுரைகள்
கூடவே விகடத் துணுக்குகள்
அத்தனையும் நம் அறிவிற்கு
விருந்தாகும் பொக்கிசங்கள்

வாசிப்போம் பயன்பெறுவோம்
நேசிப்போம் வாசிப்போம்
வாசிப்பை நேசித்து
வாழ்வினில் உயர்ந்திடுவோம்.

நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அன்னை

வ.அபிலாசா
தம்பகாமம்,
பளை.

காற்றாய் எம்மோடு பேசினாள்
பெரும் கடல் அலையாய் எம்மை சாடினாள்
பசுமையாய் எம்மை தாங்கினாள்
மலைகளாய் எம்முள் நீண்டாள்
சோலையாய் அமைதியை தந்தாள்
மழையாய் எம்மீது அன்பை சொரிந்தாள்

ஆனால் இன்றோ
காற்றை சூறாவளியாய் மாற்றிவிட்டாள்
கடல் அலையையோ சுனாமி ஆக்கிவிட்டாள்
பசுமையும் பொய்மை ஆனது
மலைகள் எல்லாம் நொருங்கியதும் உண்மையே
சோலையோ பாலைவனமாய்
மழை பொய்த்த கோடையாய்

இத்தனைக்கும் காரணம்
அவளை நாம் முழுமையாய் சுரண்டியதன் பயன் அன்றோ
சீண்டி விட்டு சிறுமையாய் - நாமே
அவளை மட்டும் சாடுவது முறை அன்றோ
எழுந்திட வேண்டும் ஒன்றாய் - எம் அன்னை
மீண்டும் சுகமாய் எம்மோடு வீசட்டும்
இன்னும் பல காலம்.

எடுத்துச் சொல்வதை விட மற்றவர் முன்
எடுத்துக் காட்டாக வாழ்வதே சிறப்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் மாதா

**திருமதி. ஞா.நேசநாயகம்**
**ஆசிரியர்,**
**கிளி/ பளை மத்திய கல்லூரி.**

உயிர்களின் நிலைப்பிற்கு உகந்த நல்லியற்கை வளம்
கைத்தொழிலுக்கேற்ற வலு சக்தி மற்றும் கனியவளம்
வர்த்தகம் விவசாயம் விளை பொருளாதார வளம்
முத்து மணி ரத்தினங்கள் மண் மாதா தருவதன்றோ!

வான் மழை வருவிக்கும் வனப்புமிகு வனமதுவும்
தேன் மழை சொரிகின்ற தேசுலவு பூங்காவும்
ஓடுகின்ற நீரருவி ஆடுகின்ற பயிரினங்கள்
கூடுகின்ற இயற்கையெழில் குதூகலம் தந்திடுமே.

மஞ்சோடு மோதி விளையாடுகின்ற மலை முகடு
பஞ்சாகப் பறந்து வந்து பாறையாகும் பனித்துளிகள்
விஞ்சு திரவியங்கள் மிகு கொஞ்சும் திரை கடலும்
நஞ்சை புஞ்சை யாவும் நமை வாழ்விக்கும் வரமன்றோ!

தென்னை பலா மா வேம்பில் வண்ணமுற வீற்றிருந்து
அன்னை வரக் கீதமிடும் தென்னை மரக்கிளியும்
சின்னக் குருவிகளின் செல்லச் சிரிப்பொலியும்
கன்னங் கருங்குயிலும் இயற்கை இன்ப இசையன்றோ!

வண்டல் மண் வரப்போரம் வாகாக வீற்றிருந்து
கண்ணோடு கண்ணோக்கி காற்றாடக் காதலித்து
உள்ளம் காமுறவே உடல் நோய்கள் தாமறவே
கல்வியும் தரவொண்ணாக் களிப்பு வயற்காடு தரும்

பெரும் பகுதி நீர் கொண்ட நீலக்கோள் புவியன்றோ!
அரும்பாடு பட்டிதனை அழகாக்க வேண்டாமோ?
விரி நீலம், மஞ்சளுடன் பசுமைப் புரட்சிகண்ட
பெரு தேசமிதனை நாம் மெருகேற்ற வேண்டாமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகம்

மு. பவனிதன்
தரம் – 12,
கிளி/ பளை மத்திய கல்லூரி.

என்னைக் கவனப்படுத்துவதில்
உனக்கிருக்கின்ற உண்மையான
ஆனந்தத்தை - நான்
பக்கம் தவறாமல்
பார்த்திருக்கின்றேன்......!
நீ
கண்களால் மனனஞ் செய்யும்
சந்தர்ப்பங்களிலும் கூட
என்னிதழை - உன்
இமைகள் உரசாமல்
ஈன்றவள் போல்
ஏந்தியதைப் படித்திருக்கின்றேன்
அழுக்குப் படிந்த வார்த்தைகளுக்காக
நீ
என்னை
எழுதுகோலாக்காமைக்கு
என் மனமார்ந்த
நன்றிகள்......!
உன் உயர்ச்சிக்கு
அத்திவாரமாய் நிற்பதில்
எனக்குள்
அகந்தையில்லாச் செருக்கிருப்பதில்
ஆனந்தம்.....
பல விருப்பத்தோடு
என்னை நீ
நேசிக்கிறாய்... அறிவேன்
பொறுமையாய் - நான்
பொதிந்து கிடக்கிறேன்
மறக்காமல் என்னை
மீட்டிக்கொடு..... மரணத்திலும்
வாழவைப்பேன்......!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் வரை வாசி

பா.பாலாஜினி
முல்லையடி,
பளை.

மனித நாகரிகங்கள் நதிக்கரைகளில்
தோற்றம் பெற்றனவாம்
என்னை பொறுத்தமட்டும் - மனிதன்
எப்போது எழுதவும் வாசிக்கவும்
கற்றுக் கொண்டானோ அப்போதுதான்
உயர் நாகரிகம் தோன்றியதென்பேன்!

அப்போதுதான் மழை பெய்து ஓய்ந்திருந்தது. அந்தக் காட்டுக் குடிசைக்குள் அமர்ந்திருந்த மூதாட்டி ஹிருணி அந்த தள்ளாத வயதிலும் கூட மிகச் சத்தமாக "சதுஷ்டி. சதுஷ்டி...." என அழைத்துக் கொண்டிருந்தாள். குடிசைத் தாழ்வாரத்தில் பல்லாங்குழி ஆடிக்கொண்டிருந்த சதுஷ்டி எனும் அந்த பெயருக்குரிய சிறுமி மெல்ல குடிசைக்குள் எட்டிப்பார்த்து "என்ன பாட்டி என்ன வேணும்?" என்கின்றாள்.

சதுஷ்டி உன் அம்மாவும் சகோதரிகளும் எங்கே சென்றுவிட்டார்கள். மான் இறைச்சியை பதப்படுத்தச் சொல்லி இருந்தேனே அது முடிந்துவிட்டதா?

"பாட்டி, அவர்கள் எல்லோரும் கோதுமைக் கதிர்களை அறுத்து வர சென்றிருக்கின்றார்கள். மான் இறைச்சியை நேற்றே பதப்படுத்தி வைத்துவிட்டோமே"

கூறிவிட்டு தூரத்தில் இருந்த தன் நண்பர்களைத் தேடி ஓடி விட்டாள் சதுஷ்டி. சதுஷ்டிக்கு ஒரு பத்து வயது இருக்கும். மேலுடம்பில் எவ்வித ஆடைகளும் இல்லாத போதும் அரையை மறைத்து மரவுரி தரித்திருந்தாள். அவள் கட்டைக் கூந்தல் பொன்னிறமாக காட்சி அளித்தது. மூதாட்டி ஹிருணியோ உடல் முழுவதும் மரவுரி தரித்திருந்தாள். கண்பார்வை மங்கலாக இருந்தும் கூட குடிசைக்குள் இருந்தவாறே பருத்தி பஞ்சுகளினை நூலாக திரித்துக் கொண்டிருந்தாள். அவளின் உறுதியான பற்களோ பதப்படுத்தி வைத்திருந்த மான் இறைச்சித் துண்டுகளை மெல்ல மெல்ல மென்று கொண்டிருந்தது.

டக்.... டக்... டக் சற்றுத் தள்ளிக்கேட்ட அந்த சத்தம் ஹிருணிக்கு அவளின் குடும்பத்தாரின் வரவை உறுதிப்படுத்தியது.

"பாட்டியம்மா, இங்கே பாருங்கள் இம்முறை எம் தோட்டங்களில் அதிகளவான கோதுமை விளைச்சல் கண்டிருக்கிறது" இது சதுஷ்டியின் மூத்த சகோதரி வேதுஷ்டியின் குரல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைக் கேட்ட ஹிருணி சிரித்துக் கொண்டே அவளை அருகில் அமர்த்தி உச்சிமோந்து கொண்டாள். கோதுமைக் கதிர்களை அறுத்துவிட்டு வரும் வழியில் கிடைத்த சில விலங்குகளின் இறைச்சியை ஹிருணியின் மகள் வாட்டி எடுத்து வைக்க ஹிருணி அனைவருக்கும் பரிமாறினாள். தாய்வழி குடும்பத் தலைமைத்துவம் காணப்பட்டபோது நம் மூதாதையர்களின் குடும்பங்களில் பெண்களே தலைமைப் பொறுப்பினை ஏற்றிருந்தார்கள்.

இறைச்சித் துண்டுகளை சுவை பார்த்துக்கொண்டே தேனையும் மெல்ல உறிஞ்சியபடி தான் வரும் வழியில் குகைகளில் வரையப்பட்டிருந்த ஓவியங்களையும், சித்திர எழுத்துக்களையும் பற்றி தன் தங்கைக்கு வெகுவாக சிலாகித்து கூறிக் கொண்டிருந்தாள் வேதுஷ்டி. ஹிருணியும் அதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கும் அவ் எழுத்துக்கள் தொடர்பில் கொஞ்சம் விடயத் தெளிவு இருந்து கொண்டிருக்கின்றது.

தோட்டத்திற்குச் சென்றுவந்த களைப்பும், அதனுடன் உடன் மதுவை புசித்ததனால் ஏற்பட்ட சிறு மயக்கமும் ஒன்றுசேரவே உடனே உறங்கிவிட்டார்கள். ஆனால் மூதாட்டி ஹிருணிக்கு மட்டும் உறக்கம் வரவே இல்லை. மரணத்தை எக் கணத்திலும் எதிர்பார்த்து இருக்கும் அவள் மனதில் சிறுமிகள் இருவரினதும் உரையாடல் சில ஞாபகங்களை கிளறி விட்டிருந்தது.

அந்த ஞாபகங்களின் வேகத்தில் அவளின் முதிர்ந்த மனது இளமை பெற்று வேறோர் காலத்தில் சஞ்சரிக்க தொடங்கியிருந்தது.

அப்போது ஹிருணிக்கு பதினாறு வயது தொடங்கியிருந்தது. எதிரே இருந்த மலைச்சரிவுகளில் மந்தைகளை மேய்ப்பதற்காக அவள் செல்வதுண்டு. மீண்டும் குடிசைக்குத் திரும்பி வர எப்படியும் இரண்டு நாட்களாவது ஆகிவிடும் என்பதனால் வேட்டைக்குத் தேவையான வில் அம்புகளோடு, உணவினையும் கொண்டு செல்வாள்.

அவ்வாறான ஓர் நாளில் தான் அவளுக்கு யுதிஷ்ரா என்பவனுடன் பழக்கம் ஏற்பட்டது. யுதிஷ்ரா அயற் கிராமத்தவன். மந்தைகளை மேய்ப்பது அவனது வேலையாக இருந்தாலும் கூட கொஞ்சம் எழுதவும் படிக்கவும் தெரிந்திருந்தது அவனுக்கு. யுதிஷ்ராவின் உருண்டு திரண்ட கால்களிலும், யௌவன புஜங்களிலும் ஹிருணிக்கு ஒரு ஆசை இருந்ததைப் போலவே ஹிருணியின் பொன்நிற கூந்தலிலும், கொவ்வை உதடுகளிலும், நிறைவான தனங்களிலும் ஓர் விருப்பு இருந்தது.

அந்த விருப்பம் காதலாக மாறி அதனை அவர்கள் எவ்வாறு பரிமாறிக் கொண்டார்களோ அதே போல் அறிவையும் பரிமாறிக் கொண்டார்கள்.

"அன்பே ஹிருணி நீ எவ்வளவு அழகாக இருக்கின்றாய் தெரியுமா? நம் மொழியைப் போலே உன் விழிகளும் எனக்கு நிறைவினை தருகின்றன."

"நீ என்ன சொல்கிறாய் யுதிஷ்ரா? மொழி என்பது என்ன, நாம் பேசுகின்ற வார்த்தையா?" இது ஹிருணியின் கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆம் அன்பே அதுதான். அதை எழுதவும் முடியும் அது உனக்குத் தெரியுமா?”

யுதிஷ்ரா ஹிருணியின் கைகளைப் பிடித்து குகைச் சுவர்களிலும், கற் பலகைகளிலும் எழுதக் கற்றுக் கொடுப்பான். கழுத்தருகில் அவன் மூச்சு உரச அவ் எழுத்துக்களை கற்றுக் கொள்வதில்தான் அவளுக்கு எவ்வளவு சுகம்?

மந்தைகளை மேய விட்டுவிட்டு இருவரும் இலை குழைகளில் சாறு பிழிந்து ஓவியங்களை வரைந்து மகிழ்ந்து கொள்வார்கள்.

யுதிஷ்ரா தினமும் ஹிருணிக்கென ஒவ்வோர் கவிதை எழுதி அதனை படித்தும் காட்டுவான். அவளுக்கும் அதை பழக்கி இருந்தான். அவன் எப்போதும் ஓர் விடயத்தை அவளுக்கு சொல்லிக் கொண்டிருப்பான்.

“அன்பே ஹிருணி, எம்மை விலங்குகளில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதே இந்த வாசிப்பு தான்.” அதுதான் நம் வாழ்வின் திறவுகோல்.

இவ்வாக்கியம் இப்போதும் ஹிருணிக்கு நன்றாக ஞாபகமிருக்கின்றது. இயற்கையைக் கண்டு இயற்கையில் வாழ்ந்த அவர்கள் இருவரினதும் இல்லற வாழ்க்கையின் பேறுகள்தான் இப்போது இருக்கின்றவர்கள். ஹிருணியைப் பொறுத்த வரைக்கும் ஒரு போதுமே அவள் யுதிஷ்ரா தன்னை விட்டுவிட்டுச் சென்றதாக அவள் எண்ணியதேயில்லை. அவன் இறந்த பின்னும் அவனது எழுத்துக்களுக்கு இறப்பில்லை என்பது அவளுக்கு தெரிந்திருக்கின்றது.

இந் நினைவுகளுடனேயே உறங்கிப் போன ஹிருணி மறுநாள் பொழுது புலர்ந்ததும் வித்தியாசமான ஒன்றை செய்து கொண்டிருந்தாள்.

தன் தள்ளாத வயதினையும் பொருட்படுத்தாது பேரக்குழந்தைகள் இருவருக்கும் எழுதக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தாள். எழுதியவற்றை சத்தமாக வாசிக்கவும் பழக்கிக் கொண்டிருந்தாள்.

“வாழும் வரை வாசி” என்ற அவளது குரல் அந்த வனாந்தரமெங்கும் பரந்து ஒலித்துக் கொண்டிருந்தது. அங்கே புதியதோர் நாகரிகம் ஒன்று உருவாகிக் கொண்டிருந்தது. அது பூரணமானதோர் உலகத்தை உருவாக்க முயற்சி செய்து கொண்டிருந்தது.

குழந்தைகள் இருவரும் தமது மழலை மொழிகளில் அதனை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதைத்தான் நானும் சொல்ல வருகின்றேன். வாழும் வரை வாசி.

எத்தனையோ யுதிஷ்ராக்களும், ஹிருணிகளும் காடுகளிலும் மேடுகளிலும் வாழ்ந்து தோற்றுவித்ததுதான் இந்த எழுத்தும், வாசிப்பும். எழுத்து அவர்களின் வேர்வை. வாசிப்பு அவர்களின் மூச்சு. வாழும் வரை பேணுவது நம் கடமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சபைகள் பற்றிய ஓர் அறிமுகம்

பா.தயாகரன்
பெரியபளை,
பளை.

பிரதேச சபை என்பது வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் செயற்படும் சட்ட அந்தஸ்துள்ள சிறு அரசு ஆகும். அதாவது தமக்குத் தேவையான வருமானங்களைப்பெற்று செலவுகளை மேற்கொள்ளும் தனித்துவம் வாய்ந்த அமைப்பாகும்.

பிரதேச சபையானது தனது இடப்பரப்பில் வதியும் மக்களின் சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச் சேவைகள், பகிரங்க பொது வழிகள் என்பன தொடர்பான கருமங்கள் எல்லாவற்றினதும் ஒழுங்குபடுத்துகையும், கட்டுப்படுத்தலும், நிர்வாகமும், மக்களின் சௌகரியத்தையும், வசதியையும், சேமநலனையும், வாழ்வசதிகள் எல்லாவற்றையும் பொதுவாக பாதுகாத்தலும், மேம்படுத்தலும் முக்கிய பணியாகும்.

எனவே வினைத்திறனான ஒரு பிரதேச சபையால் மாத்திரமே. மேற்கூறிய மக்களின் வசதிகளையும், சௌகரியத்தையும், சேமநலத்தையும் திறம்படச் செய்ய முடியும் என்பதுடன் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒரு பிரபலமான நிறுவனமாக விளங்க முடியும். அத்துடன் பிரதேச சபையின் சேவை வழங்கல் விடயப்பரப்பானது "ஒரு நபரின் கருவறையிலிருந்து கல்லறை வரைக்குமான" அனைத்து முக்கிய கட்டங்களையும் உள்ளடக்கியதாக உள்ளது.

பிரதேச சபைகளில் தவிசாளர் என்பவர் பிரதான நிறைவேற்று அதிகாரியாகவும் சபையின் கணக்கு வைக்கும் அதிகாரியாகவும் இருப்பதோடு செயலாளர் நிர்வாக அதிகாரியாக செயல்படுகிறார். சபையின் இடப்பரப்பிலிலுள்ள மக்களின் நலன் சம்பந்தமாக தவிசாளரின் தலைமைத்துவத்தின் கீழ் சபையில் மாதாந்தம் கூட்டங்கள் நடைபெற்று பெரும்பான்மை அங்கத்தவர்களின் (மக்கள் பிரதிநிதிகள்) சம்மதத்துடன் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. (1987ம் ஆண்டு 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 10 படி ) எடுக்கப்படும் தீர்மானங்களானது தமது அதிகார எல்லைக்குட்பட்ட விடயங்கள் சார்ந்தவையாக இருக்க வேண்டுமே தவிர தேசிய மற்றும் சர்வதேச பிரச்சினைகள் தொடர்பாக கலந்தாலோசிக்கவோ, யோசனை முன் வைக்கவோ முற்படுதல் சபை நேரத்தை வீண் விரயமாக்குவதற்கு வழிகோலும். அத்தோடு வினைத்திறனான மக்கள் சேவையை வழங்க முடியாது போகும்.

சபைக் கூட்டத் தீர்மானங்கள் சட்டரீதியான சான்றாக காணப்படுவதால் பதிவு செய்தல் முக்கியமானதாகும். அத்துடன் சபையில் எடுக்கும் தீர்மானங்களை நிறைவேற்றும் பொருட்டு நிர்வாக மட்டத்தில் உத்தியோகத்தர்களைக் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிக்குழு ஒன்று செயலாளர் தலைமையில் இயங்குகின்றது. பிரதேச சபைகளில் நிர்வாக மட்டத்தில் பணிகளை வினைத்திறனாகக் கொண்டு செல்வதற்கு இரண்டு விதமான சேவையாளர்கள் காணப்படுகிறார்கள்.

1. அலுவலக சேவையாளர்கள் - இவர்கள் செயலாளரின் மேற்பார்வையில் இருப்பதோடு ஓர் உப நிர்வாக சிரேஸ்ட உத்தியோகத்தரின் நேரடி மேற்பார்வையில் அமையப்பெறும் குறிப்பிட்ட பகுதியால் நிறைவேற்றப்படும் சேவைகள் திருப்திகரமாகவும் பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதாகவும் இருப்பதை இவ் உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

2. கள சேவையாளர்கள் - இவர்கள் களத்தில் நடைபெறும் சகல நடவடிக்கைகளும் திருப்திகரமாக நடைபெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.

மேலும் தவிசாளரும், செயலாளரும் தமது மட்டத்தில் நடைபெறும் நடைவடிக்கைகளுக்கு பொறுப்பாக உள்ளனர். எனினும் இவர்கள் தமது பொறுப்புக்கள் கடமைகளை தனித்து செய்ய முடியாமையால் தமக்குக் கீழ் உள்ள உத்தியோகத்தர்களுக்கு தமது அதிகாரங்களை பகிர்ந்து அளிக்கலாம். எனினும் அவர்கள் சம்பந்தமான பொறுப்புக்கூறும் கடமையை கையளிக்க முடியாது; பொறுப்புக் கூறும் பொறுப்பு அவர்களிடமே உள்ளது.

பிரதேச சபை தனது நடவடிக்கைகளை பின்வரும் ஏழு நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

1. பொது நிர்வாகம்
2. சுகாதார சேவைகள்
3. பொதுத் தெருக்கள், காணி கட்டிடங்கள்
4. தண்ணீர்ச் சேவை
5. பொதுப் பயன்பாட்டுச் சேவை
6. நலன்புரிச்சேவை
7. மின்சாரம்

எனினும் தற்போது தண்ணீர், மின்சாரம் தவிர்ந்த ஐந்து நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

மேற்படி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் பிரதேச சபை நீடித்து நிலைத்திருப்பதற்கும் வருமானம் ஈட்டுவது மிக மிக முக்கியமானதாகும். எனவே பிரதேச சபை பின்வரும் முறைகளில் வருமானத்தைப் பெற்றுக் கொள்கிறது.

1. சுய வருமானம்
2. அரசாங்க கொடைகளும், மானியங்களும்
3. பாராளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்களின் ஒதுக்கீடுகள்
4. அன்பளிப்புக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச சபையின் சுய வருமானமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- ❖ வரிகளும் வீத வரிகளும்
- ❖ வாடகை மற்றும் குத்தகை
- ❖ அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்
- ❖ சேவைக்கான கட்டணங்கள்
- ❖ குற்றம் மற்றும் தண்டப்பணங்கள்
- ❖ ஏனைய வருமானம் என்பனவாகும்.

அத்துடன் இவ் வருமான அறவீடுகளுக்கான அதிகாரம் பின்வரும் முறைகளினால் கிடைக்கின்றது.

1. தாய்ச்சட்டத்தினால் விதிக்கப்படுகிறது.
2. தாய்ச்சட்டத்தின் கீழ் கிடைத்துள்ள தத்துவ அதிகாரத்துக்கு அமைய விதிக்கப்படுகிறது.
3. வேறு சட்டங்கள் மூலம் கிடைக்கும் அதிகாரம் மூலம்
4. துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய அதிகாரங்கள் கிடைக்கின்றன.

உதாரணமாக தாய்ச்சட்டத்தினால் விதிக்கப்படுபவை

- ❖ முத்திரைக் கட்டணம்
- ❖ நீதிமன்ற தண்டப்பணம்
- ❖ விற்பனை அல்லது வாடகை
- ❖ காணி விற்பனை வரி
- ❖ நிலுவை வாடகைத் தண்டம்
- ❖ நிலுவை வரித்தண்டம்

தாய்ச்சட்டத்தின் கீழ் கிடைத்துள்ள தத்துவ அதிகாரத்திற்கு அமைய விதிக்கப்படுபவை

- ❖ சோலை வரி
- ❖ வாகன மற்றும் விலங்கு வரி
- ❖ கைத்தொழில் பற்றிய வரி
- ❖ வர்த்தக வியாபாரங்கள் பற்றிய வரி
- ❖ அபிவிருத்தி செய்யப்படாத காணி மீதான வரி

வேறு சட்டங்கள் மூலம் கிடைக்கும் அதிகாரங்கள்

- ❖ களியாட்ட வரி
- ❖ சுற்றாடல் அனுமதிப்பத்திரம்
- ❖ கட்டிட அனுமதிப்பத்திரம்
- ❖ பகிரங்க அரங்காட்டல் அனுமதிப்பத்திரம்
- ❖ களியாட்ட விடுதிகளுக்கான அனுமதிப்பத்திரம்
- ❖ ஏலவிற்பனை, தரகர்களுக்கான அனுமதிப்பத்திரம்
- ❖ விலங்கறு கட்டணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் துணைவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் விதிக்கப்படுபவை

- கழிவகற்றல்
- விடுதிகள்
- பேக்கரி
- உணவகம்
- இறைச்சி விற்பனை
- குளிர்பான தொழிற்சாலை
- நடமாடும் வியாபாரம்
- நீர் வழங்கல்
- நூலகம்
- விளம்பர அறிவித்தல்

போன்றவற்றின் மூலம் பிரதேச சபை வருமானங்களை அறவிட்டு மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளுக்கு செலவீடுகள் செய்கிறது.

இவ்வாறு மக்கள் நலன் சார்ந்து செயற்படும் பிரதேச சபைகளின் சேவைகள் என்பன சொல்லில் வழங்க முடியாதவையாகும். எனவே ஒவ்வொரு குடிமகனும் பிரதேச சபைகளின் செயற்பாடுகள் தொடர்பில் பூரண அறிவினை பெற்றிருப்பது இன்றியமையாதது ஆகும்.

(உதவி - 1987ம் ஆண்டு 15ம் இலக்க பிரதேச சபை சட்டம் மற்றும் உள்ளூராட்சி மன்ற வழிகாட்டல்.)

கவலை நாளைய துயரங்களை அழிப்பதில்லை
இன்றைய வலிமையை அழித்துவிடும் என்பதை
மறந்து விடாதீர்கள்!

---

தோல்வியின் அடையாளம் தயக்கம்!
வெற்றியின் அடையாளம் துணிச்சல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் காணப்படும் முக்கிய சில மூலிகைகளும் அவற்றின் பயன்களும்

வைத்திய கலாநிதி
புண்ணியமூர்த்தி ஸ்ரீகணேசன்
BSMS (SL)
MSC (Hosad)
Certin Accu

## 01. கற்றாளை



அறிவியற் பெயர் :- Aloe vera
குடும்பப் பெயர் :- Asphodelaceae

கற்றாளை ஒரு காயகல்ப மூலிகையாகும். குளிர்மையான தன்மை உடையது. இளமையாக வைத்திருக்கப் பெரிதும் உதவும். இதன் குளிர்ச்சியான தன்மையினால் எரிகாயங்கள் (burns), வெட்டுக்காயங்கள் (cuts), உரஞ்சல் காயங்கள் (scrobes) போன்றவற்றிற்கும் மிக தீவிரமான காளாஞ்சுகபடை (Psoriesis) நோய்க்கும் உகந்ததாகும்.

விலங்குகளில் நடாத்தப்பட்ட பரிசோதனைகளின் அடிப்படையில் (enthonolic) கற்றாளைச் சாற்றில் இருந்து பெறப்படும் இரசாயனக் களிம்பு (Gel) ஆனது காளாஞ்சுகப்படைகளை (antipsoriamic) கட்டுப்படுத்தும் ஆற்றல் உள்ளதென நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கிருமிநாசினியாகவும், நுண்ணுயிர் கொல்லியாகவும் தொழிற்படவல்லது.

கற்றாளையில் காணப்படும் இரசாயனப் பொருட்கள்

1. Glucomanan - புண்களை விரைவில் ஆற்றுவதுடன் புதிய தோல் கலங்களையும் உருவாக்கும்.
2. Adaptogen - உட்பிரயோகமாக பாவிக்கலாம். உடல் அசதி (streas)யை குறைக்கும்
3. Lignin
4. Saponins
5. Salisulic acids

(3–5) – புண்களை விரைவில் ஆற்றும் தன்மை உள்ளவை.

6. Anthraquinones - மலமிளக்கிகள்
7. Campesterol
8. B - sisoferol - நுண்ணுயிர் கொல்லிகள்
9. Auxins
10. Gibberellins

(9–10) – புண்களை ஆற்றுவதுடன் கிருமி கொல்லிகளாகவும் திகழும்

11. Polysaccarides - (mannose) - நோயெதிர்ப்பு சக்தியைக் கூட்டும்
12. Essential amino acids - புரதச்சத்துகள்
13. Polyphenol anioxidants - உடலை சிதைவடையாது பாதுகாக்கும்.
14. Sterols - அழகுக்கான முக்கிய கொழுப்புச்சத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ வெளிப்பிரயோகமாக - சிறிய துண்டு கற்றாளை மடல் 1'' - 2'' எடுத்து வெளித்தோலை உரித்து உள்ளிருக்கும் களி(Gel)யை நேரடியாக தோலிற்கு பூசலாம். எரிகாயங்கள், வெட்டுக் காயங்கள், உரஞ்சல் காயங்கள் போன்றவற்றிற்கும் முகத்திற்கும் (After shave) பாவிக்கலாம்.

❖ உட்பிரயோகமாக - வெளித்தோலை உரித்த பின்னர் அதனுள் உள்ள களி (Gel)யை எடுத்து சிறிதளவு தேசிப்பழச்சாற்றுடன் கலந்து குடிக்கலாம்.

இது புற்று நோய்கள், மூல நோய்கள், தோல் நோய்களிற்கு சிறந்ததாகும்.

❖ அத்துடன் கற்றாளையிலுள்ள முட்களைச் சீவி அகற்றிய பின்னர் சிறிய சிறிய துண்டுகளாக நறுக்க வேண்டும்.

400*g* - கற்றாளைத் துண்டுகள்
400*g* - தேன்
150*ml* - பிரண்டி

இவற்றை ஒன்றாகக் கலக்கி 15*ml* அளவு காலைச் சாப்பாட்டிற்கு 2 மணிநேரம் முன்னதாக எடுத்துக்கொண்டு வந்தால் புற்று நோயிலிருந்து நிவாரணம் அளிக்கும்.

## 2. ஆடாதோடை :-



அறிவியற்பெயர் :- Adhatoda vasica
குடும்பப்பெயர் :- Aconthaceae

பொதுவாக எல்லா இடங்களிலும் காணப்படும் மூலிகைத் தாவரமாகும். இதன் பாவிக்கப்படும் பாகங்கள்

1. இலைகள்
2. வேர்
3. பட்டை

இதில் காணப்படும் மருத்துவப் பொருட்கள் அல்லது இரசாயனங்கள்

1. வசிசீன் - vasicine of vasicinone
2. பீற்றாடின் - Betdine
3. ஆடாதோடை அமிலம் - Adhatodic acid
4. Vit.C
5. எண்ணெய் - Limonene oil
6. வேரில் - Vasicine and visicinol

செயற்பாடு (Actions)

இலைகள் - சளியை வெளியேற்றும் (Expectorant)
பூக்கள் - வயிற்றுத் தசைகளை இலகுவாக்கும் (anti spasimodic)
Fruits - வயிற்றுப் பூச்சிகளைக் கொல்லும் (Anthenintic)
Roots - கிருமிகளைக் கொல்லும் (Ant bactrial activity)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவனைகள் (Uses)

தடிமன், காய்ச்சல், இருமல், ஈழை (wooping cough) தொய்வு (Bronchial asthma) போன்றவற்றிற்கு இலை, வேர், பூ, பழம் என்பவற்றினை குடிநீராக்கி வழங்கலாம்.

❖ இலைச்சாற்றினை (Leave Juices) வயிற்றோட்டம், இரத்த சீதக் கழிச்சல் (dycentry) என்பவற்றிற்கு வழங்கலாம்.

❖ இலைத்தூளை (Powder) வாதநோய்களிற்கு மூட்டுக்களிற்கு பத்தாக (Poutice) இடலாம்.

❖ காய்ந்த இலைகளை சுருட்டாகப் பயன்படுத்தினால் தொய்வு (Bronchal asthma) குறையும்

❖ வேரை குடிநீராக்கி காய்ச்சலிற்கு, இருமலிற்கு பயன்படுத்தலாம்.

❖ இலைக் கஷாயங்களை (Strong dicoction) வாதநோவுகளிற்கும் நரம்பு வலிகளிற்கும் ஆவியாகப் பிடிக்கலாம். தோல் நோய்களிற்கும் சிறந்தது.

❖ காய்ந்த இலைத்தூள் - 30grams அளவு மலேரியா காய்ச்சலிற்கும் சிறந்தது.

## 3. ஆவாரை



அறிவியற் பெயர் :- Cassia auriculota

குடும்பப் பெயர் :- Caesalpinioceae

பெரிய மரமாக வளரக்கூடிய மூலிகைச் செடியாகும். பச்சிலைப்பள்ளியின் வீதியின் மருங்கில் அழகான மஞ்சள் நிற கூட்டுப் பூக்களுடன் காணப்படும்.

மரத்தின் முழுப்பாகங்களும் பயன்பாட்டிற்குரியது.

மருத்துவ இரசாயனப் பொருட்கள் (Chemicals)

1. Taxin
2. Catechol
3. Auriculacacidin
4. Rutin
5. Polyphenol
6. Oxidose
7. Enodin
8. Nanocasane
9. Chryso
10. Phonol
11. Rubiadin

செயற்பாடு (Action)

பட்டை (Bark) - Astringent

இலைகள் (Leaves) - புழு கொல்லி - Anthelminintic

- பூச்சிகொல்லி - Antisaptic
- மலமிளக்கி Laxactive

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்கள் :- நீரிழிவு நாசினி (Antidiavetic), துவர்ப்பி
விதைகள் :- குளிர்ச்சியுண்டாக்கி
வேர்கள் :- கிருமிநாசினி

பாவனை (Uses) :-

- ❖ பட்டைக் கஷாயம் வாய்ப் புண்களிற்கு கொப்பளிக சிறந்தது.
- ❖ நிரிழிவு நோய்க்கான மருத்துவப் பொருட்களில் ஒன்றாகச் சேர்கின்றது.
- ❖ வயிற்றுக்குத்து மற்றும் சீதக்கழிச்சலுக்கு பட்டைக் கஷாயத்தை 15*ml* காலை, மாலை அருந்தக் கொடுக்கலாம்.
- ❖ இலைகள் சுண்டி உணவாக உட்கொள்ளலாம் "Matara" / Ceylontea இல் ஆவாரை இலைகள் சேர்க்கப்படுகின்றது.

வாசனை மிக்கது. குடற் புழுக்களை அழிக்கவல்லது.
தோல்நோய்கள், தொழுநோய்கள் என்பவற்றிற்கும் சிறந்தது.

ஆவாரைப் பூவின் குணம்

"சுங்கம் எனவே சடத்திற்கு காந்தி தரும்
மங்காத நீரை வறட்சிகளை அங்கத்தாம்
மாவைக் கற்றாழை மணத்தை அகற்றிவிடும்
பூவைச்சேர் ஆவாரம் பூ"



## 4. கடுக்காய் **Terminalia chebula**

குடும்பப் பெயர் :- Combreta ceae

நடுத்தரமான உயரமுள்ள மரமாகும். சாம்பல், மண்ணிற பட்டையுடன் காணப்படும். பொதுவாக மீசாலை, கொக்குவில், கோப்பாய், மட்டுவில் பகுதிகளிலும் பச்சிலைப்பள்ளியின் ஓரிரு இடங்களிலும் காணப்படுகின்றது.

பாவிக்கப்படும் பாகங்கள் :- இளம் பழங்கள்
காய்ந்த பழங்களும்

செயற்பாடு (Aetion)

Alternative - பலமுண்டாக்கி
Tonic - தாது புஷ்டி
Laxative - மலமிளக்கி
Stomatachic

சேர்ந்துள்ள இரசாயனப் பொருட்கள் (Composition)

1. gallic acid
2. Tannic acid
3. Chebulic acid
4. greenish oleo - resin (myrobalanin)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவனை :-

- காய்ந்த பழங்களின் மேலுறைகளின் கஷாயமானது சிறந்த மலமிளக்கியாகும்.
- காய்ந்த பழங்களின் மேலுறையின் தூளானது காவிப்பற்களை சுத்தமாக்கும், முரசுகளிலிருந்து இரத்தம் கசிவதைத் தடுக்கும்.
- நெய்யுடன் காய்ந்த பழங்களின் சாம்பலைக் கலந்து புண்களிற்குப் போடலாம்.
- மற்றய மூலிகைகளுடன் சேர்ந்து பல்வேறு மருந்து தயாரிப்பில் உதவுகின்றது.
  உ + ம் - த்ரிபலா சூரணம் / மாத்திரை / குடிநீர்
- காய்ந்த பழங்களின் தோலை தூளாக்கி வறுத்து பாலுடன் சேர்த்துக் கொடுத்தால் இரத்தக்கழிச்சல் குணமாகும்.

## 5. மருது

அறிவியற் பெயர் :- Terminalla arjuna
குடும்பப் பெயர் :- Combretaceae



பெரிய பச்சை வண்ண மரமாகும். மரப்பட்டை தடிமனாகவும் சிவந்த சாம்ப நிறமாகவும் இருக்கும்.

பாவிக்கப்படும் பகுதி :- பட்டை

செயற்பாடு (action)

இருதய உரமாக - Cardiac tonic
வெம்மை அகற்றி - febri fuqe
கழிச்சலடக்கி - Antidysntic

சேர்ந்துள்ள மருத்துவ இரசாயனங்கள்

1. Tonnin
2. Triterpene
3. Arjunalic acid
4. Glucotannic acid

பாவனை :-

1. முறிவுகளில் அல்லது கண்டல் காயங்களிற்கு மருதம்பட்டைத் தூளினை பசும்பாலுடன் அருந்திவர குணமாகும்.

2. மருதம்பட்டைத் தூளினை சுடு நீரில் பருகிவர உயர்குருதி அமுத்தம் குறையும்.

3. ஈரல் சிதைவு நிலைகளில் ஈரல் பலமுண்டாக்கியாகவும், சிறுநீரகற்றியாகவும் தொழிற்படும்.

4. மருதம்பட்டைக் கஷாயத்தால் நாட்பட்ட புண்களைக் கழுவி சுத்தமாக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைக் காதல்

முகமாலை ஊர்
செ. நாதன்

யேய் அங்க பாரன் என்று நிலாவின் குரலுக்கு திரும்பிப் பார்த்தாள் அனு. ஏண்டி என்ன என்றாள் எதுவும் அறியாதவளாக.

ஒன்னும் இல்லை நான் சும்மா தான் சொன்னனான் என்றாள் நிலா சீ போடி என்றவாறு ஒரு புன்சிரிப்பை உதிர விட்டாள் அனு.

நிலா கேளடி எங்க போறார் என்று, வகுப்புக்கு வரவில்லையா என்று கேளன் என அன்புக் கட்டளையை பிறப்பித்தாள் அனு.

பொறன் வரட்டன் கேட்கிறன் என்றாள் நிலா

இவரும் நின்ற அந்த பளைநகர் பேருந்து நிலைய மர நிழலுக்குள் வந்து சேர்ந்தார்கள் குபேரனும், சுதனும்.

எங்க ஏன் இண்டைக்கு வகுப்புக்கு வரவில்லையா? என்றாள் நிலா. இன்றை அங்க தான் வரப்போறம் என்றான் குபேரன். கொப்பியை காணவில்லை அதுதான் கேட்டம் என்றாள் நிலா.

நிலா சும்மா இரடி இந்தா இந்த கொப்பியை குடு என்றவாறு குபேரனின் கொப்பியை நீட்டினாள்.

அடி ஆத்தி இது எப்படி நடந்தது? பேந்து ஏன்டி நடிப்பு என்றாள் நிலா. நான் நேத்து வகுப்புக்கு போகல்ல அதுதான் நோட்ஸ் எழுத வாங்கினனான் என்றாள் அனு. ஏன்டி நான் தரமாட்டனா என்று நக்கலாக நிலா கேட்க, ஆழியவளை பேரூந்து வந்து நின்றது.

நடத்துனர் வேகமாய் ஏறுங்கள் என்றவுடன், காத்திருந்த அனைவரும் ஏறிக்கொள்ள பேரூந்து புறப்பட்டது யாழ்ப்பாணம் நோக்கி

எல்லாரும் சீற்றில் இருங்கோ என்றார் நடந்துனர். அனைவரும் இருக்கைகளில் அமர்ந்து கொள்ள நிலாவும் அனுவும் ஒரு இருக்கையில் இருக்க அதன் அருகில் குபேரனும் சுதனும் நின்றபடி பயணித்தனர்.

அனு, தனது கைபேசியில் குபேரனுக்கு வட்சப்பில் ஏதோ தகவல் பரிமாற குபேரனும் பதில் போட்டபடி பயணம் தொடர்ந்தது.

பேரூந்து கொடிகாமத்தில் பலரை இறக்கிய பின்னர் இருக்கைகள் காலியாக குபேரனும் சுதனும் அமர்ந்து கொண்டனர்.

மச்சான் என்னவாம் அனு என்றான். சுதன் இல்லடா நாளைக்கு தான் மாமா வீட்டை வவுனியா போறாளாம் வகுப்புக்கு வரவில்லையாம் என்று சென்றாள். அதாண்டா டேய் போய் வரட்டன் விடு என்றான் சுதன். சரிடா பாப்பம் வகுப்பு முடிய சாவகச்சேரி போவம். அங்க போய் கதைப்பம் என்றான் குபேரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனு எப்போதும் அமைதியான சுபாவம் உடையவள். மூன்று அண்ணனுக்கும் ஒரு அக்காவுக்கும் கடைக்குட்டியாக பிறந்தவள். பார்ப்போரை கவர்ந்து இழுக்கும் இயல்புடையவள். இவளை பார்த்து லொள்ளுவிட்டவன்கள் பலர். ஆனாலும் யாருக்கும் மயங்காத அனு குபேரனுடன் மட்டும் பிரியமாக பழகியதால் பின்னாளில் அது கதையாகி விட்டது.

கிளி/ பளை மத்திய கல்லூரியின் 2015ம் ஆண்டு கலைப் பிரிவில் கல்வி கற்று வரும் அனுவும் குபேரனும் படிப்பில் மிகவும் கெட்டிக்காரர்கள்.

குபேரனின் அப்பா ஒரு அரச உத்தியோகத்தராக பிரதேச செயலகத்தில் பணியாற்றி வருகின்றார். குபேரனுக்கு இரண்டு அண்ணாவும் ஒரு தங்கையுமாக ஓர் அழகான குடும்பம். அண்ணன் திருமணமாகி தனியாக வாழ மற்றைய அண்ணன் பல்கலைக் கழகத்தில் விவசாய பீடத்தில் கற்று வந்தான். தங்கையான தீபா O/L படித்து வருகின்றாள்.

தீபாவின் இணைபிரியா நண்பி தான் அனுசியா என்னும் அனு. தீபாவுடன் பாடசாலையிலும் பின்னர் பொது இடங்களிலும் அன்புடன் பழகி வந்தார் அனு.

மச்சான் வகுப்பு முடியுது எனின் வருவாளா அனு சாவகச்சேரிக்கு என்று கேட்டதும், பொறடா மெசேச் பார்க்கண்ணும் போல பார்க்கட்டும் என்றான் குபேரன்.

சில நிமிடங்களில் வகுப்பு நிறைவு பெற அந்த மாணவர் பட்டாளம் மீசாலை சந்தியை ஆக்கிரமித்தது. பலரது தொலைபேசிகள் மாறி மாறி தகவல் பரிமாறும் ஒலிகள் ஒலித்தன.

சிலரது முகம்கள் அன்று முன்னும் பின்னும் தமக்கான உறவுகளை தேட ஆரம்பித்தது. கண்டவுடன் ஒரு புன்சிரிப்புடன் கண்கள் கதை பேசின.

பளையில் இருந்து சென்ற பல மாணவர்கள் சாவகச்சேரி நோக்கிய பேரூந்து தரிப்பிடத்தில் கூட்டமாக நிற்க அந்த சிறிய மினிவான் வந்து சேர்ந்தது. எல்லாரும் பின்னுக்கு போங்க தங்கச்சியாக்கள் என்றார் அன்பாக.

அனுவும் நிலாவும் ஒரு தடவை எட்டிப் பார்த்தார்கள். முன்பகுதியில் குபேரனும் சுதனும் நிற்பதை கண்டு ஒரு புன்னகையை உதிர்த்து விட்டு நின்றார்கள்.

சாவகச்சேரி பேரூந்து நிலையத்தில் இயங்கிக் கொண்ட அனு, நிலா, குபேரன், சுதன் ஆகியோர் எபிக்கேன் குளிர்களி விற்பனை நிலையம் சென்றனர்.

அண்ண நாலு பெசல் தாங்கோ றோழும் தாங்கோ என்றான் குபேரன்.

குபேரன் அனுவுடைய கைபேசியை வாங்கி ஏதோ எல்லாம் நோண்டினான். பின்னர் சொன்னான் ஏன் என்ர போட்டோவை வைத்திருக்கிறாய், அழித்து விடு என்று.

அது கிடக்கட்டும் தீபாவோட நிற்கிற படம் தானே என்றான் அனு. அது சரி நாளை வவுனியா போறன் என்றான் குபேரன். மாமா புதுவீடு, அதுதான் அம்மாவோட போறன் என்றாள் அனு.

ஏன் மாமாவுக்கு மச்சான்யாரும் இருக்கினமோ என்றான் சுதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறாங்கள், எல்லாம் சின்னாக்கள்தான் என்று அனு கூற மச்சான் மார் இருந்தாலும் ஏதோ அவங்களை கட்ட விட்டுப்போடுவியளே என்றாள் நிலா.

சரி கதையை விட்டுட்டு கீறிமை குடியுங்கோ, இராமநாதபுரம் பஸ்வரப்போகுது என்றான் சுதன். காலங்கள் கரைந்தோட அனு குபேரன் காதல் தொடர A/L பரீட்சையில் 02A 1B பெறுபேறுகளை கலைப் பிரிவில் இருவரும் பெற்றுக் கொண்டு பாடசாலைக்கும் தமக்கும் பெருமையை தேடிக் கொண்டனர்.

பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை இருவரும் ஒன்றாக நிறைவு செய்யும் போது அனுவின் வீட்டில் திருமணப்பேச்சு தொடங்கியது.

அனுவின் அப்பா ஓர் நாள் அனுவின் திருமண விடயம் பற்றி கதைக்க வேணும் நீங்கள் ஒருக்கா நாளை வீட்டை வாங்கோ என்றார்.

மறுநாள் வீட்டில் தடல்புடலாக வேலை. அனுவின் இரண்டு அண்ணன்மார் திருமணமான நிலையில் அண்ணி, பிள்ளைகள் என வீடே ஒரு திருவிழாக் கோலம்தான்.

ஆனால் அனு மட்டும் எப்போதும் அமைதியாக ஓர் மூலையில் இருந்தபடி வட்சப் மூலம் குபேரனுக்கு வீட்டில் நடக்கின்ற விடயம் பற்றி தகவல்களை பரிமாறினாள். நீ யோசிக்காத எல்லாம். நல்லபடி நடக்கும் நாம் தப்பே பண்ணல்ல. எமது காதல் எப்பவும் உண்மையானது. அதனால் அது எப்பவும் யெஜிக்கும் என்று அனுவுக்கு தகவல் அனுப்பிவைத்தான்.

எல்லாரது கவனமும் வீட்டின் வாசல் பக்கமாய் திரும்ப ஜதுவும் சண்குட்டியும் அனுவையே நோக்கி ஓடி வர மாமா என்ன சொன்னார் என்றான் அனுவின் அண்ணன் ரமேஸ். அத்தை எங்கை என்றாள் அனுவின் தங்கை. பின்னால் வாறா என்றார் அனுவின் வவுனியா மாமா.

அதுசரி, நீங்கள் எல்லாம் என்ன ஒன்றாய் நிக்கிறியள் ஏதும் விசேசமா என்றார் அனுவின் மாமா. சும்மாதான், சரி முதல்ல உள்ள வாங்கோ என்று அனைவரும் வீட்டு முன் விறாந்தையில் அமர, அத்தை மட்டும் அனுவின் வீட்டின் உள்ளே சென்று உடை மாற்றியபடி ஏதோ கதைத்தனர். அத்தை எனக்கு ஒரே பயமாய் கிடக்கு என்றாள் அனு. நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். எதுக்கும் மாமா வரட்டன் பாப்பம் என்றாள்.

சரிசரி கதையை விட்டுட்டு வாங்கோ சாப்பிடுவம் என்று அனுவின் அம்மா தனம் அழைக்க, அனைவரும் கைகளை கழுவிக் கொண்டு சாப்பிட தயாராக, அம்மாவும், அத்தை சுபாவும், அனுவும் சாப்பாட்டை பரிமாற அனைவரும் கல கலப்பாக கதைத்துக் கொண்டு சாப்பிட்டனர்.

எல்லோரும் சாப்பிட்ட பின்னர் மீண்டும் அனைவரும் விறாந்தையில் கூட்டமாக கூடினர்.

அனுவின் அப்பா கதையை தொடங்கினார். மச்சான் அனுவுக்கும் ஒரு கல்யாணம் பேசலாம் எண்டுதான் எல்லாரையும் வரச்சொன்னனான். அதோட நீங்களும் வந்திட்டியள், நல்லதாய் போச்சு. என்ன மாதிரி என்றால், அனுவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா சிவராசா மச்சான் நான் சொன்னால் கேட்பியள் என்று சொன்னபடியால் தான் நாங்கள் குடும்பத்தோட வந்தனாங்கள்.

மச்சான் நான் உங்களுக்கு புளிப்பாய் எதையும் செய்யமாட்டன். அதோட உங்கட பிள்ளைகள் என்னால் உங்களில வைத்துள்ள நம்பிக்கையால் உங்களின் நன் மதிப்பும் கெட்டுவிடக்கூடாது எண்டும் ஒரு விடயத்தை மறைச்சிட்டினம். அதை இப்ப சொல்லாட்டி பிறகு சொல்லேலாது என்றுதான் ஓடி வந்தனான் என்றார் அனுவின் மாமா ரமேஸ்.

என்னண்டு சொன்னனி தானே, எனக்குத் தெரியும் சொல்லு என்றாள் அனுவின் அம்மா. ஒரே அமைதி, அனு சமையல் அறையின் வாயிலில் நின்று கொண்டு வட்சப்பில நேரடி ஒலிபரப்பை குபேரனுக்கு வழங்கிக் கொண்டிருந்தாள்.

மச்சான் அனுவின்ர திருமணம் என்றுதான் நாங்கள் எல்லாரும் இங்க கூடி உள்ளம். ஆனால் அவள் தன்ர வாழ்க்கைத் துணையை தானே தேடிக் கொண்டு விட்டாள் அது உங்களுக்குத் தெரியாது. உங்களுக்கு தெரிந்தால் நீங்கள் ஏதாவது மறுப்பு தெரிவிப்பியள் எண்டுதான் என்று சொன்னான்.

அவள் பல்கலைக்கழகத்தில் படிக்கேக்க அத்தைக்காறிக்கு எல்லா விடயத்தையும் சொல்லிட்டாள். நீங்கள் திருமண பேச்சு ஆரம்பிக்கப் போகிறியள் எண்டவுடன் எங்களை வரச்சொல்லி அவள்தான் போன் பண்ணினாள் என்றார் அனுவின் மாமா.

மச்சான் எனக்கும் எல்லாம் தெரியும். அந்த பெடியன்ர அண்ணைக்காரன் எனக்கு எல்லாம் சொல்லிட்டான். நான்தான் ஒண்டும் தெரியாது போல இருந்திட்டன்.

எனக்கு அவள் விரும்பின அந்த பொடியனை கட்டுறதில் ஒரு பிரச்சினையும் இல்லை என்றவுடன் வீடு முழுவதும் ஒரே சிரிப்பொலிதான். அனைவர் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் வழிய அனுவை நோக்கினர்.

மெதுவாக நடந்துவந்த அனு அப்பாவின் கைகளை பிடித்து கும்பிட்டபடி அழுதாள். ஏன் நீ அழுறாய் நீதான்டி எங்கள் தெய்வமே. போ... போய் அந்த பொடியனுக்கு சொல்லு நாளைக்கு நாள் நல்லதாம், அவன்ர அம்மா அப்பாவை வரச்சொல்லு என்றார்.

அனைவரையும் சுற்றுமுற்றும் பார்த்த அனு மெதுவாக தன் படுக்கை அறைக்குள் நுழைந்து கொண்டாள்.

மச்சான், சுபாட்ட உவள் அனு சொன்ன விடயம் எல்லாத்தையும் ஒருநாள் நான் உங்கட வீட்ட வந்த போது சுபா எல்லாத்தையும் என்னட்ட சொன்னாள். நானும் எல்லாத்தையும் கேட்டுட்டு இங்க வந்து விசாரித்தன். அந்தப் பொடியனும் அவளை நீண்ட காலமாக விரும்பினான் எண்ட விடயத்தை அந்தப் பொடியன்ர அண்ணைகாரன் சொன்னான்.

நாங்கள் இருவரும் முடிவெடுத்து கொண்டம். எமக்கு மதிப்பளித்து அதுகள் நடக்குதுகள். அதுதான் நாங்கள் இதை தெரிந்த மாதிரி காட்டக்கூடாது. எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பு முடியட்டும் எண்டுதான் பேசாம இருந்தனாங்கள் என்றார் அனுவின் அப்பா.

பொழுது விடிந்தது, மீண்டும் வீடுமுழுக்க ஒரே பரபரப்பு. சொந்தங்கள் பலர் ஒன்றுகூட குபேரனின் உறவுகள் வந்து சேர்ந்தனர். திருமணத்துக்கான நாட்கள் பார்க்கப்பட்டு திருமணம் பளை ராணிமகால் திருமண மண்டபத்தில் 01.01.2020 என்று முடிவாகிவிட்டது.

மதிய உணவின் பின்னர் மருமகளுடன் பேசி மகிழ்ந்தார்கள் குபேரனின் அம்மா அப்பா.

சம்மந்தி..... காதலிப்பது தப்பு இல்லை. அதனை உண்மையாக காதலிக்க வேணும். அதோட தமக்கான சொந்தக் காலில் நிக்கக்கூடிய ஒரு சூழலை உருவாக்கும் வரை உறுதியாக இருந்து திருமணம் முடிக்கவேணும்.

அப்பதான் சம்மந்தி, எங்கள மாதிரி பிள்ளைகளை பெத்த அம்மா அப்பாவுக்கும் பெருமை. அதைத்தான் உங்கட மகனும் என்ர மகளும் செய்து காட்டிட்டினம் என்றார் அனுவின் அப்பா.

சம்மந்தி நாங்கள் போட்டுவரப்போறம். நிறைய வேலை இருக்கு என்று புறப்பட்ட தனது வருங்கால மாமா மாமியை வாசல்வரை சென்று வழி அனுப்பினாள் அனு.........

முற்றும்

தொடங்கு முன் தயங்காதே
தொடங்கிய பின் நடுங்காதே
இடையில் நீ உறங்காதே
வேதனை கண்டு பதுங்காதே
சோதனை வரும் துவளாதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைக்கு அடிமையாதல்

ப.ஸிரேஜா
தரம் – 8
கிளி/ பளை மத்திய கல்லூரி.

கிழக்கு வெளுத்தது
கீழ் வானம் சிவத்தது
செக்கச் செவேல் என - பொன்னொளி தான்
பூமா தேவியை வரவேற்கும்

ஆதவன் அரவணைப்பால்
மலர்ந்திட்ட பூந்தளிர்கள்
ஆங்காங்கே தலையசைத்து
அதிகாலையை வரவேற்கும்

ஆலய மணியோசையானது
அண்டமெல்லாம் அதிர்ந்து நிற்கும்
கட்டியங் கூறும் காக்கைகளும்
பக்குவமாய்ப் பாட்டெடுக்கும்

அப்பாடா பொழுது புலர்ந்தது
கண் விழித்து எழுந்த போது
சொந்தக் கதை அது
சோகக் கதை ஆகியது

உப்பில்லை செப்பில்லை
உலையிலே இடுவதற்கோ
அரிசியோ அங்கில்லை - மிச்சம்
வைப்பதற்கும் ஏதுமில்லை

"அப்பா பசிக்கிறது" என அங்கு
பச்சிளம் குழந்தைகளின் குமுறல் தான்
உள் நெஞ்சை வருடியது
உண்பதற்கோ ஏதுமில்லை

என்னப்பா செய்வதென்ற
மனைவியின் ஏக்கப் பெருமூச்சு
பேரிடியாய் கேட்ட போதும்
மனம் தடு மாறவில்லை

போதையில் நனைந்த உள்ளம்
வேதனையில் ஏங்கியது
குடிப்பதற்கு ஏதுமில்லை
குழப்பங்களும் இருக்கவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டமும் நடையுமாக - வீதி
ஓரமாக விரைந்த போது
என்னப்பா இந்தப் பக்கம் என்ற
முதலாளியின் ஓசை கேட்கிறது.

நாளாந்த செலவுக்கோ
நாலு சதம் கையில் இல்லை
விரைகின்றேன் எங்கேனும்
வேலையேதும் கிடைத்திடுமோ......

இங்கிருந்து வேலை செய்ய
வேதனமோ தந்திடுவேன்
என்ற போது ஏங்கும் மனம்
சம்மதித்து ஏற்று நிற்கும்

நாழிகை நகர்ந்து விட
பொழுதும் புலர்ந்த போது
உழைத்திட்ட ஊதியத்தை
உற்சாகமாய் ஏற்று நின்றான்

மதுபான சாலை நோக்கி
நகர்ந்திட்ட மாமனிதன்
போதை வஸ்து பாவனையை
பொழுது போக்காய் கொண்டு நின்றான்

குடிப்பதும் கும்மாளமடிப்பதும்
நிரந்தர செயற்பாடாக
நிச்சயமாய்க் கொண்ருந்ததால்
நிற்கதியாய் நின்றிருந்தான்

வரவிற்கேற்ப செலவில்லை
வாழ்க்கையிலே பற்றுமில்லை
போதையிலே தோய்ந்து விட்டதால்
வாழ்க்கையையே தொலைத்து விட்டான்.

நிம்மதி என்ற சொல்லை
நினைவிலும் கண்டதில்லை
தோற்றுவிட்ட வாழ்வதனை
தொல்லை என்று எண்ணவில்லை

பொறுப்பற்ற செயலினாலே
வாழ்வையே வெறுப்பாக கொண்டிருப்பான்
போதைக்கு அடிமையானால்
வேதனை தான் மீதியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியாளர்கள் நாம்

**நவரத்தினராசா பிரசாளினி**
**வணிகப்பிரிவு (உயர்தரம்),**
**கிளி/ பளை மத்திய கல்லூரி.**

உலகில் பலர் பிறக்கிறார்கள். சிலர் சாதிக்கிறார்கள். சிலர் புகழ் பெறுகின்றார்கள். சிலர் அப்படியே மடிந்தும் விடுகின்றார்கள். நாங்கள் எதை நம்புகின்றோமோ அதுதான் நடக்கும். இதைத்தான் பைபிளும் கீதையும் ஏனைய மதங்களிலுள்ள நூல்களும் கூறுகின்றன. நாம் ஒவ்வொருவரும் சாதிக்கப் பிறந்தவர்கள். உலகில் சாதனை புரிபவரே வரலாற்றில் இடம் பிடிக்கின்றார்கள் என்ற நம்பிக்கையோடு செயற்படுவோமானால் நாமும் வரலாற்று நாயகர்களாகலாம். நாம் பிறந்ததே வெற்றி அடைவதற்கு என்ற நம்பிக்கையோடு செயற்படுங்கள். உண்மையில் வெற்றி பெற்ற மனிதர்களை ஆராய்ந்து பார்த்தோமானால் அத்தனை பேரும் தன்னம்பிக்கை அதிகம் உள்ளவர்களாகவே இருக்கிறார்கள்.

நம்பிக்கையுள்ளவர்களுக்காக எழுதப்பட்ட வாசகம் "என்னை நன்றாக இறைவன் படைத்தான். நல்லதொரு தாய் தந்தையரையும் நல்ல சுற்றத்தையும் கொண்ட நாட்டிலே என்னை படைத்திருக்கிறான். அன்றைக்காவது பட்டினி வயிற்றோடு நான் படுக்கைக்குச் செல்லமாட்டன். இறைவன் எனக்காக உணவை தேடி வைத்திருக்கின்றான் என நம்பிக்கை வளர வேண்டும்.

"மேவினஸ் எவன்...." என்ற உலகப் புகழ் பெற்ற தன்னம்பிக்கை பயிற்சியாளர் சொல்கிறார், எல்லா மனிதர்களிடமும் திறமை இருக்கிறது. அத் திறமையை இனங்கண்டு அவர்களைத் தட்டிக் கொடுத்து வளர்ப்பது தான் என் வேலை என்று கூறினார். சிறுவன் ஒருவன் பாலம் ஒன்றின் கீழே ஓடுகின்ற ஆற்றைப் பார்த்துக் கொண்டிருந்த பொழுது அவனது சிந்தனை விரிந்தது. இந்த ஓடும் தண்ணீர் தினமும் ஓடிக்கொண்டிருக்கிறது. ஒரு இடத்தில் நிலையாக இருப்பதில்லை. இப்பொழுது பாலத்திற்கு கீழே ஓடும் தண்ணீர் சிறு வினாடிகளில் பாலத்துக்கு அந்தப்புறம் வெளிப்பட்டு ஓடிக்கொண்டிருக்கிறது. இதேபோல எங்களுடைய வாழ்க்கையும் இன்றைக்கு தாழ்ந்திருந்தாலும் என்றைக்கோ ஒரு நாள் ஓடிப்போய் நல்ல நிலைமைக்கு மாறும் என்று நம்பினான். அவனுடைய முயற்சி ஒரு முகப்பட்டதால் மிகப் பெரிய செல்வந்தனாக மாறினான். இதற்குக் காரணம் ஓடும் தண்ணீர் கற்றுத் தந்த பாடம் ஆகும். பிரச்சினைகள் எதுவும் இல்லாது விட்டால் முன்னேற்றமும் இல்லை. தீர்வுகளும் இல்லை. எனவே முன்னேற விரும்பினால் பிரச்சினையை கண்டு ஒதுங்க மாட்டார்கள். பிரச்சினைகள் என்று இல்லாத உலகம் இருந்தால் அங்கு புதிய கண்டுபிடிப்புக்கள் புதிய அபிவிருத்திகள் என்று எதுவும் இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களுக்கு வேலையில்லாமல் போய்விடும். எனவே பிரச்சினை என்பதனை வைத்துக் கொண்டு அதனை ஏற்றுக் கொண்டு அதிலிருந்து தீர்வு காணப் புறப்படுவதுதான் சரியான வழி என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். உலகத்தில் எல்லா சிகிச்சைகளையும் விட, எல்லா வித முயற்சிகளையும் விட நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதுதான் சிறப்பானது. அந்த நம்பிக்கை ஒன்றின் மூலமாக மலையையும் பெயர்த்து விடலாம். முன்னேற விரும்புகின்ற ஒவ்வொருவரும் எமக்கு நாமே ஒரு திடசங்கற்பத்தைச் செய்து கொள்ள வேண்டும். தோல்வியாளராக ஒருநாளும் போகக் கூடாது. என்றைக்குமே எல்லா காரியங்களையும் வெற்றியாக முடித்துவிட்டே தூங்கச் செல்வேன் என்று உறுதிகொள்ள வேண்டும். தன்னம்பிக்கை உள்ளவர்களைச் சுற்றி எப்பொழுதும் ஒரு சுறுசுறுப்பு, உற்சாகம், கண்ணுக்குத் தெரியாத ஒரு வேகம் தென்பட்டுக் கொண்டே இருக்கும்.

தோமஸ் அல்வா எடிசன் என்பவர் தனது வீட்டுச் சுவரில் இருந்த வரிகளை பெரிதாக எழுதி வைத்திருக்கிறார். "எப்பொழுதும் எதையும் சிறப்பாகச் செய்வதற்கு ஒரு வழி இருக்கிறது. அதைக் கண்டுபிடித்துக் கொள். அதைக் கண்டுபிடித்துக் கொண்டால் நீ உலகில் சிறந்த மனிதனாக மாறுவாய்" என்பது அவ் வாசகம் ஆகும். எனவே நாம் அனைவரும் அந்த வழியைக் கண்டுபிடிப்பதுதான் எங்கள் வேலை என்பதை நம்பிக்கொள்ள வேண்டும். அதாவது சந்திரனில் காலடி வைக்க வேண்டும் என்று நினையுங்கள். அது தவறினால் நீங்கள் நட்சத்திரத்தின் மீது வீற்றிருப்பீர்கள் என்றவாறு சிந்தியுங்கள்.

ஒருவருடைய எண்ணம், பேச்சு, செயற்பாடு, மனப்பாங்கு, நடத்தை இவை அனைத்தும்தான் அவருடைய சாதகமான எண்ணங்களை உருவாக்குகிறது. ஆகவே நாங்கள் நினைப்பது நலமாக நினைக்க வேண்டும். தினசரி எமது மனதிற்கு நாமே கட்டளையிட வேண்டும். நம்பிக்கையிருக்கும் வரை தோல்வி என்ற வார்த்தைக்கு இடமே இல்லை. எங்களையும் இறைவன் எதையோ சாதிப்பதற்கு படைத்திருக்கிறான் என்று நம்பிக்கை கொண்டால் வெற்றியாளர்கள் நாம் ஒவ்வொருவருமே.

'எவன் தன்னைத் தானே செலவழிக்கிறானோ
அவன் பணக்காரனாகி விடுகிறான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிணாமத்தின் பரிமாணங்கள்

செல்வி. நே.நேருகா
மாணவி
கிளி/ பளை மத்திய கல்லூரி

உலகியல் மாற்றம் ஒன்றே மாறா நிலையினது. வரலாற்று ஆய்வின்பால் தூசிகளால் ஆனது இந்த உலகு. அன்றிலிருந்து இன்றுள்ள நிலையை எட்டும் வரை பல்வேறு மாற்றங்களைக் கண்டுள்ளது. நன்மையான மாற்றங்களைக் காட்டிலும் தீமையான மாற்றங்கள் வெகு தீவிரமாகப் பரவுகின்றன. நன்மைகளால் உலகம் மாற்றம் பெற வேண்டும், சிறந்த பிரஜைகளால் அது கட்டியெழுப்பப்பட வேண்டும் என எல்லோரும் எண்ணுகின்றனர். ஆயினும் தம்மைமாற்ற யாரும் தயாரில்லை. மனிதன் ஒரு சமூகப் பிராணி. அவன் தேவையின்பால் சமூகத்தில் இணைகிறான் என்பார் அறிஞர் அரிஸ்ரோட்டில். தனிமனித ஒழுக்கமே இன்றைய சமூகத்தின் அடிப்படைத் தேவையாகும். ஒவ்வொரு மனிதனும் தன்னைத் திருத்திக் கொள்வதே சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும் என்பது "குரூஸ்" கூற்று.

ஒழுக்கம் என்பது ஒரு செயலாய் குறிப்பிடப்படும் மனித நடத்தை அல்ல. அது சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல நற்பண்புகளின் சேர்க்கையாகும். தனது சொந்தக் கடமைகள் தொடக்கம் குடும்பத்திற்கு, சமூகத்திற்கு, தேசத்திற்கு ஆற்ற வேண்டிய அத்தனை கடமைகளும், சேவைகளும் ஒழுக்கத்தின் பாற்படும். "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்." அத்தகைய மேன்மை மிக்க ஒழுக்கத்தை வாழ்பவனே சிறந்த பிரஜையாகிறான்.

மனித முன்னேற்றத்தைத் தெளிவுபடுத்தும் மிக முக்கிய சந்தர்ப்பமே நாகரிகம். வானரன் மனிதன் ஆனான். அவன் தன் முற்போக்கான நடத்தைகள் நாகரிக வளர்ச்சி ஆயிற்று. ஆனால் இன்று பொருளற்ற, பயனற்ற நடத்தைகள் மலிந்துள்ளன. அவை நகரிகம் என்ற பெயரில் உலா வருகின்றன. இவற்றை விலக்கிட வேண்டும். ஒருவன் தன் வாழ்விடம் மனிதர்கள், பண்பாட்டுடன் கைகோர்க்க வேண்டும். இவ்வாறான நல்ல மாற்றங்கள் நிகழுமெனில் உலகம் சிறப்புறும்.

தானும் துன்புறாது பிறரையும் துன்புறுத்தாது வாழ்வதே உயர்ந்த வாழ்வாகும். தான் பிறந்த தேசத்தை பிறழ்வின்றிக் காக்க பிரயத்தனம் செய்வது கடமையாகும். சமூக நிலைகளின் நிர்ப்பந்தங்கள் தனிமனித ஆளுமைப் பண்புகளை, நடத்தைகளை நிர்ணயிக்கின்றன. "சுதந்திரத்தின் மீதான பயணம்" எனும் "எரிக்பாம்" எழுதிய நூல் குறிப்பிடுவது போல தனித் தன்மையை வெளிப்படுத்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சாதனை மற்றும் முரண் நிலைகள், பாதுகாப்பின்மை போன்ற வெளிப்பாடுகளும் அதிகரித்தே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் இயற்கையோடு ஒன்றித்தான் மனிதன். பின் அதன் உறவைத் துறந்தான். இன்று சமூக ஒருமைப்பாட்டையும் இழந்து நிற்கின்றான். வணிக மனப்பான்மை எனும் புதிய வகைக்குள் சிக்குண்டுள்ளான். இந்த சமூக ஆதிக்கம் மனமுறிவுகள் முரண்நிலைகளைத் தோற்றுவிக்கிறது. இந்நிலை அழிவிற்கான உந்துதலை ஏற்படுத்துகிறது. இதனை ஒடுக்க அதிக சக்தி தேவைப்படுகிறது. இவ்வாறு மேலும் அதிக வன்முறை உணர்வைத் தோற்றுவிக்கிறது. இவற்றை சரி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட தீர்வுகளும் கூட புதிய புதிய முரண்பாடுகளை உருவாக்கியுள்ளன.

உடல் அங்கம் ஒன்றில் ஏற்படும் புற்று நோய் உடல் முழுவதும் பரவுவது போல சமூகத்தின் அங்கமான தனிமனிதனிடத்தில் இருக்கக் கூடிய ஒழுக்கக் கேடு சமூகத்தை அழித்துவிடுகிறது. 'மது உள்நுழைய மதிவெளியேறிவிடும்' என்று அறியாமல் பெண்கள், சிறுவர்கள் கூட விதி விலக்கின்றிப் போதைவஸ்துகளின் பால் ஈர்க்கப்பட்டுள்ளனர். இளம்பராயத்தினர் அனேகர் தீமைக்கு நிரந்தர அடிமைகளாகி தமக்குத் தாமே தீயிடுகின்றனர். மருத்துவ நோக்கங்களுக்காகக் கண்டறியப்பட்ட வஸ்த்துக்கள் பல மாறுதல் அடைந்து, அளவில் அதிகரித்து போதைப்பொருட்களாயின. விழிப்புணர்வுச் செயன் முறைகளும்கூட அவற்றை அதிகரிக்க வைக்கும் அவல நிலையைத் தந்துள்ளன. இதனோடு பிணைந்து சட்டவிரோத செயல்களும் மலிந்து பொருளாதாரமும் சிதைந்து வாழ்க்கைத் தரத்தை கடன்சுமை முதலானவற்றால் நலிவடையச் செய்துள்ளது.

சமூகத்தில் ஒழுக்கம் நிலைத்திருக்க சட்டம் அடிப்படையானது. சட்டம் மதிக்கப்படாமை சமூகச் சீர்கேடு ஆகும். சட்டத்தின்பாலுள்ள ஓட்டைகள் குற்றமிளைத்தவன் தப்பிச் செல்ல வழி சமைக்கின்றது. மனித உரிமை அமைப்புகள் கடும் சட்டங்களை எதிர்க்கின்றன. சட்டங்கள் கடுமையாக்கப்படும்போது குற்றங்கள் திரைமறைவில் அரங்கேறுகிறதே தவிர சட்டவாக்கத்திலும் ஊழலே காணப்படுகிறது. தவறெனத் தெரிந்தும் அதைச் சரியாக்க விவாதிப்போர் அனேகர். அதற்கு வாதத் திறமை என்ற பாராட்டும் கிடைக்கிறதே. பிழையைப் பிழை என ஏற்கும் மனப்பாங்கு சிலரிடமே உள்ளது.

சாத்தியங்களைக் கையாளும் கலை அரசியலாகும். சிலப்பதிகாரம் கூறுவது போல் அறம் பிழைத்தோர்க்கு மட்டுமன்றி அரசியல் பிழைத்தோர்க்கும் மறம் கூற்றாகும். அன்று நல்லொழுக்க விழுமியங்களைப் பேணுவதற்காக, மதங்கள் வளர உழைத்தனர். இன்று மனங்கள் அரசியல் தளமாகி தந்திரோபாயங்களையும் தீவிர வாதங்களையும் பிரசவிக்கின்றன. பாதுகாப்புக் கடமையில் நின்ற இராணுவ வீரனொருவன் வேதனைப்பட்டுக் கொண்டான். எதற்காகவென்றால் ஆலயத்திற்கு வரும் ஆன்மீக வாதியையும் தீவிர வாதியையும் பிரித்துணர தன்னால் முடியவில்லையே என்று. ஏனெனில் இவர்களும் தீவிரவாதிகளைப் போலவே உள்ளனர். உண்மை நிலை அது தான். தீமைகள் புரையோடியதால் யாவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவிரவாதி போலாயினர். ஆலயத் திருப்பணிகள், அறநெறிகள், சமூகசேவைகள் என நல்லொழுக்க அமைப்புக்களும் சுய இலாபம் தேடுகின்றன. நிறுவனங்கள் பலவும் தூர நோக்கங்களைப் பிரசித்தப்படுத்தும்போது சமூகத்தைக் கட்டியெழுப்புதல், தேசத்தைக் கட்டியெழுப்புதல் என்று பேசுகின்றனவேயன்றி நடைமுறைகள் மாறுபட்டே ஓடுகின்றன.

வருங்காலத்தின் ஆற்றல் கல்வி, மேம்பாடு அனைத்தினதும் அடிப்படை கல்வியே. சமூக நிலை மாற்றத்திற்கு கல்வி அவசியம். "கல்வி என்பது மிகச் சக்திவாய்ந்த ஆயுதம்; அதனை உலகையே மாற்றப் பயன்படுத்தலாம்" என்பது கறுப்பு மலர் நெல்சன் மண்டேலாவின் கருத்து. அறிதல், ஆற்றுதல், வாழ்தல், சேர்ந்து வாழ்தல் என்பது யுனெஸ்கோவின் கல்விக்குரல். பாடசாலைக் கல்வியில் முதல் மூன்று வருடங்கள் நல்லொழுக்கத்தைப் போதிக்கின்றது யப்பான். இவற்றால் என்ன பயன்? கல்விப்புலத்திலும் சமவாய்ப்பு, சம சந்தர்ப்பம் என்பதற்கு அப்பால் பின்கதவுகள் திறந்தே உள்ளன.

**"அல்லவை தேய அறம்பெருகும்**
**நல்லவை நாடி இனிய செயின்"**

ஆணிவேர், பக்கவேர், விழுது, கிளை, விதை என அல்லாதன பெருகிவிட்டது. இந்த விருட்சத்தைச் சாய்ப்பதற்கு அறம் என்ற கோடரியைக் கைகளில் எடுப்போம். கொலை, கொள்ளை, களவு, காமம், கஞ்சா என்று மலிந்த சீர்கேடுகளின் தளை அறுப்போம். "உன்னையே நீ அறிவாய்" எனும் கூற்றை மனங்கொள்வோம். தனிமனித மாற்றமே முழு உலகின் மாற்றமாகும். நற்செயல்களால் மலர்ந்து மணம் பரப்பும் புதியதோர் உலகம் செய்வோம்.

வெற்றி வந்தால் பணிவு அவசியம்
தோல்வி வந்தால் பொறுமை அவசியம்
எதிர்ப்பு வந்தால் துணிவு அவசியம்
எது வந்தாலும் நம்பிக்கை அவசியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்தில் ஒருநாள்

சு.பகீர்தனன்
கரந்தாய்,
பளை.

தமையன் சுந்தரனுடன் தங்கை சிவகாமி விளையாடிக் கொண்டிருந்தாள். வேறு என்ன விளையாட்டு ஓலை வீட்டுக்கு வெளியே உள்ள மணலைக் கிண்டி விளையாடிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் வீட்டைச் சுற்றி பல தென்னை மரங்கள் உள்ளன. அதாவது அவர்கள் குடிசை ஒரு தென்னந் தோப்புக்குள்தான் அமைந்திருந்தது. அந்தத் தோப்பு ஒரு பெரிய காணிக்குள்தான் அமைந்திருந்தது. தென்னந்தோப்பைச் சுற்றி நல்ல புதிய வடலிமட்டை வேலி. காற்றோட்டமான தோப்பு.

திடீரென்று குடிசையின் அருகிலிருந்த தென்னை மரமொன்றின் மேலே நான்கைந்து குரங்குகள் வந்து குந்திக்கொண்டன. சுட்டிப்பிள்ளை சிவகாமி அந்தச் சேட்டைக் குரங்குகளை கண்டு விட்டாள். அவளுக்கு குரங்கென்றாலே பிடிக்காது. அவளுக்கென்ன அந்தக் கிராம மக்களுக்கே குரங்கைப் பிடிக்காது. ஏனென்றால் இந்தக் கிராமத்தில் குரங்கென்றால் கும்பகோணமும் ஏறும். அதாவது அவர்கள் வளர்த்த தென்னை மரங்களில் குலைகுலையாய்த் தொங்கும் இளநீர்களைப் பிடுங்கி அரித்துக் குடித்து நாசமாக்கி விடும்.

ஆனாலும் குழந்தைகளுக்கு குரங்குகளுடன் சின்னச் சேட்டைகள் செய்ய நல்ல ஆசை. குட்டிச்சிவகாமி அந்தக் குரங்குகளைப் பார்த்து பல்லைக் காட்டி சிரித்துக் கொண்டிருந்தாள். தமையன் சுந்தரன் "ஐயோ! அம்மா, குரங்கு குரங்கு" என்று கூச்சலிட்டான். தாய் லோயினி கூச்சலைக் கேட்டு நல்ல மொத்தத்தடியினைக் கொண்டு வெளியே வந்து குரங்குகளை "ச்சூ ச்சூ" என்று கத்தி விரட்டினாள். குட்டிப்பிள்ளை சிவகாமியும் தன் பிஞ்சுக் கரங்களை ஆட்டி சேட்டைக் குரங்குகளை குட்டிக் கோபத்தோடு விரட்டினாள். அந்தச் சேட்டைக் குரங்குகள் பயந்து மரத்துக்கு மரம் தாவி காணிக்கு அருகிலிருந்த முட்பற்றைக்குள் ஓடி ஒழிந்து கொண்டன.

தகப்பன் ரங்கநாதன் காலையில் எழுந்து வழக்கம் போல வயலுக்கு நெல் விதைக்கச் சென்று விட்டார். லோயினி கணவனுக்கு மதியம் ஒரு மணிக்கு உணவு கொடுக்க வேண்டும் என்ற பதைபதைப்புடன் குடிசைக்குள்ளே மண் அடுப்புக்கு விறகு வைத்து நெருப்பு மூட்டி பானையில் உலை வைத்தாள். பின் "அப்பாடா" என்று நிலத்தில் அமர்கிறாள்.

திடீரென்று மீன்காரன் கோண் அடித்துக்கொண்டு தெருவழியே செல்லும் சத்தம் லோயினியின் காதில் விழுந்தது. லோயினி அவசர அவசரமாக எழுந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய பணப்பையிலுள்ள நூறு ரூபாய் தாள்க்காசை எடுத்து தெருப்பக்கமாக விரைந்து ஓடிச்சென்று சைக்கிளில் வரும் மீன்காரனை மறித்து நல்ல பாரைமீனை தேக்கமிலையில் வாங்கிக் கொண்டு 100 ரூபாய் தாள்க்காசை மீன்காரனிடம் கொடுத்து விட்டு வீட்டுக்குள் நுழைந்தாள். பின்பு மீனை சுத்தப்படுத்தி துண்டுதுண்டாக வெட்டி குழம்பு வைத்துவிட்டு சிவகாமியையும் சுந்தரனையும் குளிப்பாட்டியபின் உணவு ஊட்டிவிட்டு கணவனுக்கு சாப்பாட்டுப் பாசல் கட்டி இரு குழந்தைகளுடனும் தெருவழியே போய்க்கொண்டிருந்தாள். தெருவோரம் கிடுகு பின்னிக்கொண்டிருந்த பவளம் அக்காவுக்கு இரண்டு பேச்சுக் கொடுத்து விட்டு ஒரு மாதிரி நடந்து வயலுக்கு வந்துவிட்டாள். அன்புக்கணவன் ரங்கநாதனுக்கு மதிய உணவு கொடுப்பதற்கு வயலில் வேலை செய்து கொண்டிருந்த கணவனை அழைத்து அருகில் இருந்த வேப்பமரத்தடியில் இருவரும் ஒன்றாக அமர்ந்து உணவு பரிமாறினாள். இரு குழந்தைகளும் வயல் வெளியில் விளையாடிக் கொண்டிருந்தனர். கணவன் ரங்கநாதன் மகிழ்ச்சியுடன் உணவை உண்டுவிட்டு சற்று நேரம் குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடினான். சிறிது நேரத்தின் பின் லோயினி குழந்தைகளுடன் வீடு திரும்பினாள். பின் காயவைத்த பனை ஓலைகளை குடிசைக்குள் எடுத்துக் கொண்டு வந்து பாய் பின்னிக் கொண்டிருந்தாள். சுந்தரனும் சிவகாமியும் அம்மா வெயிலில் காயவைத்த கொப்பறாவை காக்கைகள் எடுக்கவிடாமல் பார்த்துக் கொண்டிருந்தனர். அந்தக் காகங்கள் அவர்களுக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தன. பவளச் சூரியன் கொஞ்சங் கொஞ்சமாக மறைந்து கொண்டிருந்தான். மாலை வேளை தகப்பன் ரங்கநாதன் வயல்வேலை முடித்துவிட்டு சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். குழந்தைகள் அப்பாவை இன்முகத்துடன் வரவேற்றனர். தாய் லோயினி பின்னி முடித்த பாய்களை அடுக்கி வைத்துவிட்டு குழந்தைகளுக்கு கை, கால், முகம் கழுவிவிட்டாள். குழந்தைகள் வீட்டிற்குள் வந்து அமர்ந்தனர். தாய் அனைவருக்கும் தேநீர் கொடுத்தாள். அனைவரும் மகிழ்ச்சியாக சிரித்துப் பேசினர். தெருவழியே கௌரி அன்ரி மாடுகளை மேய்த்துக்கொண்டு பட்டிக்கு திரும்பிக் கொண்டிருந்தாள். அவசர அவசரமாக இரவு உணவை தயார் செய்தாள் தாய் லோயினி. அனைவரும் மகிழ்ச்சியாக இரவு உணவை உண்டனர். லோயினி நாளை காலை அவ்வூர் அம்மன் கோயிலில் நடைபெறவிருக்கும் திருவிழாவிற்கு செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்துவிட்டு அனைத்து வேலைகளையும் செய்து முடித்த திருப்தியுடன் நிம்மதியாக உறங்கினாள். இரவு வானில் சந்திரன் அமைதியுடன் குளிர்ச்சியான ஒளி வீசிக்கொண்டிருந்தான். (இதேபோல் இயற்கையோடு பழகிய சிறப்பம்சமும் கலையம்சமும் மிக்க கிராமம் எங்கள் இனிமையான கரந்தாய்க் கிராமமே ஆகும்.)

முற்றும்........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை வழங்கல்.....

திருமதி. சுபாஜினி பத்மலகீந்திரன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.

வாழ்க வாழ்கவே - என்றும்
வாழ்க வாழ்கவே
வளமிகுந்த பச்சிலைப்பள்ளி
பிரதேச சபை

வருமானம் குறைவெனினும்
வளமான சேவை செய்து
தரணியிலே உயர்ந்தோங்கும்
தரம் மிக்க எம்சபையாம்

தென்னை பனை வாழை நல்ல
முக்கனிகளும் நிறைந்திடவே
பச்சிலையாம் பளை நகரின்
மத்தியில் மிளிரும் சபையே

கருவறையில் தொடங்கும் சேவை
கல்லறையில் நிறைவு பெற
மக்கள் தேவை உணர்ந்து நின்று
மனம் மகிழ்ந்து சேவை ஆற்றும்

முள்ளிப்பற்று முகமாலை புலோப்பளை என இங்கு
மூன்று உப அலுவலகங்களும் இணைந்தே பணி செய்யும்
சுற்றுச்சூழல் சுகாதார அபிவிருத்திப் பணியதனை
மக்கள் மனம் மகிழும்படி சேவைதனை ஆற்றிடுமே

சிறப்பு மிகு சந்தையையும் சீர்மிகுந்த ஆலயமும்
செழிப்புடனே கல்விச்சேவை சிறந்திடவே வழங்கியது
பத்திரிகை போட்டு நிதம் பாடம் தனை புகட்டிடவே
நூலக சேவையது நூர்ந்திடாது ஒளிர்கிறது

சமுதாய அபிவிருத்தியை நிலைபெறவே செய்திடவே
சனசமூக நிலையங்களை சரியாமல் உயர்த்தியது
சுத்தமான குடிநீரை மக்களுக்கு வழங்கி நின்று
தேச அபிமானம் காத்து மக்கள் நலன் பேணிடுமே

ஆயுர்வேத நிலையங்களால் ஆயுளையும் கூட்டிடவே
ஆயுர்வேத மருந்தகங்கள் தம் பணியைப் புரிந்திடுமே
ஒற்றுமையாய் ஒன்றிணைந்து ஓங்கிடவே சேவை செய்து
நற்பெயரைக்காத்து நின்று நல்லாட்சி செய்திடுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம் பெருங்கோயில் (குறுங்கதை)

**த.கங்கைஆத்மன்**

பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்த வேந்தன்

புத்தகப்பையை தோழால் கழற்றி இறக்கிவிட்டு அடுக்களைக்குள் சென்றான். உணவுத்தட்டிலே உணவைப்போட்டு மென்றான். "என்னம்மா இந்த பருப்பில உப்பில்ல. கறியில காரமுமில்லை. சுவையே இல்லாத சாப்பாடு. என்னண்டு சாப்பிடுறது." என்று பொரிந்து தள்ளியவன் சாப்பாட்டுத்தட்டை அவசர அவசரமாகக் கழுவினான்.

"அம்மா எனக்கு ஒரு ஆயிரம் ரூபா காசு தாங்கோ. சந்தியில கிடக்கிற சாப்பாட்டுக்கடைக்கு போட்டு வாறன்" என்றான். என்ன செய்வது பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்பது போல காசை எடுத்து நீட்டினாள் தாய் பேரன்பு.

கடையில் நன்றாக சாப்பிட்ட வேந்தன் வாயைத்துடைத்தபடி வெளியேறினான். "தம்பி... தம்பி... சரியா பசிக்குது... காலமையிலயிருந்து ஒண்டுமே சாப்பிடேல்ல. ஏதாவது சாப்பாடு வாங்கித்தாவன் என்ற குரல் கேட்டு திரும்பிப்பார்த்தான். கையை நீட்டியபடி எலும்பும் தோலுமாக நின்ற வயோதிபத்தாயை கண்டும் காணாமல் வெடுக்கெனச் சென்றான்.

வீட்டுக்கு வந்த மகனை "என்னடா வடிவாச் சாப்பிட்டனியே" என்று புன்னகையோடு கேட்டாள் தாய். ஓ.... ஓ.... என்றான் அவன்.

பேரன்பு.... பேரன்பு..... அயல் கிராமத்தில் வசிக்கும் பொய்கையின் குரல்

பேரன்புவின் இதயத்தில் அலாரம் அடித்தது போலிருந்தது. ஆனாலும் சுதாகரித்தவளாய் "உள்ள வா பொய்கை" என்றாள் சிறு ஏக்கத்தோடு. நான் உள்ள வாறதுக்கு வரேல்ல. ஏன் பேரன்பு வேலைக்கு வரேல்ல. நீ வேலைக்கும் வராமல் ரண்டாயிரம் ரூபா காசும் வாங்கிக் கொண்டு வந்தனி. உன்னால் வேலைக்கு வரமுடியாட்டா சொல்லு. நான் வேற ஆக்களப்பிடிக்க. வேலைக்கு வராட்டி காசு தாற வழிய என்னெண்டு யோசிச்சுப்போட்டு சொல்லு நான் போட்டு வாறன்.

பொய்கையின் உறுமலைக்கேட்டு பேதலித்து நின்ற தன் தாயை வேதனையோடு நோக்கிய வேந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா... அம்மா... என்று தளதளத்த குரலில் அழைத்தான்.

நீ நல்லாப் படிச்சு நல்ல பிள்ளையா வரோணும் எண்டு தான் நான் வேலைக்குப்போறன். என்னாலயும் தொடர்ந்து வேலைக்குப் போக முடியல. அப்பா இருந்திருந்தா ஏதோ சமாளிச்சிருக்கலாம். சரி நாங்களெண்டாலும் இந்த நிலையில இருக்கிறம். எத்தன பேர் ஒருநேரச் சாப்பாட்டுக்கே வழியில்லாம தெருவில பிச்சையெடுக்குதுகள். அவையளுக்கு யார் சாப்பாடு போடுறது. அதுகளெல்லாம் உப்பு புளி பாத்தா சாப்பிடுதுகள். நான் எடுக்கிறதும் ஒரு வித பிச்சைதான்.

பேரன்புவின் பதிலைக்கேட்டு அழுது உடைந்தான் வேந்தன். அவசரமாக தான் சாப்பிட்ட கடை முதலாளியிடம் "அண்ண இதிலயிருந்த அம்மா எங்க? அவ எங்க போயிருப்பா...? என்று விசாரித்தான்.

"இல்லத்தம்பி இதில இருக்கிறவதான். மயக்கம் வந்து விழுந்திட்டா போல வைத்தியசாலைக்கு கொண்டு போட்டினம். அவவின்ர பிள்ளையள் ரண்டுபேர் வெளிநாட்டில. தாயை கைவிட்டிட்டினம்.

முதலாளியின் பேச்சைக்கேட்ட வேந்தன் ஓடோடி வந்து தாயின் மடியிலே விழுந்தான். தாய் தலைகோதினாள்...!

அவசரம் ஆளை மட்டுமல்ல
அலுவலையும் கெடுக்கும்.

அரிய சாதனைகள் அனைத்தும் வலிமையினால்
செய்யப்பட்டவை அல்ல, விடாமுயற்சியினால் தான்.

---

எந்தப் பிழையை நீ எங்கே கண்டாலும்
அதை உன்னிடம் இருந்தால் திருத்திக் கொள்.

பொறாமை மடமைக்கு ஒப்பானது!
போலித்தனமோ தற்கொலைக்கு ஒப்பானது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய்........

## இலங்கையரின் ஆயுளுக்கு ஓர் எச்சரிக்கை

**செல்வி. பா. பாலாஜினி**
**கலாசார சுற்றுலாத்துறை மாணவி,**
**யாழ் பல்கலைக்கழகம்.**

அணு எனும் சக்தியையும் பிளந்து அண்டசராசரங்கள் அனைத்திலும் ஏதாவது ஓர் சாதனையை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றான் மனிதன். சாதனைப் பெண்களினை தொடர்ந்துவரும் சாவாலினைப் போலவே அவனின் ஒவ்வொரு சாதனைகளுக்குப் பின்னும்கூட அவன் விட்டுச் சென்ற தவறுகள் அவனை துரத்திக் கொண்டே இருக்கின்றன. அவற்றினையும் தாண்டி மனிதனுடைய அறிவியல் ஆய்வுகளில் பெரும்பாலானவை இறப்பின்றி வாழ்கின்ற யுத்தியைக் கண்டுபிடிப்பதற்கு முயன்று கொண்டிருக்கின்றன. மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இறப்பு என்பது என்றோ ஒருநாள் எழுதப்பட்டு இருக்கின்றது என்ற எழுதா விதியை மாற்றுவதற்கு நாம் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

ஆனால் நம்மை மீறியும் தன்னை உயர்வாக்கிக் கொண்டிருக்கின்ற நமக்கு மேலதிகமான ஓர் சக்தி உண்டென்பதை நாம் மறந்துவிட்டிருக்கின்றோம். அதன் விளைவுதான் அற்ப ஆயுளிலே மனித வாழ்வு நோய்களினால் முடித்துவைக்கப்படுகின்றது. என்னைப் பொறுத்தவரைக்கும் மனிதனை அற்ப ஆயுளிலே கொல்லும் நோய்களில் முதலிடம் HIV (எயிட்ஸ்) நோய்க்கும், இரண்டாவது இடம் புற்றுநோய்க்கும் கொடுக்கப்பட்டு இருக்கின்றது. புற்றுநோய் தொடர்பில் என்னை எழுதத் தூண்டிய காரணிகள் பல. அண்மைக்காலமாக நாம் வாழ்கின்ற சூழலில் ஏற்பட்டு வருகின்ற புற்றுநோய் தொற்றாளரின் மரணங்கள், அவை தொடர்பில் நாம் கேள்விப்படும் அச்ச உணர்வை ஏற்படுத்தும் செய்திகள் போன்றன புற்றுநோய் தொடர்பில் ஓர் விரிவான ஆய்வினை மேற்கொள்ள என்னைத் தூண்டியது. அதன் விளைவே இலங்கையிலும், நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகத்தின் மத்தியிலும் புற்றுநோய் தொடர்பில் ஓர் சரியான விழிப்புணர்வு ஆக்கம் ஒன்றை எழுதவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு என்னை ஆளாக்கி இருக்கின்றது. புற்றுநோய் தொடர்பில் எவ்வாறான விழிப்புணர்வுகளை நாம் பின்பற்ற வேண்டும் என்று குறிப்பிடுவதற்கு முன்னால் புற்றுநோய் என்றால் என்ன? இலங்கையில் அது எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது? என்பதனை முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

நமது உடலைப் பொறுத்தவரைக்கும் அதில் பலவகையான கலங்கள் (Cells) உள்ளன. அவை ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின் செயலிழந்து இறந்துவிடும் தன்மை கொண்டவை. இது தான் மனித உடலின் படைப்பியல்பு. இருப்பினும் விதிவிலக்காக சில செயலிழந்த கலங்கள் இறந்து விடாமல் (immortal Cells) பெருக்கமடையத் தொடங்குகின்றன. அவ்வகையான கலங்களே உடலில் புற்றுநோய் உருவாக வழிசெய்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகவாழ் மக்களின் இறப்புக்கான காரணங்களில் இரண்டாவது இடத்தில் இப்புற்றுநோய் தொடர்பில் மக்கள் அச்சமடைந்து காணப்படுகின்றனர். இலங்கையைப் பொறுத்தவரைக்கும் ஆண்டுதோறும் புற்றுநோய் தாக்கத்திற்கு உட்படுகின்ற 17000 பேர் இனங்காணப்பட்டு வருகின்றனர். ஆரம்பகாலங்களில் இப்புற்று நோயானது வெறுமனே பணக்கார அல்லது வசதி படைத்தவர்களை மட்டுமே தாக்குகின்ற ஓர் நோய் என்ற கருத்து மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்பட்டது. ஆனால் இன்று அனைத்து நிலையில் உள்ளவர்களையும் தாக்குகின்ற ஓர் நோயாக இது மாறியிருக்கின்றது. இலங்கையில் 800 புற்றுநோய் விழிப்புணர்வு மையங்கள் (cancer Awarness Centers) காணப்படுகின்றன. இருந்தும் ஒவ்வோர் காலப்பகுதியிலும் புற்றுநோய் தொற்றுக்கு உட்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

புற்றுநோய் ஓர் இறப்பை ஏற்படுத்துகின்ற நோயாகும். அவ்வகையில் இது உயிராபத்தை ஏற்படுத்துகின்ற ஓர் நோயாக இனங்காணப்பட்டுள்ளது. புற்றுநோயில் பல வகைகள் உள்ளன. அவை மனித உடலில் தொற்று ஏற்படும் இடங்களையும், அவை இறப்பை ஏற்படுத்தும் வீதத்தையும் கொண்டு பெயரிடப்பட்டுள்ளன. உதாரணமாக,

தோல் புற்றுநோய்
இரத்தப் புற்றுநோய்
வயிற்றுப் புற்றுநோய்
மார்பக புற்றுநோய்
சுவாசப் புற்றுநோய்
வாய்ப் புற்றுநோய்

என கூறிக் கொண்டே போகலாம்.

இவ்வகையான புற்றுநோய்களில் மிக அதிகமாக இலங்கை மக்களினை தாக்கும் புற்று நோயாக மார்பகப் புற்றுநோயும், வாய்ப் புற்றுநோயும் இனங்காணப்பட்டுள்ளன.

மட்டக்களப்பைச் சேர்ந்த சத்திர சிகிச்சை வைத்திய நிபுணரான அனுஷென் மதுஷங்க அவர்களின் கருத்துப்படி இலங்கையில் ஒரு வருடத்துக்கு 2500 புதிய வாய்ப்புற்று நோயாளர்கள் கண்டுபிடிக்கப்படுவதாகவும் இவர்களுக்காக வேண்டி இலங்கை அரசாங்கம் 2 இலட்சத்து 50ஆயிரம் மில்லியன் ரூபாவினை செலவு செய்வதாகவும் தெரிய வருகின்றது. மேலும் இவ் வாய்ப் புற்றுநோயில் 25% ஆனவை வெளியேயும் 75% மானவை உள்ளேயும் காணப்படுகின்றன. உள் பகுதியில் நோய்த்தொற்று ஏற்பட்டவர்கள் மிக இலகுவில் அதனை அடையாளம் கண்டுகொள்ள மாட்டார்கள். அவ்வாறானவர்கள் வேறு வைத்திய சிகிச்சையை பெற்றுக்கொள்ள வரும் போதுதான் வைத்தியர்கள் மூலம் தெரிந்து கொள்கின்றார்கள்.

இவ்வாறானவர்களில் அனைவரையும் முற்றுமுழுதாக குணமாக்க முடியாவிட்டாலும் கூட இலங்கையில் உள்ள சிகிச்சை முறைகளின்படி ஓரளவேனும் குணமாக்கப்பட்டு மற்றையவர்களைப் போல சாதாரணமான ஓர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையினை வாழ்வதற்கு வழி தேடிக் கொள்ள முடியும். ஆய்வுகளின் அடிப்படையில் வருடந்தோறும் கண்டுபிடிக்கப்படுகின்ற 2500 வாய்ப் புற்று நோயாளர்களில் 1000 பேரையாவது இதிலிருந்து பாதுகாக்க முடியும் என்பது தெரியவருகின்றது.

வாய்ப் புற்றுநோய்க்கான அறிகுறிகள் எவ்வாறு இருக்கும்?

வாயில் கொப்பளங்கள் ஏற்படக்கூடும். அவ்வாறான கொப்புளங்கள் குறைந்து விடாமல் குறைந்தது 10 நாட்களுக்கு மேலாக இருக்குமானால் அது ஓர் அறிகுறியாக கருதப்படும். மேலும் வாயிலிருந்து இரத்தக்கசிவு ஏற்பட்டாலோ, வெள்ளை அல்லது சிவப்பு நிறப்புள்ளிகள் வாயின் உட்புறத்தில் காணப்பட்டாலோ அல்லது நாக்கின் அடிப்பகுதியில் சிறுகட்டிகளும், வாயின் மேற்புறத்தில் சிறுகட்டிகளும், வாயின் மேற்புறத்தில் சிறுபுண்களுடனான வீக்கமும் காணப்பட்டாலோ அவை புற்றுநோயின் அறிகுறிகளாகக் காணப்படும். இவ்வாறான அறிகுறி உள்ளவர்கள் உடனடியாக வைத்தியரை சந்தித்து ஆலோசனை பெறுவதே மிகச் சிறந்தது.

**வாய்ப்புற்று நோயை எவ்வாறான பழக்கவழக்கங்கள் ஏற்படுத்துகின்றன?**

இன்றைய காலத்தில் வயது, பாலின வேறுபாடுகள் எதுவுமே இன்றி அனைவரும் புகையிலைப் பொருட்களான சிகரெட், பீடி, பான்பராக், புகையிலை போன்ற பாவனைக்கு ஆளாகின்றனர். இது வாய்ப் புற்றுநோய் ஏற்படுவதற்கு பிரதான காரணமாக இருக்கின்றது. ஆனால் இதை மட்டுமே வாய்ப்புற்று நோய்க்கான காரணமாக கூறிவிட முடியாது. சுற்றுப்புறச் சூழலும் கூட இதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. நாம் வாழ்கின்ற காற்று, நீர், மண் போன்றவற்றில் இவ்வாறான புற்றுநோயை ஏற்படுத்துகின்ற வேதிப்பொருட்கள் இருக்கலாம். அவற்றைப் பயன்படுத்தும் போது எமக்கு புற்றுநோய் தொற்ற வாய்ப்பு ஏற்படுகின்றது.

வாய்ப் புற்றுநோய்க்கு அடுத்தபடியாக இலங்கை மக்களை அதிகம் தொற்றும் புற்றுநோய் வகையாக மார்பகப் புற்றுநோய் காணப்படுகின்றது. இது பெண்களுக்கு வரும் புற்றுநோயாக காணப்படுகின்றது. இம்மார்பகப் புற்றுநோய் (Breast Cancer) ஆனது பெரும்பாலும் பால் சுரப்பி நாளங்களின் அல்லது அந்த குழாய்களுக்கு பாலைக் கொண்டு சேர்க்கும் நுண்ணறைகளில் உள் அடுக்குகளில் தோன்றுகின்றது.

இன்றைய காலத்தில் மார்பகப் புற்றுநோய் தொற்றுக்கு ஆளாகியவர்களின் வாழ்நாட் காலத்தைக் கணிப்பிட கணினி மாதிரிகள் உள்ளன. இலங்கையில் அது இல்லை. இலங்கையைப் பொறுத்தவரைக்கும் வருடம் ஒன்றுக்கு புதிதாக 3000 தொடக்கம் 3500 வரையான மார்பகப் புற்றுநோயாளர்கள் பதிவாகி வருகின்றனர் என சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்படுகின்றது. இதே வேளை கடந்த 25 வருடங்களில் மார்பகப் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அது அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பகப் புற்றுநோயின் அறிகுறிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்.

1. மார்பகத்தில் நோ / வலி அற்ற கட்டிகள் தோன்றுதல்
2. மார்பகத்தின் பருமன் அதிகரித்தல்
3. முலைக்காம்பில் இருந்து திரவம் / இரத்தம் கசிதல்
4. மார்பகத் தோலில் சுருக்கம் காணப்படல்
5. கமக்கட்டுப் பகுதியில் நெறிகள் போடப்படல்

மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் உடையவர்கள் உடனடியாக மருத்துவரை அணுகி உரிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளல் அவசியமாகும்.

மார்பகப் புற்றுநோய் தொடர்பில் வீட்டில் இருந்தவாறே ஒவ்வொருவரும் தம்மைப் பரிசோதித்து மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் தென்படுகின்றனவா எனக் கண்டறிய முடியும். கண்ணாடியின் முன் நின்றவாறு கைகளை நீட்டி தொங்கவிட்டவாறும், பின் மேலே உயர்த்தியும் சுய மார்புப் பரிசோதனையை மேற்கொள்ள முடியும். இலங்கையில் மார்பகப் புற்றுநோயானது 99% பெண்களையே தாக்குகின்றது.

இவற்றினைக் கொண்டு நோக்கும் போது புற்றுநோயிலிருந்து நம்மை நாமே பாதுகாப்பதுடன் மட்டுமல்லாது புற்றுநோய் அற்ற ஓர் எதிர்கால சமுதாயத்தையும் உருவாக்க வேண்டிய நிலைப்பாட்டில் நாம் உள்ளோம் என்பதனையும் அறிய முடிகின்றது.

இலங்கையில் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வின்மையின் காரணமாகவே அதிகமான மக்கள் வருடந்தோறும் புற்றுநோய்த் தொற்றுக்கு ஆளாகி வருகின்றனர். இதற்குக் காரணமாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்.

- தவறான உணவுப் பழக்கவழக்கங்கள்
- ஆரோக்கியமற்ற சூழலில் வாழுதல்

என்பனவாகும்.

## புற்றுநோய் தொற்றிய ஒருவரை பேணுவது எவ்வாறு?

நிச்சயமாக புற்றுநோய் தொற்றிய ஒருவருக்கு மரண பயம், மனஅழுத்தம், எதிர்காலம் குறித்த கவலை என்பன ஏற்படும். எனவே அவற்றில் இருந்து விடுபட அவரை தியானம், இறைவழிபாடு முதலியவற்றில் ஈடுபடுத்த வேண்டும். இதற்கு யோகா பயிற்சியானது உறுதுணையாக இருக்கின்றது.

எனவே நம் சமுதாயத்தில் உள்ளவர்களுக்கும் இது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தி புற்றுநோய் அற்ற இலங்கையை உருவாக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது

**மு.கீர்த்திகா**
**தரம் – 11**
**கிளி/ மாசார் அ.த.க. பாடசாலை.**

"நூல் பல கல்" என்றார் ஔவையார். எவ்வளவு நூல்களை நாம் வாசிக்கின்றோமோ அவ்வளவுக்கு நமது அறிவு பெருகும். கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்பது நம் ஆன்றோர் வாக்கு. ரஸ்கின் என்னும் ஆங்கில அறிஞர் "புத்தகங்களைப் போன்ற சிறந்த கருவூலம் எதுவும் மனிதனுக்கு இருக்க முடியாது" எனக் கூறுகிறார். வேறு செல்வங்களைக் கள்வர்கள் களவாடிச் சென்று விடலாம். ஆனால் புத்தகங்கள் பொதுவாகக் களவாடப்படுவதில்லை. புத்தகங்களை வாசிப்பதால் ஒருவன் பெற்ற இன்பங்களை மற்றவர்கள் தட்டிப் பறித்துவிட முடியாது. வாசிக்கும் பழக்கம் இல்லாதவனின் வாழ்க்கை இருண்டதாகவே இருக்கும்.

இன்று மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றது. தொலைக்காட்சி பார்ப்பதில் அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். சில மாணவர்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் கிரிக்கட் போட்டிகளையும் திரைப்படங்களையும் பார்ப்பதற்காகப் பாடசாலைக்கே செல்லாது நின்று விடுகின்றனர். இதனால் அவர்களது கல்வித் தரமே குன்றுகின்றது. மாணவர்கள் தமது பொழுதுபோக்காகத் தொலைக்காட்சியையே அதிகம் நம்பியுள்ளனர். அதேவேளை நல்ல நூல்கள் சிறந்த நண்பர்கள் என்பதை அறிய மறுக்கின்றனர். மிக அருமையாகவே ஒரு சில நூல்களை வாசிக்கின்றனர். வாசிப்புக்குச் செலவிடும் நேரம் மிகக் குறைவாகவே உள்ளது.

வாசிப்பின் மூலம் அறிவு விருத்தியடைகின்றது. மேலதிக அறிவைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. புதிய தகவல்களைத் தெரிந்து கொள்ளவும் கிரகித்துக் கொள்ளவும் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் முடிகின்றது. வாழ்வு வளம்பெற அறிவு தேவை. அறிவைப் பெருக்க நூல்களை வாசித்தல் அவசியமாகும். நூல்களை வாசிக்கும் போது நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்கவேண்டும்.

வாசித்தல் சிறந்த ஒரு பொழுதுபோக்கு; மகிழ்வைத் தந்து அறிவைப் பெருக்க உதவுவன நூல்களேயாகும். மாணவர் இதனை மனதிற் கொள்ளுவது அவசியமாகும்.

"கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்"

என்கின்றார் வள்ளுவர். ஊனக் கண்ணினும் ஞானக் கண்ணே அதாவது அறிவுக் கண்ணே சிறந்தது என்பதை இக்குறள் நன்கு புலப்படுத்துகிறது. கல்விப் பெருஞ்செல்வத்தை வழங்குவன நூல்களேயாகும். அவற்றை வாசிப்பது நம் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கள் வாசிக்கும் பழக்கம் உடையவர்கள் தனிமை உணர்வை ஒரு போதும் பெறுவதில்லை. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் நூல்களை அவர்கள் நாடிச் சென்று விட முடியும். வாழ்வில் சலிப்போ சோர்வோ ஏற்படுகின்ற போதெல்லாம் விரும்பிய நூல்களைப் படிப்பதன் மூலம் அவற்றைப் போக்கிக் கொள்ள முடியும். "என்னை எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே" எனக் கூறினான் ஆங்கிலக் கவிஞன். புத்தகங்களைப் போன்ற நண்பர்கள் கிடைப்பது அரிது. எமது நண்பர்கள் மனமாற்றமடைந்து நம்மை விட்டுப் பிரிந்துவிடலாம். ஆனால் புத்தகங்கள் என்றுமே நம்மோடு கலந்துஉரையாடக் காத்திருப்பவை. நம்மை அவை கோபித்துக்கொள்வதோ, வெறுப்பதோ இல்லை நமக்கு இன்பம் தர எப்போதும் தயாராகக் காத்திருக்கின்றன.

நமக்கு அறிவு புகட்டும் ஆசானாகப் புத்தகங்கள் இருக்கின்றன. அவற்றை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு முக்கியமான கடமையாக இதனைக் கொள்ளுதல் வேண்டும். "வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது" என்றார் கவிஞர் பேக்கன். அவரது கூற்றுக்கமைய நாம் ஓய்வு நேரத்தை புத்தகங்கள் வாசிப்பதில் செலவிட வேண்டும்.

நாம் இளமைமுதல் நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் நாளடைவில் அறிவும் பண்பும் ஆற்றலும் மிக்கோராக வாழ்வதற்கு அது வழி காட்டும். வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறியினை நாம் அறிந்திட முடியும்.

நூல்களில் பலவகை உண்டு. வாழ்க்கை வரலாறு, தத்துவம், சமயம், அரசியல், அறிவியல் சார்ந்த நூல்கள் என பலவுள. புனைகதை இலக்கியங்கள் பலவுள. நமது விருப்பத்துக்கு ஏற்றபடி நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படித்திட வேண்டும். வெறும் பொழுதுபோக்குக்குரிய நூல்களை மட்டும் வாசிக்காது வாழ்க்கைக்குப் பயன்தரும் நூல்களைக் கற்றிட முற்பட வேண்டும்.

அன்னப் பறவையானது நீரை விலக்கிப் பாலை மட்டும் பருகுதல் போன்று மாணவர்கள் தேவையற்ற நூல்களை விலக்கிவிட்டுத் தேவையான, பொருத்தமான, பயன் தரும் நூல்களைக் கற்றிட முன்வர வேண்டும்.

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

என்றார் வள்ளுவர்

நூல்களை வாசிக்க வாசிக்கப் பற்பல அனுபவங்களைப் பெற்றிட முடியும். வாழ்க்கை முழுதும் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய வழியை நூல்கள் காட்டுகின்றன. அவற்றைப் படித்து அதன் வழி ஒழுக நாம் பழகிக்கொள்ள வேண்டும். நூல்களை வாசிப்பதன் மூலமே நாம் பூரண மனிதராக, மனிதத் தன்மை உடையோராக, மாண்புடன் வாழ முடியும் என்பதை உளத்திற் பதித்துக் கொள்ளுதல் வேண்டும்.

**நூல் பல கற்போம்! நுண்ணறிவு பெறுவோம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பின் மகத்துவம்

ச.லோஜனா
முல்லையடி,
பளை.

இத்துணை பெருந்தகை மத்தியிலும்
கவி எனும் சிந்துபாட காத்திரமாய்
அறிவூட்டிய என் ஆசான் - வாசிப்பே

மனதிடம் கொண்டு வந்தோர் மத்தியில்
சித்திரமாய் சில வார்த்தைகள் சிதறவிட
சிறப்பாய் இருக்குமென்றெண்ணி வந்துள்ளேன்
வாசிப்பே வாசகமாய் கொண்டு

வீட்டின் வெளிச்சம் சாரளத்தினூடே
மானிட அறிவிற்கு வெளிச்சம்
நூல்கள் வாசிப்பதனூடே........

சாதனைத் தலைவர்களின்
மாபெரும் வெற்றியின்
மந்திரச் சாவியது - வாசிப்பே

படிப்பால் மட்டுமே பாரதத்தை
ஆண்டுவிட முடியுமென
படித்துப் படித்து கூறினார்
அறிஞர் அப்துல்கலாம்

படிப்பின் பக்குவம் புரிந்து
நஞ்சு வழங்கி உயிரை
மாய்க்க வைக்கும் - இறுதிப்பொழுது வரை
இயல்பாய் படித்துக் கொண்டிருந்தார் - சோக்ரட்டீஸ்

தூக்குமேடை அழைத்துச் செல்லும் வரை
துக்கம் ஏதுமின்றி
துவளாது படித்துக் கொண்டிருந்தார் - புத்தகம்
பகத்சிங் அவர்கள்

படுக்கின்ற இடம் கூட
படிப்பகத்திற்கு அருகில் கேட்டார்
அம்பேத்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துணைக்கும் ஓர் சான்று
நீரளவே ஆகுமாம் நீராம்பல்
தான் கற்ற நூலளவே
ஆகுமாம் நுண்ணறிவு
என்ற கொள்கையெனில்
அதில் மிகையேதும் இல்லை

அடிமைகள் சூரியனாம்
ஆபிரகாம் லிங்கனுமே
அமெரிக்க குடியரசு
தலைவனென்று - ஆக்கி
உயர்த்தியதும் புத்தகமே

வாசிக்காமல் யார்க்கும்
வளர்ந்ததில்லை அறிவு
இதனை நேசிக்காமல் போனால்
வளர்ச்சிக்கே முறிவு

கண்கள் திறந்து வைத்து
கனவு காணும் ஓர் கலையாம் வாசிப்பு
அதனை நன்கறிந்தவர்
தோற்பதில்லை ஒரு நாளும்

கல்வியெனும் கடலில் முத்தெடுத்து
கலங்கரையாய் விளங்கும்
கற்றறிவாளர்களின் வெற்றியது

மாணவப் பருவ பாடப்புத்தக
வாசிப்பு, தேடல், வினாத்தொகுப்பு
விடையதுவோ பரிசளிப்பது
சிறப்புத் தேர்ச்சி

கண்டதும் கற்றவர்
பண்டிதர் ஆவார்

பொது அறிவு பெற்றிடவே
எப்பொழுதும் நீ வாசி
அறிவுள்ள புத்தகங்கள்
அனைத்தையும் நேசி

வாழும் வாழ்க்கை பலவாய்
அர்த்தம் உணர்த்தும்
கண்டம் விட்டு கண்டம்
பறக்கும் - பறவையாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றவர் உலகெங்கும்
சிறகடிக்கும்
சிறப்பான பாங்கை நீ காணலாம்
இவ் அவனியிலே

துடிப்பில்லையானால் இதயம் கூட
துருப்பிடிக்கும்
வெளிச்சம் இல்லையானால்
விளக்கு கூட சுமையாகும்

மூளைக்கு பயிற்சி இல்லையானால்
முடங்கிவிடும் - அறிவு
பயிற்சி கொடு மூளைக்கு
வாசிப்பை வேதமாக்கு

அறிவு வானில் சிறகடித்து
அக்கினி சிறகாய்
அகலக் கால்விரிக்க
ஆசையாய் அணைத்திடு வாசிப்பை
வளர்த்திடு ஆளுமையை

ஊருலகம் யாவும்
சுற்றி அறிய காலம் கொள்ளும்
புத்தகங்கள் அனைத்தும் விளக்கும்
கற்றறிய குறுகிய காலம் போதும்

அறிவும் பசியின் விருந்தாய்
கற்றறியும் வழக்கமிருந்தால்
சுடர்விடும் அறிவொளி

வாசிப்பை நாளும் நேசிப்பாய் கொண்டு
நல்ல நூல்கள் அனைத்தும்
வாசிப்போம்

அறிவு என்னும் சுடரை
நம்முள் ஏற்றி
அனைவர் மத்தியிலும்
சுடரொளியாய் பிரகாசிக்க
வழி செய்வோம்
வாசிப்போம்
அறிவு வானை
தொட்டிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விட்டில் பூச்சிகள்

**மு.கீத்தா**
**தரம் – 11**
**கிளி/ மாசார் அ.த.க. பாடசாலை**

வானம் பார்த்த பூமி மட்டுமே பச்சை நிற சேலை கட்டிக் கொள்கிறது. அந்த யாழ்ப்பாணத்துக் கிராமத்து வயல் வெளிகளோடு மணல் திட்டுக்களும் கூட கண்களுக்கு பசுமை விருந்து படைத்துக் கொண்டிருந்தன. வாய்க்கால் கரையோரம் ஓங்கி வளர்ந்திருக்கும் கிழட்டு அரச மரத்தடியில் சிறியதாக ஒரு பிள்ளையார் கோயில் இருக்கிறது. வயலுக்கு வந்து போகிறவர்களும் வழிப்போக்கர்களும் பிள்ளையாரை வயிறு குளிர வைத்திருக்கின்றார்கள்.

அந்த கிழட்டு அரசமரத்தடியில் வயிற்றில் எரிகிற நெருப்பின் வெம்மையில் உடல் சோர்ந்து இராகவன் சுருண்டு படுத்துக் கிடக்கிறான். கனவும் இல்லாமல் நனவும் இல்லாமல் இரண்டும் கெட்டதாக அவனுடைய மனதில் எண்ண ஓட்டங்கள் ஓடிப்பிடித்து விளையாடிக்கொண்டிருந்தன. இந்த விளையாட்டிலேயே அவனது புத்தியும் லயித்துப் போயிருந்தது. அதனால் அவன் தன்னைச் சுற்றி இருப்பவற்றைப் பற்றி எந்தப் பிரக்ஞையும் கொள்ளுவதில்லை.

இறைவனிடம் லயித்துப் போன சித்தர்கள் இப்படித்தான் இருந்திருக்கின்றனர். அவர்கள் வாழ்ந்த காலத்தில் இந்த உலகம் அவர்களைப் பித்தர்கள் என்றே கூறியிருக்கின்றது. இராகவனும் இப்போது பித்துப் பிடித்தவன் என்ற பட்டத்தை சுமந்து கொண்டு திரிகிறான். அவன் யார்? எங்கிருந்து வந்தான்,? ஏன் இப்படித் திரிகின்றான்?.... இப்படியான சோக்கிரட்டீஸ் கேள்விகளுக்கு விடைகளை தோண்டி எடுப்பதற்கு குழாய்க்கிணறு அடிக்கின்ற இயந்திரம் வேண்டி இருக்கும். நிலத்தடி நீரும் மிக ஆழத்திற்கு போய்விட்டது என்கிறார்கள். இராகவனின் சூட்சுமங்களும் அதற்குக் கீழ் அப்படியே அதள பாதாளத்திற்கு போய்க்கொண்டிருந்தது.

பாதாளத்திற்கு போகிற அந்த விசயத்தை இராகவனின் மனதில் இருந்து பார்த்து விடுவது சுலபமானது. சுருண்டு கிடந்த இராகவன் ஏதேதோ பிதற்றுகிறான். கைகளை உதறுகிறான் கண்களில் இருந்து கண்ணீர் பொலு பொலுவெனக் கொட்டுகிறது.

இராகவனின் இந்தக் கதையை இந்த இடத்திலிருந்து தொடங்கினால் நிதர்சனத்தை துல்லியமாக தரிசிக்கலாம். மார்கழி மாதத்து பனிபடர்ந்த அந்தக் காலை வேளையில் ஆழிப் பேரலைகள் முல்லைத்தீவுக் கடலில் இருந்து ஆகாயத்தை அளாவி எழுந்து வந்தன. கடல் அலைகளை கட்டளை இட்டு நிறுத்திய யேசுபாலன் அன்றிரவுதான் பிறந்தான். அதனால் அவனும் கட்டளை இடுவதற்கு வார்த்தைகளை கற்றுக்கொள்ளவில்லைப் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்து வந்த இராட்சத அலைகளின் இரும்புக் கரங்களில் இராகவனின் மனைவியும், ஒரு மாதம் கூட நிரம்பாத அவனுடைய மகனும் அகப்பட்டு விட்டார்கள். வங்கக் கடலுக்கு உண்டான அசுரப் பசிக்கு அவனுடைய வாழ்க்கையே பறிபோய் விட்டது. இராகவனுக்கு இப்படி ஒரு வாழ்க்கை கிடைக்குமென்று அவன் கனவிலும் நினைத்தானில்லை. பிறக்கும்போதே ஒற்றைக்கால் ஊனத்துடன் பிறந்தான். இடது கால் சூம்பலாகவும், குட்டையாகவும் இருக்கும். இரண்டு கண்களும் சிறு வயதில் குறைபார்வையுடையதாகவே இருந்தன. நாளடைவில் பார்க்கும் சக்தியை அவன் இழந்து விட்டான். கண்பார்வை இல்லாமல் ஊனமுற்ற கால்களோடு அவன் தட்டுத்தடுமாறி கைத்தடியோடு நடமாடித் திரிவதை அவனைப் பெற்றவரும் மற்றவரும் வேடிக்கை பார்த்தனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள அந்த மீன்பிடிக் கிராமம் இராணுவத்தின் பிடிக்குள் வந்தபோது மக்கள் இடம்பெயர்ந்தார்கள். இராகவனின் அப்பா நேரத்தோடு பரலோகம் போய்விட்டார். இரண்டு அண்ணன்மாரும் ஒரு அக்காவும் தங்களிற்கு வாய்த்த குடும்பங்களோடு விலத்திவிட்டார்கள். அவ்வப்போது அம்மாவிற்கு கைச்செலவிற்கு கொடுத்துவிட்டுப் போவார்கள். இப்போது அம்மாவும் இராகவனும் ஊரிலிருந்து புறப்பட்டு விட்டார்கள். முல்லைத்தீவுப் பக்கம் வந்த சில ஆட்களோடு சேர்ந்துகொண்டார்கள்.

முல்லைத்தீவுக்கு வந்தாயிற்று, கடற்கரைக் கிராமமொன்றில் கட்டிக்கொடுத்த குடிசை ஒன்றில் இடம் கிடைத்தது. நிவாரணம் இரண்டு வயிறுகளைக் கழுவிக் கொள்ளப் போதுமானதாக இல்லை. அம்மாவும் மகனும் மீன் வியாபாரம் செய்வதற்கு முடிவு செய்தார்கள். ஒரு பழைய சைக்கிளை நல்ல மனம் கொண்ட ஒரு சம்மாட்டி கொடுத்து உதவினார். தள்ளிக்கொண்டு போகும்போது பெல் தேவையில்லாத சைக்கிள். அவரே மீனும் கடனுக்குக் கொடுத்துதவினார். அருகிலுள்ள சந்தைக்கு மீன் பெட்டியை சைக்கிளில் வைத்து தள்ளிக்கொண்டு போக இராகவன் பழகிவிட்டான். சந்தையில் அம்மாவின் உதவியோடு வியாபாரம் நடந்தது. இப்போது குடும்ப நிலைமை ஆமைவேகத்தில் முன்னுக்கு நகர்ந்து கொண்டு வந்தது.

இப்போது குடும்ப வண்டி மீண்டும் ஒருமுறை முடக்கில் திரும்பியது. அது ஒரு திருப்பு முனை. சந்தையில் ஒரு இளம் விதவையும் வியாபாரம் செய்து பிழைப்பதற்கு வந்தாள். அம்மாவோடு நட்பு ஆரம்பித்தது. இராகவனோடு காதலாக மலர்ந்தது. ஒரு பெண் காதலிக்கும் அளவிற்கு தன்னிடமும் ஒரு பேர்சனாலிற்றி இருக்கிறதென்று மிகவும் கஸ்ரப்பட்டு நம்பினான். தேவிகா என்ற அந்தப் பெண் இராகவனின் வாழ்க்கையில் விளக்கேற்ற வந்த தேவதையானாள். எண்ணை தீர்ந்து போன அவளுடைய வாழ்க்கையில் விளக்கிற்கு எண்ணை ஊற்றி எரியச்செய்ய ஆசைப்பட்டான்.

இருவர் மனங்களிலும் அப்பிக்கிடந்த துன்ப தூசிப்படை காதல் மழையில் கழுவுண்டு போனது. இவர்களின் திருமணத்தை கண்களை அகல விரித்தபடி பலர் பார்த்தார்கள். தேவிகா ஏதோ பிசகிவிட்டாள் என்றனர். இராகவனுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரத்தை ஆரம்பித்து வைத்த சம்மட்டியாரே அவனுடைய வாழ்க்கையின் ஆரம்பத்தையும் நடாத்தி வைத்தார்.

இராகவனின் கண்களில் புதிய ஒளிபிறந்தது. அவனுடைய சூம்பல் கால்கள் சுருக்கங்களை நேர்செய்து கொண்டு நிமிர்ந்தது. எல்லோரிற்கும் கிள்ளுக் கீரையாய் இருக்கும் தனது பிள்ளைகளை வைத்துக் காப்பாற்ற ஒருத்தி வந்துவிட்ட மகிழ்ச்சியோடு இராகவனின் அம்மா சில நாட்களில் பிறவிப் பெருங்கடலைக் கடந்தாள்.

இன்பமும் துன்பமும் மாறிமாறி உருள்வதுதானே வாழ்க்கைப்பாதை. அந்தப் பாதையில் இராகவன் துன்பத்தோடு நீண்டதூரம் பிரயாணம் செய்து விட்டான். இனி சிவந்த அடி வானம் வெளுக்க ஆரம்பித்து விட்டது. வெளிச்சம் எப்போதும் மகிழ்ச்சியின் அடையாளம் அன்றோ. தேவிகா அவனது வாழ்க்கையின் விடிவெள்ளி, அவளே உதயசூரியன், அவளே இளைய நிலா.

அவர்களது இல்லறத்தின் இனிமை தேவிகாவின் வயிற்றில் கருவாக மலர்ந்தது. மலர் பிஞ்சாகிக் காயாகி முற்றிக் கனித்து குழந்தையாக மண்ணில் வந்தது. மண்ணுலகில் ஊனப்பிறவியான தந்தையை குடும்பத்தலைவனாக தலைநிமிர வைத்தது.

வாழ்வு நிலைக்குமென்று மனிதன் நினைக்கிறான், பாவம் மனிதனென்று இறைவன் பரிகசிக்கின்றான். இறைவனின் பரிகாசம் ஆழிப்பேரலையாக எழுந்து வந்தது. சமுத்திரம் தேவிகாவையும் அவள் பெற்றெடுத்த ஆண் குழந்தையையும் தன்வயிற்றுக்குள் விழுங்கிக் கொண்டது. இன்னும் இராகவன் அழுவதற்கு இறைவன் இடம் கொடுத்திருக்கின்றான். ஆனால் இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் அவன் பித்துப் பிடித்த சித்த பிரம்மையோடு கால்போன போக்கில் புறப்பட்டு விட்டான்.

எங்கெல்லாமோ சுற்றிச் சுழன்று அலைந்து திரிந்தான். கடைசியில் தான் பிறந்த யாழ்ப்பாணக் கிராமத்துக்கு வந்து சேர்ந்து விட்டான். அவனுடைய இளமைப்பருவம் இந்த வாய்க்கால் கரைப் பிள்ளையாரோடுதான் கழிந்திருக்கின்றது. அரச மரத்தடியில் சுருண்டு கிடந்தவன் இப்போது நீட்டி நிமிர்ந்து மல்லாக்காய் கிடக்கின்றான்.

கோயிலுக்குப் பூசை செய்ய வந்த குருக்கள் அரசமரத்தடியில் கிடந்தவனை சந்தேகத்தோடு பார்த்தார். அருகில் சென்று மூச்சு வருகின்றதா என்று சோதித்தார். அந்த ஊனமுற்ற பிறவியின் உயிர் பரிகாசத்தோடு உரிய உடலை அங்கேயே போட்டுவிட்டு பத்து நிமிடங்களுக்கு முன்னேயே பறந்து போய்விட்டது. குருக்களுக்கு அவனை அடையாளம் காண அதிகநேரம் பிடிக்கவில்லை. பிள்ளையாரின் நெய்வேத்தியத்திற்காக அவன் அரசடியில் காத்திருப்பதை அவர் மறக்கவில்லை. நெய்வேத்தியத்திற்காகக் காத்திருந்தவன் இன்று பிள்ளையாரிற்கு நெய்வேத்தியம் ஆகிவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் மதிப்பறிதல்

ச.சர்மிலா
நிதி உதவியாளர்,
பிரதேச செயலகம்,
பச்சிலைப்பள்ளி.

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து"

என்ற வான்புகழ் வள்ளுவனின் குறள்படி, காலத்தை எதிர்பார்க்க வேண்டிய பருவத்தில் கொக்கைப் போல காத்திருந்து காலம் வாய்த்த போது கொக்கு மீனைக் கொத்துவதைப் போல தவறாமல் செய்ய வேண்டிய செயலைச் செய்து முடிக்க வேண்டும். ஒவ்வொரு செயலும் ஒரு விதையே. குறிப்பிட்ட காலத்தில் அதை விதைத்தால்தான் உரிய கால அவகாசத்தில் அது முளைத்துப் பயனை அளிக்கும்.

செயற்கரிய செயல்களைச் செய்தவர்கள் விதைத்த விதை விருட்சமாகி காலத்தையும் தாண்டி நிற்கிறது. இளைஞர்கள் முதலில் காலத்தின் அருமையை உணர்ந்து பயன்படுத்தப் பழக வேண்டும். எண்ணங்களும், செயல்களும் உயரும்போது காலத்தையும் தாண்டி சாதனை படைக்க முடியும்.

ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் அடிப்படையாக அமைவது காலம் என்ற மூலதனம். உண்மையிலேயே சரியாக ஆராய்ந்து பார்த்தால் அனைவரும் வியப்பளிக்கக் கூடிய விஷயம் ஏழை, பணக்காரர், அறிவாளி, கல்வியறிவு இல்லாதவர் என்று அனைவருக்கும் சமமாக அளிக்கப்பட்ட ஒன்றே காலம் என்று பென்னட் விவரித்தார். அதை யாரும் ஒருவரிடம் இருந்து எடுக்க முடியாது. திருடவும் முடியாது. யாராலும் ஒவ்வொரு நாளும் 24 மணி நேரத்திற்கு மேல் விலைகொடுத்தும் வாங்க முடியாது. காலத்தின் அருமையை உணர்ந்தவர்கள் சாதனையாளர்கள். நம் அனைவருக்கும் கிடைக்கின்ற காலத்தை வீண் பொழுது போக்குகளில் செலவழிப்பவர்கள் வாழ்வில் வெற்றி பெற இயலாது. கார்ல் சான்ட்பாக் "நேரம் என்பது உங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒரே செல்வம். அந்த செல்வத்தை எப்படிச் செலவு செய்ய வேண்டுமென்ற உரிமை உங்களுக்குத் தான் கொடுக்கப்படுகிறது. உங்களுடைய அந்தச் செல்வத்தை மற்றவர்கள் தங்கள் சுயநலத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ள அனுமதித்து ஏமாந்து விடாதீர்கள்" என்கிறார்.

எல்லோருக்கும் ஒரே விதி பொருந்தாது. எல்லோருக்கும் 24 மணி நேரம் தான். கிடைத்த நேரத்தில் உங்கள் திறமையை முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமானால். அதற்கு உங்கள் உள்சூழ்நிலை பதற்றமில்லாமல் அமைதியாக இருக்க வேண்டும். ஒரு வேலையைச் செய்யும் போது கவனமின்றி சிந்தனை அலை பாய்ந்துகொண்டிருந்தால் களைப்பு, அமைதியின்மை, மன அழுத்தம் எல்லாம் வரும். உங்கள் செயல்திறன் கணிசமாகக் குறைந்துவிடும். உங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலும், மனமும், சக்தியும் எந்த அளவு ஒருங்கிணைந்து செயல்படுகின்றன என்பதைப் பொறுத்துத்தான் குறிப்பிட்ட நேரத்தில் உங்களால் எதையும் முழுமையாகச் செய்துமுடிக்க இயலும் என்பது தீர்மானமாகும். ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள். வீட்டு வேலையானாலும் சரி, தொழில் நடத்துவதானாலும் சரி, உடற்பயிற்சி செய்வதானாலும் சரி, நேரம் கடந்து செய்யும் பல வேலைகள் அர்த்தமற்றுப் போய்விடுகின்றன. வேறு எதைத் தொலைத்தாலும் திரும்பப் பெற வாய்ப்பு உண்டு. தொலைந்துபோன விநாடிகளை எப்பேர்ப்பட்டவராலும் மீட்க இயலாது.

ஒவ்வொரு கணத்திலும் கரைந்து கொண்டு இருப்பது நேரமல்ல. உங்கள் வாழ்க்கை. இது தத்துவம் அல்ல வேடிக்கைப் பேச்சும் அல்ல. சத்தியமான உண்மை. நேரத்தின் மதிப்பைப் பற்றித் தெளிவான கவனத்துடன் இருந்தால் வாழ்க்கையைப் பற்றியும் தெளிவாக இருப்பீர்கள். அது கண்ணாடியை விடவும் சுலபமாக நொறுங்கக் கூடியது என்பதை உணர்ந்தால் நேரத்தைக் கவனமாகக் கையாள்வீர்கள். நீங்கள் எவ்வளவு மணிநேரம் செயற்படுகிறீர்கள் என்பது முக்கியமல்ல அதில் நீங்கள் எவ்வளவு நேரம் உங்கள் திறமையை முழுமையாகப் பயன்படுத்திச் செயற்படுகிறீர்கள் என்பது தான் உங்கள் வெற்றியைத் தீர்மானிக்கிறது. உங்கள் வாழ்க்கையில் எதுவும் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதில் நீங்கள் 100% உறுதியாக இருந்தால் அந்தத் தெளிவே அதற்கான நேரத்துக்கு முன்னுரிமை கொடுத்துவிடும்.

நேரம் உண்மையில் பெறுமதிமிக்கது; விலைமதிக்கமுடியாதது. பத்தரை மாற்று பசும் பொன்கூட மனிதனின் ஆயுளில் ஒரு வினாடிக்கு ஈடாகாது. காலம், நேரம் அவ்வளவு பெறுமதிவாய்ந்தவை. உச்ச பயன் அடையும் வகையில் நன்கு திட்டமிடப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டியவை. வீணடிக்கத்தகாதவை. மனித ஆயுள் மிக மிகக் குறைவானது. இக்குறுகிய வாழ்நாளுக்குள்தான் மனிதன் மறுமைக்காக சம்பாதிக்க வேண்டும். சேமிக்க வேண்டும். இவை அனைத்திற்கும் இடையில் இவ்வுலகத் தேவைகளையும் நிறைவேற்றுக் கொள்ள வேண்டும். தான் மட்டுமா? பெற்றோர், மனைவி, மக்கள், உற்றார், உறவினர் என பலரும் உளர். இவர்களையும் தன்னுடன் சேர்த்துக் கவனித்தாக வேண்டும். தனிப்பட்ட வாழ்வில், குடும்ப வாழ்வில், சமூக வாழ்வில், பொருளாதார வாழ்வில், தொழில் வாழ்வில் பலதும் பத்தும்.

எனவேதான் நேரத்தை நாம் சரியாகத் திட்டமிட்டு நம்மை நாம் இயக்க வேண்டியுள்ளது. காலமும் நேரமும் எம்மனிதருக்காகவும் காத்திருப்பதில்லை என்பது ஆங்கில முதுமொழியொன்றின் பொருளாகும். நாம் நேரத்தைப் பயன்படுத்தினோமோ இல்லையோ கழிகின்ற ஒவ்வொரு நொடிப்பொழுதும் நிச்சயமாக திரும்பி வரப் போவதில்லை. அதனை எவ்விலை கொடுத்தும் பிரதியீடு செய்து கொள்ள முடியாது.

காலத்தை சரிவர முகாமைத்துவம் செய்வது தனிமனிதப் பொறுப்பாகும். அந்த வகையில் காலத்தின் தன்மை அறிந்து பெறுமதியான முறையில் அதனை செலவழித்தால் வாழ்வின் உயர்நிலையை அடையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பும் நூலகங்களின் பங்களிப்பும்

வி. கவினயா
தரம் – 05

"நூலகங்கள் அறிவுப்பதிவேடுகளின் சுரங்கம்" எனப்படுகின்றது. அறிவைப் பெற்றுக் கொள்ளவும், வாசிப்பை தூண்டக் கூடியதுமான மிகப் பொருத்தமான இடம் நூலகங்களே.

வாசிப்பு ஒருவனை பூரண மனிதனாக்குகின்றது என்பது அறிஞர்தம் வாக்கு. கல்வியில் உயர்ந்த பேரறிஞர்கள் பலர் தம் வாசிப்புப் பழக்கத்தினாலேயே உயர்வடைந்துள்ளனர். ஒருவனது உளநலம், உடல்நலம், ஆன்மீக நலம் மட்டுமின்றி அறிவைப் பெருக்கவும் வாசிப்புப் பழக்கம் பெரிதும் உதவுகின்றது. இவ்வாறு ஒவ்வொரு மனிதனது வெற்றிப் பாதைக்கும் அத்திவாரமாக விளங்குவது நூலகங்களே ஆகும்.

வாசிப்புப் பழக்கம் பற்றி பல அறிஞர்கள், ஆன்றோர்கள் பல கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு"

என்கிறார் வள்ளுவர். மணற்கேணியைத் தோண்ட நீர் ஊற்றெடுப்பது போல் மனிதர்களும் கற்கக் கற்க அவர்தம் அறிவு பெருகும் என்பதாகும்.

"நூல்கள் பல கல்", "கண்டது கற்க பண்டிதனாவான்" என்ற வாக்குகளுக்கு இணங்க இளமைப் பருவம் இனிமையானது இளமைப் பருவத்தில் வாசிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இளையவர்கள் மட்டுமல்லாது முதியவர்களின் வாசிப்புப் பழக்கமானது மன அமைதியை ஏற்படுத்த வல்லது. எனவே நூல்களை நல்ல நண்பனாக்கி நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்டுத்திக் கொள்ள வேண்டும். ஆயினும் தற்போது வாசிப்புப் பழக்கம் பெரிதும் குன்றி வருகிறது. தொலைக்காட்சி, வானொலி, இணையத்தளங்களினைப் பயன்படுத்தும் வழியிலேயே மக்களின் கவனம் திரும்பியுள்ளது என்பது கவலைக்குரிய விடயமே.

"எங்கு ஒரு நூலகம் கட்டப்படுகிறதோ அங்கு ஒரு சிறைச்சாலை அழிக்கப்படுகின்றது" என்ற கருத்துக்கு இணங்க ஒரு நூலகம் திறக்கப்படுவது ஆயிரம் சிறைச்சாலை மூடப்படுவதற்கு சமனாகும். அறிவு, ஆன்மீகம் மிக்க சமுதாயத்தினை உருவாக்க நூலகங்களே பெரிதும் உதவுகின்றன.

இன்றைய காலத்தில் நூலகங்கள் தனது சேவையை விரிவாக்கி வலைத்தளங்கள், இணையசேவை, சிறுவர் பகுதி, வாசகர் வட்டம், நடமாடும் நூலகசேவை, வாசிப்பு மாத நிகழ்வுகள், இலவச அங்கத்தவர் சேர்ப்பு போன்ற சேவைகளை வழங்கி வருகிறது.

எனவே கடலைப் போன்ற நூலகத்தில் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதனூடாக அறிவுசார்ந்த ஓர் அற்புதமான சமுதாயத்தினை உருவாக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தல் விண்ணப்பத்தில் நெருக்கடிக்குள்ளாகும் மணிவாசகரது நிலை.

**திருமதி.தேவகி மயூரன்**
**ஆசிரியர்**

மணிவாசகர் அடைந்த ஒட்டு மொத்த உள்ளக் குமுறலின் வெளிப்பாடே நீத்தல் விண்ணப்பமாகும். தன்னை ஆட்கொண்டு தேர்ந்தெடுத்து உடமையாகக் கொண்ட ஞானாசிரியரான இறைவன் எங்கே தன் மனிதப் பலவீனங்களை காரணமாக வைத்து கைநெகிழ்ந்து விடுவானோ என்ற அச்சத்திலும் ஏக்கத்திலும் எழுந்ததே நீத்தல் விண்ணப்பமாகும்.

தான் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்வு பற்றிய அச்சமும், அதனால் ஏற்படப்போகும் ஆபத்து பற்றிய பதட்டமும் என்னால், என் செய்கைகளால் இறைவனை நெருங்க முடியவில்லையே என்ற ஏக்கமுமே நீத்தல் விண்ணப்பத்தைப் பாடத் தூண்டின.

உலகியலுக்கும் அதன் கட்டுக்களுக்கும் ஆளாகும் மாணிக்கவாசகர் மனிதப் பலவீனத்தோடு அவற்றினுள் வீழ்ந்து விடுகிறார். ஆபாசங்களும், பெண் இச்சைகளும், சுக போகங்களும் அவரை, அவரது வாழ்வை தடம்புரள வைக்கின்றன. இப்படி உலகியல் ஒரு புறம் அவரை இழுக்க, மறுபுறம் இதன் விளைவுகள் எப்படிப்பட்டவையாக இருக்கும்? எனக்கு வீடுபேறு கிட்டுமா? என்னை இறைவன் கைவிட்டு விட்டானா? என்ற தெளிவான மனதோடு கூடிய இறையியல் மறுபுறமாக அவரை இழுக்க, அந்த நெருக்கடிக்கு உள்ளாகும் அவர் அதிலிருந்து விடுபட்டு வெளியே வர இறைவனை உள்ளமுருகப் பாடுவதைவிட வேறு வழியில்லை என்பதை உணர்ந்து தன்னை மீட்டருளுமாறு பாடுவதை நீத்தல் விண்ணப்பம் தெளிவுபடுத்துகிறது.

நீத்தல் என்பது நீங்குதல், நீந்துதல் என்ற இரு வேறு பொருளைத் தருகின்றன. இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட தான் பாவ நாட்டங்களில் ஈடுபட்டு தான் இறைவனை விட்டு நீங்கிச் சென்றதால் தன்னை விட்டு இறைவன் நீங்கி விட்டார் என ஒரு பொருளிலும், அவ்வாறு நீங்கிவிட்ட இறைவனுக்கும் தனக்குமிடையே உள்ள பெரிய இடைவெளியாகிய பாவக்கடலை நீந்திக் கடந்து இறைவனை அடைய முயற்சிக்கும் மாணிக்கவாசகரது நீந்தல் முயற்சியை "நீந்துதல்" என்ற பொருளும் சுட்டி நிற்கின்றன.

நீத்தல் விண்ணப்பத்தில் பின்பாதியாகிய விண்ணப்பம் என்பது வேண்டுகை, வேண்டுதல், கோரிக்கை போன்ற பொருளைக் குறிக்கின்றன. தன் பிழைகள் அனைத்தையும் பொறுத்து தங்களை ஆட்கொள்ளுமாறு அவர் விடுக்கும் விண்ணப்பத்தையே குறித்து நிற்கின்றது. இவ்வாறு நீத்தல் விண்ணப்பத்திற்கு பொருள் விளக்கம் கூறினாலும் தன் நெருக்கடியிலிருந்து கடந்து செல்ல கடவுளைப் பாடுவதையே ஒரே வழியாகக் கையாள நினைக்கும் மாணிக்கவாசகரது நிலை எடுத்துக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீத்தல் நீந்துதல் இருவகைப்படும்.

1. சிறிய கடல்பரப்பை நீந்திக் கடத்தல்
2. பெருங்கடலை நீந்திக் கடக்க இயலும்.

ஏனெனில் ஆழமும், மறுகரை எல்லையும் சிறிதாக இருப்பதால் தனி மனித ஆற்றலாலும், சக்தியாலும் அது சாத்தியமாகும். ஆனால் பெருங்கடலை தன் கைகளால் நீந்திக் கடக்க முடியாது. காரணம் ஆழமும் எல்லையும் அகல விரித்து விசாலமாக இருப்பதால் தன் சக்தியால் அது சாத்தியப்படாது. ஆகவே கையில் புணை ஒன்றை (மரக்கட்டை) பற்றிப் பிடித்து நீந்திக் கடக்க முனைவதே சாத்தியமாகும். இதில் மாணிக்கவாசகர் கடக்க முனைவது பிறவிப் பெருங்கடலாகிய இரண்டாவது வகையையேயாகும். எனவே தான் தன் நெருக்கடிகளில் இருந்து விடுபட புணையாக இறைவனை கையில் பிடித்துக் கொண்டு கடக்க முயல்கிறார். அதனாலேயே தன் கையில் எதுவுமில்லை என்பதை உணர்ந்து அது சாத்தியமாகாது என்பதை உணர்ந்து இறைவனைப் பாடுவதன் மூலம் தன் துன்பங்களில் இருந்து கடந்து செல்ல முனைகின்றார்.

இவ்வாறு தன் நெருக்கடிகளில் இருந்து கடந்து செல்வதற்கு பல்வேறு உபாயங்களைக் கையாண்டு பாடல்களைப் பாடுகின்றார். தன் செயல்களால் பாவ நாட்டங்களால் தன்னை விட்டு நீங்கிய இறைவனை தன்னருகே கொணர்வதற்கு அல்லது தான் அவரருகே செல்வதற்கு ஏற்ற வழிமுறைகளை கையாண்ட பாடல்களைப் பாடியுள்ளதை அறிய முடிகின்றது. இறைவன் மனதை இளக வைக்கக் கூடிய பல உபாயங்களைக் கையாண்டு பாடல்களை பாடியுள்ளமை மாணிக்கவாசகரது உளவியல் மதியையும் இயலாமை/ கையறு நிலைமையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. இவ்வாறு அவர் கையாண்ட அறிமுறைகளாக பின்வருவனவற்றை நோக்கலாம்.

1. தன்நிலையினை எடுத்துக் கூறல்
2. உவமை அணிகளை அதிகம் கையாள்தல்
3. இறைவனைப் புகழ்ந்துரைத்தல்.
4. வினா எழுப்புதலும் நியாயப்படுத்துதலும்.

இவ்வாறான விடயப் பரப்புக்களை சற்று விரிவாக நோக்கும்போது தன் துன்பங்களில் இருந்து கடந்து செல்ல எவ்வாறு முயல்கிறார் என்பதை தெளிவாக புரிய முடிகின்றது.

## 1. தன்னிலையினை எடுத்துக் கூறல்

துன்பங்கள் நிறைந்த இவ்வுலகில் புரளுகின்றேன், உருளுகின்றேன். கிடந்து உருளுகின்றேன், கரை காண முடியாமல் நீந்துகின்றேன், அழுந்துகின்றேன் என தன் இயலாத நிலைகளை அடுக்கிச் செல்லும் சொற்பிரயோகங்கள் மூலம் தன் மீதான ஒரு பட்சத்தை பெற்றுவிட நினைக்கின்றார். அப்பட்சத்தின் ஊடாக துன்பத்தைக் கடக்க எண்ணுகிறார். கடையேன், நாயேன், இழியேன், மெலியேன் என தன்னை தன் இழிநிலையோடு ஏற்றுக் கொள்வதும் இறை அருளைப் பெறும் முயற்சியாகவே அமைகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆசை ஒரு புறமும் - அதனால் விளையும் அச்சம் மறுபுறமாக என்னை இழுக்கின்ற வேளை நான் என் செய்வேன் என விண்ணப்பித்து மனித நாட்டங்களுக்கு மனிதன் அடிமையாகும் இயல்புதானே என்ற பாணியில் குறை இறைஞ்சும் நுட்பம் கூட இறை அருளைப் பெறுவதற்கான உபாயமே "என் தாய் போன்றவன் நீ, தந்தை போன்றவன் நீ என உறவு முறையைச் சாற்றி பிள்ளையை மன்னிக்காத அல்லது ஏற்காத தாய் தந்தை உண்டோ? நீ என்னை ஏற்க வேண்டும் என பாசக்கயிற்றால் கட்டிவிட நினைப்பதும், அதே இறைவனின் அருளை அடையவே"ஆகும்.

இரு தலைக் கொள்ளி எறும்பு போல் ஆகிவிட்டேன். எறும்புகள் கடித்துக் குதறும் புழுப்போல ஆகிவிட்டேன் என தன் நிலையைக் கூறி இறை இரக்கத்தைப் பெற முயற்சிக்கின்றார். இவ்வாறு தன் நிலைகளைக் கூறிப் புலம்புவது தன்னை விட்டுப் பிரிந்த இறைவனை அருகணைத்து தன் நெருக்கடியில் இருந்து தப்ப எடுக்கும் எத்தனிப்புக்களாகவே இருக்கின்றன.

2. **உவமை அணிகளை அதிகம் கையாள்வது.**

உவமை அணிகளை அதிகம் கையாள்வது தன் நிலையின் இக்கட்டுத் தன்மையின் கனதியை தெரியப்படுத்துவதற்கும், அதன் வாயிலாக இறை அருளைப் பெறுவதற்கு "விளக்கின் வெப்பம் தெரியாமல் விட்டில் பூச்சி விளக்கில் விழுவது போல் மாதர் இன்பத்தின் தீமை தெரியாது விழுந்து விட்டேன் என்பதை "தீங்கு விட்டில் சின்மொழியாரில் பன்னாள் விழுகின்ற என்னை விட்டுறுதி..." என விளக்குவதும், ஆற்றங்கரையில் வளரும் மரம் வெள்ளம் வரும் காலத்தில் அந்த ஆற்றிலேயே அழிவது போல் நானும் பெண் இன்பத்தில் அமிழ்ந்து, மகிழ்ந்து இன்று அழிந்துவிட்டேன் என்றும் கூறி, அறியாமல் பிழை செய்து விட்டேன். பெரியோர் நாயின் குறைகளைப் பொறுப்பது போல் என் குறைகளைப் பொறுத்து விடமாட்டாயா? என்பதை "கார் கூறு கன்னியர் ஐம்புல ஆற்றங்கரை மரமாய்..." நயமாக கூறுவதுடன் அறியாமல் செய்த தவறு என தவறை நியாயப்படுத்தி இறைவன் பக்கம் செல்ல நினைக்கிறார்.

நெருப்பால் விறகுக் கட்டைகள் அழிந்து போவதுபோல் என்னை ஆட்கொண்டு வினைகளை அழிக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டி, மனித இயல்பால் தவறிவிட்டேன் தெய்வ இயல்பால் மன்னித்துவிடு என நாசூக்காகக் கூறும் விதம் இறைவனைச் சேர்க்க கையாண்ட உத்தியாகக் காட்டி நிற்கின்றது.

கடல் நீர் பெரிதென்றாலும் நாய் நக்கியே குடிக்க வேண்டும் என்றும் கரைபுரண்டோடும் ஆற்றின் நடுவில் ஒருவர் தாகத்தால் தவிப்பது போலவும், யானை செல்லும் போது புல் எவ்வாறு மடிகின்றதோ அதேபோல ஐம்புல ஆசைகளாலும் நான் மடிந்து விடடேன் என்பதும் நீரில் இருந்து நீங்கிய மீன் போல் என்னிலை உள்ளதாகவும் இருதலைக்கொள்ளி எறும்புபோல் ஆகிவிட்டது என் நிலை எனவும், எறும்புகள் கடித்து துடிக்கும் புழுப்போல் மாபாதகங்களில் சிக்கி நான் தவிக்கின்றேன் எனவும், உவமை அணிகளை அடுக்கடுக்காகக் கூறி தன் இயலாத நிலையையும், பரிதாப நிலையையும் இறைவன் முன் வைத்து துன்பத்திற்கு நிவாரணம் தேடி முனைகின்றார் மாணிக்கவாசகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. இறைவனைப் புகழ்ந்து பாடுதல்.

"பாவிகளையும் மீட்க வல்லவன் நீ. கருணைக்கு எல்லையில்லைதவன். நீ சேர்ந்தவைகளையும் காக்க வல்லவன் நீ. விழுகின்றவர்களை தூக்கும் சிந்தையுள்ளவன் நீ. வெறுத்தொருவரையும் ஒதுக்கிவிடாத நல்லவன் நீ. எவருக்கும் நிகராக இறைவன் நீ என்றெல்லாம் இறைவனை புகழ்ந்து கொண்டாடி அவர் பெருமை கூறி, தவறிழைத்த தன்னையும் கடைக்கண் பார்க்கும்படி கையேந்தி நிற்பதன் மூலம் இறைவன் அருளைப் பெற்று தன் துன்பத்தில் இருந்து கரையேற முயல்கின்றார்.

## 4. வினா எழுப்புதலும் நியாயப்படுத்தலும்

ஒவ்வொரு பாடலிலும் என்னைக் கைவிட்டு விடுவாயோ? கைநெகிழ்ந்து விடுவாயோ? என வினா எழுப்புவதன் மூலம் இறைவனின் இரக்கத்தைப் பெற முயல்வது தெரிகின்றது. அதுமட்டுமன்றி நீ ஆண்டவன், நான் அடிமை, நான் மனிதன், மனிதன் தவறு விட்டால் மன்னிப்பது தெய்வ நியதி என நியாயப்படுத்தி உரிமையோடு அடம்பிடித்து அவனை அழைத்து நிற்பதைக் காணலாம்.

இறைவன் அடியவர்களை ஆட்கொண்டபோது அவர்களது குற்றங்களை கண்டு கொள்ளவில்லை. ஆதலால் என் குற்றங்களையும் பார்க்காது, என்னையும் ஆட்கொண்டு விடு. தான் ஆட்கொண்ட அடியார்களை இறைவன் தொடர்ந்தும் தன் கருணையால் தாங்கிக் கொள்ள வேண்டும். புறத்தே திரிந்த என்னை அந்தக் காரணத்தினால் ஆட்கொண்டாய். காரணம் எதுவுமில்லாமல் ஆட்கொண்டது போல் இப்பொழுதும் எந்தக் காரணத்தையும் கருதாது ஆட்கொண்டு விடு. ஆட்கொள்ளப்பட்டவர்களது சிறு குற்றத்தை கருதி அவர்களை நீக்குபவன் அல்ல இறைவன். உன்னால் ஆட்கொள்ளப்பட்டு உன் புகலிடமாய் உள்ளேன். என்னை நீ கைவிடக்கூடாது. இவ்வாறெல்லாம் எடுத்துக்கூறி தன் மனித பலவீன நிலையையும் இறைவன் கொள்ளவேண்டிய தெய்வீக நிலைகளையும் வெளிப்படுத்தி உரிமையோடு இறைவனை தன்னை ஆட்கொள்ளுமாறு மாணிக்கவாசகர் வைக்கும் கோரிக்கைகள் மறைமுகமாக இறைவனைப் பற்றிப் பிடித்து, தன்துன்பத்தில் இருந்து விடுபட முயல்வதையே தெளிவாக எடுத்துக் காட்டி நிற்கின்றது.

எனவே நீத்தல் விண்ணப்பத்தில் இடம் பெறும் ஐம்பது பாடல்களிலும் தன்னை விட்டு நீங்கிச் சென்ற இறைவனிடம் தன்னை நீக்கிவிடாதபடி கோரிக்கை விடுத்து, இருதலைக்கொள்ளி எறும்புபோல் ஆகிவிட்ட தன்னிலையை எடுத்துக் காட்டி, ஒரு புறம் உலகியலும் மறுபுறம் இறைபற்றும் அழைக்க சாதாரண மனிதனால் முடிவெடுக்க முடியாது போக இறைவனைப் பற்றிப் பிடித்து காமத்தையும் காரிகையார் வாழ்வையும் கடந்து சிற்றின்ப நாட்டத்தை துறந்து, வீடுபேறு அடைய முயற்சிக்கும் மாணிக்கவாசகரது செயலினை நோக்கினால் நெருக்கடிக்குள்ளாகும் அவர் கடவுளைப் பாடுவதன் மூலம் தன் துயரில் இருந்து கடந்து செல்ல முயற்சிப்பதை தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சக்தி பதிப்பகம், மீசாலை – 0773160464

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org